
ஒக். 31 - நவ.06, 2004
Oct. 31 - Nov. 06, 2004
16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்

31/10/2004



# அடுத்தது யார்?




## ஜனாதிபதி விரித்த வலையில் புலிகள் சிக்குவரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக ஆளுநராக தி.மு.க. அனுதாபி

# ஜெயலலிதா கலக்கம்

மத்திய அரசில் காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. முக்கிய பங்காளி என்பதால் தி.மு.க.வின் பல கோரிக்கைகளுக்கு சோனியாகாந்தி வளைந்து கொடுத்து வருகிறார்.

கருணாநிதி - சோனியா உறவும் மிக இறுக்கமாக உள்ளது. இதனால் தமிழகத்தின் ஆளுநராகத் தனது நெடுநாளைய நண்பர் ஒருவரை நியமிக்கும்படி மத்திய அரசைக் கருணாநிதி கோரிஉள்ளார். தமிழக ஆளுநராகத் தற்போது உள்ள பி.எஸ்.ராமமோகன்ராவ் பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டவர். ஜெயல லிதா முதல்வரான புதிதில் கருணாநிதியைக் கைது செய்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறினார் என அப்போதைய ஆளுநர் பாத்திமா பீவி பதவி நீக்கப்பட்டு ராமமோகன்ராவ் நியமிக்கப்பட்டார்.



சோனியா

அப்போது பி.ஜே.பி. ஜெயலலிதாவின் எதிரி; இப்போது நெருங்கிய நண்பர். இதனால் ராமமோகன்ராவை தி.மு.க.வுக்குப் பிடிக்கவில்லை. தவிரவும் அ.தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என தி.மு.க. தொண்டர்கள் வெகுவாக விரும்புகின்றனர். அகற்றிவிட்டுத் தேர்தல் நடத்தினால் சுலபமாக வெல்லலாம் என்பதும் தி.மு.க.வுக்குத் தெரியும்.

ஆனால், முன்னைய காலங்கள் போலன்றி

**பக்கத்து வீடு**

மாநில ஆட்சிஒன்றை அவ்வளவு இலகுவாக மத்திய அரசால் கலைத்துவிட முடியாது. 1992 க்குப் பிறகு பெரிய மாநிலம் ஒன்றின் ஆட்சி 356 ஆவது சட்டத்தின் மூலம் இன்னும் கலைக்கப்படவில்லை என்பது வரலாறு.

இப்படி இருக்க, அ.தி.மு.க. அரசைக் கலைப்பது எளிதல்ல. எனினும், மத்திய அரசு தி.மு.க.வின் ஆதரவின்றி இருக்க முடியாது. தவிர, ஜெயலலிதாமீது சோனியா காந்தி கொஞ்சமும் அனுதாபம் கொண்டவராக இல்லை. அதாவது, அ.தி.மு.க. ஆட்சியைக் கலைக்க காங்கிரஸ் இந்த நிமிடமும் தயாராகவே உள்ளது.

ஆனால், பிரச்சினை அதுவல்ல. சட்டச்சிக்கல், ஆளுநர், ஜனாதிபதி கலாம் எனப் பலர் குறுக்கே உள்ளனர். மாநில அரசைக் கலைப்பதற்கு ஆளுநரின் பரிந்துரை இருப்பது நல்லது. எனினும், 1991 இல் தி.மு.க. அரசைக் காங்கிரஸும், சந்திரசேகரும் கலைத்தபோது தமிழக ஆளுநர் பர்னாலா அதைக் கடுமையாக எதிர்த்தார். ஆனாலும், ஆட்சி கலைக்கப்பட்டது. இதை எதிர்த்து பர்னாலா தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

தி.மு.க.வைப் பொறுத்தவரை எந்த பர்னாலா ஆளுநராக 1991 இல் இருந்த போது ஜெயலலிதா தி.மு.க. அரசைப் பதவி நீக்குவித்தாரோ, அதே பர்னாலாவை தமிழக ஆளுநராக்கி அவரது பரிந்துரை கொண்டு அ.தி.மு.க. அரசைக் கலைப்பதே அதன் நோக்கம் என்று தெரிகிறது.

பர்னாலா இப்போது ஆந்திர ஆளுநராக உள்ளார். வெகு விரைவில் இந்தியாவின் பல மாநிலங்களில் ஆளுநர்கள் இடம் மாற்றம் செய்யப்பட உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆளுநர்கள் அரசியல் சாசனப்படி நடுநிலையாளர்ளாக இருக்க வேண்டும். ஆனால், மத்தியில் ஆளும் கட்சி தனது அரசியல் வாதிகளுக்குப் பதவிதர ஆளுநர் இருக்கையைப் பயன்படுத்துவதே வழமை.

ஏப்ரலில் பதவிக்கு வந்த காங்கிரஸ் அரசு, பி.ஜே.பி.யில் நியமிக்கப்பட்ட பல ஆளுநர்களைப் பதவிநீக்கித் தனது ஆதரவாளர்களை நியமித்தது. இதற்கு பி.ஜே.பி. கடும் எதிர்ப்புக் காட்டியது. இப்போது பதவிநீக்காமல் இடமாற்றங்களை மட்டும் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கியமானது தமிழக ஆளுநரின் இடமாற்றம்.

ராமமோகன்ராவுக்குப் பதிலாக பர்னாலா நியமிக்கப்படுவார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது. இத்தகவல் ஜெயலலிதாவையும் எட்டியுள்ளது.

பர்னாலா - அ.தி.மு.க. பகை 13 வருடங்களுக்கு முற்பட்டது. எனினும், தி.மு.க.வுடன் பர்னாலா கொண்டுள்ள நட்பு ஜெயலலிதாவுக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தனது அரசைப் பதவி நீக்கும் முயற்சியில் முதற்கட்டமே பர்னாலா நியமனம் என ஜெயலலிதா கலங்கத் தொடங்கியுள்ளார். காங்கிரஸுக்கு வலைவீச அவர் மேற்கொண்ட முயற்சியும் கைகூடவில்லை. வேறு வழியின்றி எதிர்ப்பு முயற்சிகளைத் தொடங்கியுள்ளார்.

தமிழக அரசின் கருத்தைக் கேட்காமல் ஆளுநரை மாற்றக்கூடாது என்று கூறி உச்ச நீதிமன்றில் அ.தி.மு.க. இந்தவாரம் வழக்கு ஒன்றைத் தொடுத்தது. இதை விசாரித்த நீதிமன்றம் தமிழக ஆளுநருக்கு இடமாற்ற உத்தரவே இன்னும் உத்தியோகபூர்வமாக வரவில்லையே; அதற்கு முன் எப்படி நடவடிக்கை எடுப்பது என்று கைவிரித்துவிட்டது. தமிழக ஆளுநரை நீக்கச் சதி செய்வதாக அ.தி.மு.க. குற்றஞ் சாட்டி இருக்கிறது. பர்னாலா ஆளுநரானால் ஜெயலலிதா முரண்டுபிடிப்பாரா அல்லது பணிந்து போவாரா என்ற விடயம் சுவாரஸ்யமாக இருக்கப் போகிறது. ஏனெனில், 1991-1996 காலப்பகுதியில் முதல்வராக இருந்த போது காங்கிரஸுடன் முட்டி மோதினார். அப்போது ஆளுநர் சென்னா ரெட்டியுடன் முதல்வர் ஜெயலலிதா பாராட்டிய பகை தமிழக அரசு இயந்திரம் ஸ்தம்பிக்கும் அளவுக்குச் சென்றது.



கருணாநிதி



ஜெயலலிதா

ஆனால், இப்போது நிலைமை வேறு. ஆளுநருடன் முட்டி மோதினால் ஆட்சி கலைக்கப்படுவது நிச்சயம். தவிர, அப்போது இருந்த நரசிம்மராவ் அல்ல இப்போதைய காங்கிரஸ் தலைவர் சோனியா. ஜெயலலிதா மீது எந்த இரக்கமும் காட்ட அவர் தயாரில்லை. ஆக ஜெயலலிதா பணிந்து போவார் என்றே தெரிகிறது.

"கெஞ்சினால் மிஞ்சுதல்; மிஞ்சினால் கெஞ்சுதல்" என்பது ஜெயலலிதாவுக்கு மிகவும் பிடித்த கொள்கைகளில் ஒன்று. லோக்சபாத் தேர்தல் தோல்வியால் நிலைமை அவர் கையை மிஞ்சிவிட்டது. அதை அவர் உணர்ந்தே உள்ளதால் இனி மேல் கெஞ்சும் தந்தி ரத்தை தான் அவர் உபயோகிக்க முடியும்.

-எஸ். சுரேந்திரஜித்-

# நம்பிக்கையூட்டிய எம்.பிக்கள் விஜயம்

வரண்டு போயிருந்த நிலப்பகுதிக்கு செழிப்பைத் தந்த நீர் வீழ்ச்சி போல, வேதனையுடனும் [illegible]தியுடனும் வாழ்ந்த மக்களுக்கு புத்[illegible]ர்வையும், நம்பிக்கையையும் [illegible]யதாக அமைந்தது தமிழ்த்தேசி[illegible]ட்டமைப்பு எம்.பி.களின் திருமலை விஜயம்.

பல்வேறு நோக்கின் அடிப்படையில் வடக்கு – கிழக்கில் [illegible] சிறுபான்மையோர் பகுதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 தமிழ் எம்.பிகளும் செல்ல வேண்டும் என்ற திட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவும், வலுவூட்டுவதாகவும் அமைந்து காணப்படுகிறது.

மேற்படி திட்டத்தின் முதற்கட்டம். கடந்த 16 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்துக்கானவிஜயத்தைமேற்கொண்டதன் மூலம் ஆரம்பமானது. மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் காலத்தில் வாக்குச் சேகரிக்கும் நோக்குடன் மட்டும் மக்களை நாடிச் சென்ற காலம் மலையேறிவிட்டது. போராட்டத்தின் வடிவமும் அதன் பின்புலமும், தமிழ்த்தரப்பின் சக்தியும் இந்த மாற்றத்துக்கு வழி வகுத்திருக்கவேண்டும். இது இன்றைய காலகட்டத்தின் தேவையும் கூட.

எம்.பிகளின் வருகைக்கான ஏற்பாடுகளையும், ஒழுங்குகளையும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

திருகோணமலை விஜயத்தில் பல்வேறு நோக்கங்கள் பொதிந்திருந்தன.

பொதுமக்கள் சந்திப்பு, முஸ்லிம் தரப்பினருடன் சந்திப்பு, கஷ்டப்பிரதேசங்களுக்கு விஜயம், குறை நிறைகளைக் கேட்டறிதல், சில தீர்வுகளை முன்வைத்தல், இன்றைய அரசியல் நிலைபற்றி விளக்கமளித்தல், சில நடைமுறைகள் பற்றித் தெளிவுபடுத்தல் என்பவற்றின் அடிப்படையிலே பயணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கடந்த 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பயணம் திருமலை சில்வர் ஸ்டார் ஹோட்டலில் சங்கமமானது. தவிர்க்க முடியாத பல்வேறு காரணத்தினால் 5 எம்.பி.கள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை.

இரா.சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம், சிவாஜிலிங்கம், க.பத்மநாதன், ஜெயானந்த மூர்த்தி, அரிய நேத்திரன், சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், கனகரெத்தினம், கஜேந்திரன், சிவநேசன், தங்கேஸ்வரி, மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், மா.க.ஈழவேந்தன், வினோ தகனகசபை ஆகிய 17 எம்.பிக்களுமே அன்றைய தினம் வருகை தந்திருந்தனர்.

இவர்களுடன் முஸ்லிம் பிரதிநிதிகள், தமிழ் பிரமுகர்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் முஸ்லிம்களின் நீண்ட கால உறவு பேணப்பட வேண்டும், அவர்களுக்குள்ள உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என இன ஐக்கியத்தை வலுப்படுத்தும் வகையில் இரா.சம்பந்தன் ஆற்றிய உரை வரவேற்கப்பட்டது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் முஸ்லிம் தரப்பு பிரதி நிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். பழமை பேணப்பட வேண்டும் என்றும், உச்சுத்தத்துடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு நல்லுறவு பேணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

போராட்டம், சமபலம், முஸ்லிம்களின் மீள்வருகை, அவர்களுக்கான உரிமைகள் என்பவற்றுடன் அரச தரப்பு ஏமாற்று வித்தைகள், இடைக்கால நிர்வாகத் துறைக்கான முட்டுக்கட்டை என்பன பற்றி விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன் பேசினார்.

இவ்வாறு சகல தரப்பினரும் ஐக்கியத்தையும், விடியலையும் வலியுறுத்திப் பேசியது புத்துணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டியது. அன்று மாலை நகராண்மை மன்றக் கட்டடத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

## 2 குழுக்களாக விஜயம்

17 ஆம் திகதி மக்கள் பிரதிநிதிகள் இரு குழுக்களாக பிரிந்து மக்களை நாடிச் சென்றனர். ஒரு அணி திருமலையில் ஒரு பகுதியோடு புல்மோட்டை, குச்சவெளி, கும்புறுப்பிட்டி என விஜயம் மேற்கொண்டது. மறு அணி திருமலையின் மறுபகுதிக்கும் திரியாய், புடவைக்கட்டு, குச்சவெளி, கும்புறுப்பிட்டி எனச் சென்றது. கும்புறுப்பிட்டியில் சந்தித்த இரு அணியினரும் ஒன்றாக நிலாவெளி, சாம்பல் தீவு, சல்லி, திருகோணமலை எனப்பயணத்தைத் தொடர்ந்தனர்.

மறுநாள் 18 ஆம் திகதி மீண்டும் திருமலையில் இருந்து இரண்டு அணிகள் கிளம்பின.

கிண்ணியா, ஆலங்கேணி, ஈச்சந்தீவு, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கந்தளாய் என்று ஒரு அணியும் வெருகல், ஈச்சிலம்பற்று, பூநகர், தங்கநகர், கிளிவெட்டி, கங்குவேலி என்று மறு அணியும் சென்றன.

மல்லிகைத்தீவில் சந்தித்த இரு அணிகளும் ஒன்றாகிப் பட்டித்திடல், இருதயபுரம், மூதூர், மூதூர் கிழக்கு என விஜயம் செய்தனர். எம்.பிகளுடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் சென்றிருந்தனர். முஸ்லிம் தரப்பினரும் இவர்களைச் சந்தித்துக் கொண்டனர்.

மீள்குடியமர்ந்த மக்களுடனான சந்திப்பு, அவர்களின் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல் என்பவையும் இடம் பெற்றன.

மக்களிடையே காணப்பட்ட அச்ச உணர்வு நீங்கிப் புத்துணர்வும், நம்பிக்கையும் ஏற்பட்டது இந்த விஜயத்தின் சிறப்பம்சமே.

எஸ்.எஸ்.ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் ஜம்பம் பலிக்குமா?



நாட்டிலும், நாடாளுமன்றத்திலும், ஏன் அமைச்சரவையிலும்கூட பலரின் தலை எழுத்துக்களை மாற்றி அமைத்து சாதனை படைத்த ஜனாதிபதி இப்பொழுது அரசமைப்பையே மாற்றி அமைக்க முயற்சிக்கிறார்.

இவர் தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகார பலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அமைச்சர்களை மாற்றலாம். அமைச்சுப் பொறுப்புகளில் இருந்து தூக்கி எறியலாம். இந்த நாடாளுமன்றத்தையும் கலைக்கலாம். அதனை தற்போதைய அரசமைப்பு உறுதிப்படுத்துகிறது.

இவற்றை எல்லாம் சர்வசாதாரணமாகச் செய்து தனது சர்வாதிகார பலத்தைப்பல முறை பரீட்சித்துப் பார்த்து ருசிகண்டவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இப்படி அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சந்திரிகாவுக்கு நிகர் எவருமே இல்லை.

இப்படியான அதிரடி நடவடிக்கைகளை மிகவும் துணிச்சலாக மேற்கொண்டு இரும்புச் சீமாட்டி என்று வர்ணிக்கப்பட்டவர் பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் மார்க்கிரட் தட்சர்.

அதேபோன்று இங்கும் லேடி ஹிட்லர் என எதிர்க்கட்சியினரால் மகுடம் சூட்டப்பட்டிருப்பவர் எமது ஜனாதிபதி.

ஆட்டைக்கடித்து. மாட்டைக்கடித்து கடைசியில் மனிதனைக் கடித்தது போல், ஜனாதிபதி அரசமைப்பிலும் மூக்கைநுழைக்க ஆரம்பித்து விட்டார். இதுதான் அண்மையில் வெளியான ஒரு அதிர்ச்சித் தகவலாக உலவுகின்றது.

இலங்கையின் அரசமைப்பின்படி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் ஒரு நபர் தொடர்ச்சியாக இரண்டு முறை மட்டுமே போட்டியிட்டு அப்பதவியை வகிக்க முடியும்.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி 1994 ஆம் ஆண்டில் முதல் தடவையாகவும் 1999 ஆம் ஆண்டு இறுதியில் இரண்டாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால், 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா குமாரதுங்க 2000 ஆம் ஆண்டின் இறுதியிலேயே மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி இருக்க வேண்டும். ஆனால், சந்திரிகா அம்மையாரோ தனது கட்சிக்கும் தனக்கும் செல்வாக்கு இருக்கும் போதே ஒரு வருடம் முன்னதாகவே 1999 ஆம் ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி வெற்றி பெற்றார்.

இதிலும் அவர் கையாண்ட தந்திரம் அவருடைய அரசியல் சாணக்கியத்தை வெளிப்படுத்தியது.

அதாவது இவருடைய கட்சி அதிகாரத்தில் இருந்ததால் அரச ஊடகங்கள் முதல் அனைத்து அமைச்சுகளினதும், அரச நிறுவனங்களினதும் நிர்வாக இயந்திரங்களைத் தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒட்டுமொத்தமாகப் பயன்படுத்தியே வெற்றி பெற்றார் என்பது அரசியல் அவதானிகளின் குற்றச்சாட்டாக இருந்தது.

எந்த வகையிலாவது ஆட்சியைக் கைப்பற்றிய ஜனாதிபதி அதே சூட்டோடு இரண்டாவது முறையாகவும் சம்பிரதாய பூர்வமாகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்துக்கு முன்பு ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும். அப்படித்தான் இலங்கையின் அரசமைப்பும் கூறுகின்றது.

ஆனால், ஜனாதிபதியோ நாட்டு மக்களின் கண்களில் மண்ணைத் தூவிவிடப் பார்க்கின்றார்.

நாட்டின் அதி உயர் பதவியில் இருப்பவர், முதல் பிரஜையாக மதிக்கப்படுபவர் எவருமே இரகசியமான முறையில் பதவி ஏற்பு வைபவங்களை நடத்துவதில்லை. உலகில் எந்த ஒரு நாட்டிலுமே நாட்டின் தலைவர்கள் மிகவும் இரகசியமாகப் பதவிப் பிரமாணம் செய்வதில்லை. அதற்கான அவசியமும் இல்லை.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னும் ஒரு வருட காலத்திற்கு அதிகார பலத்தைத் தன் கைகளில் வைத்துக் கொள்வதற்காக புதுக்கதை ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளார்.

அதாவது, தனது அமைச்சரவை உறுப்பினர்களுக்கோ, உறவினர்களுக்கோ தெரியாமல் மட்டுமல்ல எவருக்குமே தெரியாத வகையில் மிகவும் இரகசியமான முறையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதாகக் கதை விடுகின்றார்.

அப்படி இரகசியமான முறையில் பதவிப் பிரமாணம் செய்ய அரசமைப்பிலும் இடமில்லை.

உண்மை நிலை என்னவென்றால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆட்சி அதிகாரத்தை விட்டுச் செல்ல மனமே இல்லை.

நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது ஆட்சியைக் கைப்பற்றிவிடலாம், நாடாளுமன்ற அதிகாரத்தின் மூலம் அரசமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துவிடலாம் என ஜனாதிபதி கனவு கண்டார்.

ஆனால், அமைந்ததோ தொங்கு நாடாளுமன்றம். ஜனாதிபதியின் அதிகார ஆட்சிக்கும் இன்னும் ஒரு வருடம்மட்டுமே ஆயுள் என்பதும் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.

இதனால் ஜனாதிபதி மிகவும் டென்சனாகி உள்ளாராம். இவருடைய பதவிக்காலம் நீடிக்கப்படுவதை விட, தனக்குப்பின் எவருமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வரக்கூடாது என்பதுதான் இவருடைய நோக்கமாம்.

ஜனாதிபதியின் குடும்பம் ஏற்கனவேசூடுகண்டது. தாயார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதை ஜனாதிபதியினால் மறக்க முடியவில்லை.

இப்படியானநிலையில் தனக்குப்பின் ஒருவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வந்துவிட்டால் தனது கண்களில்விரலைவிட்டு ஆட்டிவிடுவாரே என்ற பீதி ஏற்படுவது இயற்கைதான்.

ஆனாலும், கூடபிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதியின் இத் திட்டத்தை அடியோடு எதிர்க்கின்றது. அரசமைப்பின் படி ஜனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நடத்தப்பட வேண்டும்.

அரசமைப்பின் படி 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டு.

தேர்தல் ஆணையாளரின் கடமைகளில் ஜனாதிபதி தலையிடமுடியாது.

எதிர்க்கட்சியினர் சட்டத்தைக் காட்டுகின்றனர். ஜனாதிபதியோ சண்டித்தனம் காட்டுகிறார்.

சட்டம் வெற்றியடையுமா? ஜனாதிபதியின் ஜம்பம் பலிக்குமா?

(இரா. புத்திரசிகாமணி)


## இலவச ஆங்கில பாடநெறிகள் தபால் மூலம்

தபால் மூலம் ஆங்கில பாடநெறியைத் தொடருங்கள்

Dialog G.S.M. இணைப்பை வெல்லுங்கள்

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க பயிற்சி அளிக்கப்படும்

பாடநெறியைத் தொடரும் அனைவருக்கும் இவைகள் இலவசம்

* இலவச Dialog G.S.M தொடர்பு
* அழகிய கீடெக்
* 30 Day's Easy Way English புத்தகம்

என்பன இலவசமாக வழங்கப்படும்.







பாடநெறி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 4.50 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE

P.O. Box 83, Kandy. Tel: 0777 220002, 802849



## விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

இந்திய மத்திய அரசு அங்கிகாரம் பெற்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
சேலம் - 636 308, தமிழ்நாடு, இந்தியா.

தாய்லந்து அரசு அங்கிகாரம் பெற்ற பாங்கொக், தாய்லாந்து Rangsit பல்கலைக்கழகம் இணைந்து நடாத்தும் இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு

**International Off-Shore Medical Program - MBBS**

(முதலாவது கற்கைநெறி அனுமதி அறிவிப்பு - (2004 - 2005)

**இக்கற்கைநெறி**

- முதல் இரண்டு ஆண்டு மருத்துவக்கற்கை நெறி, மற்றும் பயிற்சி வகுப்புக்கள் தாய்லாந்து Rangsit பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடாத்தும்.
- அடுத்து 2 -1/2 ஆண்டு மருத்துவ கற்கை நெறியும் பயிற்சியும், ஓராண்டு உள்ளகப் பயிற்சிநெறியும் இந்தியா, தமிழ்நாடு விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறும்.
- மேற்படி கற்கைநெறிகள் யாவும் இந்திய மருத்துவக் கழகத்தின் (Medical Council of India) ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப நடாத்தப்படுகின்றது.
- விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர்நிலைப் பல்கலைக்கழகம் - Deemed University) M.B.B.S பட்டத்தினை வழங்கும்.

**தகைமைகள்**

- இலங்கை அல்லது வெளிநாட்டு மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் (அல்லது அதற்கு சமமானது)உயிரியல், இரசாயணவியல், பௌதீகம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர் - விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

சேலத்தில்
NH-47, Sankari Main Road,
Ariyanoor, Salem 636 308,
☎ 91 427 2477316, 317,833
Fax: 91 427 2477903
E-mail: vmrf@vinayakamissions.com

சென்னையில்
160 (208), Poonamalee High Road,
Kilpauk, Chennai : 600 010
☎ 91 44 2825 5060, 2811, 3776
Fax : 91 44 28241708
Email: admissions@vinayakamissions.com

www.vinayakamission.com & www.isu.ac.th

இலங்கை ஒருங்கிணைப்பாளர்

nn educonsult
181/1 W.A சில்வா மாவத்தை, கொழும்பு 06.
☎ 011 555 88 33, Fax : 011 555 88 44, Email: nnconsult@sltnet.lk


Piccaso





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரத்தால் வந்த உறவு



கரும்புள்ளியான்
விக்கி
பாண்டியன் குளம்

கவலைகளால் கனத்த இதயத்தை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வீதி வழியே நடந்து கொண்டிருந்தான் அவன்.

கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்த அவன் கண்களில் கண்ணீர் வரவில்லை. வேதனைக் கண்ணீர் வெளியேறாததால் உள்ளுக்குள்ளேயே உறைந்து இதயத்தில் கடினமானதொரு கட்டியாகி விட்டது போலும்.

''அம்மா... அம்மா..''என்று மெல்ல உதடுகளிலிருந்து வரும் ஒலி ஆறாதிருக்கும் ரணத்தை மெல்ல அரிவாள் கொண்டு கீறிவிடுகின்றது. சோகம் அவன் தேசத்தில் ஒரு சுற்றுலா நடத்தியது. மோசடி அவனை முற்றுகையிட்டது.

நாட்கணக்காக வாரப்படாத தலைமுடி கலைந்து காணப்பட, முகச்சவரம் செய்யாதிருந்த முகம் அவன் சோக மனதைக் தெள்ளெனக் காட்டியது.

விடியல் அவன் முன்னிருந்த போதும் அவன் வாழ்வு, எதிர்காலம் இரண்டும் அஸ்தமித்துவிட இருட்டில் கால்கள் இடறி விழா திருக்கமெல்ல மரநிழலின் கீழ் அமர்ந்து சாய்கின்றான்.

சற்று அவன் கண்மூடி சாய்ந்திருந்தான் மரவேர்களில். எத்தனையோ கனவுகள், என்னென்னமோ நினைவுகள் அவனை ஆக்கிரமித்து நெஞ்சையே சுட்டெரித்து நெருப்பு விளக்கேற்றின.

ஆருயிர் அன்னையை இழந்து, கற்பதற்கும் வழியின்றி, உயிர்க் காதலி மடி இல்லையென்றாகி கோடைக்கானலிலே தினம் நடைபயிலுகின்ற அவனை தட்டிக்கொடுக்க தென்றலும் மறுக்கின்றது.

சின்னச் சின்னதாய் அவன் ஞாபகங்களைக் செதுக்கும் சிற்றுளி அவன் இதயப் பாறையினை இரண்டாய் உடைக்கின்றது.

அவனுடைய எண்ணப் பறவைகள் கட்டுக்கடங்காமல் பலபடி முன்னோக்கிப் பறக்க இதயம் இமை திறந்து விழித்துக்கொண்டது.

*******

அன்றும் வழமைபோல் பல்கலைக்கழகம் மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. மாணவர்கள் தமக்கு இஷ்டமான இடங்களில் நின்ற இஷ்டமானவர்களுடன் பேசிக் கலகலப்பாக இருந்தார்கள்.

அவ்வாறே நான்கு பேர் கொண்ட ஒரு நண்பர் கூட்டம். அதில் கம்பீரமாக அமர்ந்திருந்தவன் தான் அருண். வட்டமான முகம், எடுப்பான தோற்றம், எப்போதும் போல் ரீ–சேட் தான் அணிந்திருந்தான்.

''டேய் அங்க பாற்றா.... அப்சரஸ் நடந்து வாறது மாதிரி இருக்கடா... யார்ரா அவள்...?'' நண்பன் ஒருவன் ஆவலாய் கேட்க, அனைவர் முகங்களும் அவள் திசை நோக்கித் திரும்பின.

''அவளா திமிர் பிடிச்சவள்... பேரு திவ்யா. அவளும் மெடிக்கல் ஸ்ருடண்ட் தண்டா.. யூனியர்''

''அவள் அப்பன் பெரிய கோடீஸ்வரன். அமெரிக்கா, யூகே என்று 24 மணித்தியாலமும் வானத்தில் பறந்திட்டு இருப்பாண்டா.., அவனுக்கு இவ ஒரே பொண்ணு...''

என்று நண்பர்கள் அவளைப் பற்றி புராணம் பாடி முடித்தனர். அருணின் கண்களும் அவளை ஒருமுறை ஏறிட்டு நோக்கின.

'திவ்யா உண்மையிலேயே ஒரு அழகி தான் அதற்காக யாரையும் மதிக்காமல் திமிரா நடந்தா எப்படி?, அருணின் மனதில் ஒரு குரங்கு பாய்ந்து வந்து குந்திக்கொண்டது.

''டேய் அருண்... அவளுக்கு நாங்க யார்ணு காட்டனும்... அதற்கு நீதான் ஏதாவது பிளான் போடனும்.''

அருணின் மனதில் குந்திக்கொண்ட குரங்கு இப்போ எழுந்து ஆடத் தொடங்கி விட்டது.

''டேய் எல்லோரும் எனக்குப் பின்னாலேயே வாங்கடா அவளுக்கு நல்ல பாடம் கற்பிப்போம்.....'' என்று அருண் கூறி எழுந்து செல்ல எல்லோரும் அவன் பின்னாலே அணிவகுத்துச் சென்றனர்.

''ஹலோ நீங்கதானே திவ்யா உங்க அப்பா உங்களுக்கா வெயிட் பண்ணுராரு''

என்று கூறியது தான் தாமதம் திவ்யா துள்ளிக் குதித்தாள். அவளால சந்தோசம் தாங்கமுடியவில்லை.

''பிறன்ட்ஸ் எங்கப்பா அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிறார். எல்லோகும் என்னோட வாங்க....'' என்றவள் முன்னே முயலெனப் பாய ஒரு பட்டாளம் அவள் பின்னாலேயே சென்றது.

சென்றவள் விசிட்டேர்ஸ்ரூம் கதவை ஆவலுடன் திறக்க அங்கு அவளது அப்பாவுக்கு பதில் ஆச்சரியம் காத்திருந்தது.

அங்கிருந்த ஒரு குட்டை நாய் திவ்யாவின் காலுக்கிடையால் ஓடிச்சென்றது. அதில் 'திவ்யாவின் அப்பா' என்று எழுதிய அட்டை தொங்கிக் கொண்டிருந்தது.

திவ்யாவின் இதயம் எரிமலையாய் வெடித்தது. ஏமாற்றமும், ஆத்திரமும் சேர்ந்து அவள் கண்களில் தீப்பொறியாய் பறந்தது.

அவள் பின்னே மாணவர்கள் பட்டாளமாய் திரண்டு பெரிதாக கூக்குரலிட்டுச் சிரித்தார்கள். ''இதுதான் உன் அப்பாவா'' என்று யாரோ கூட்டத்திலிருந்து கூற சத்தம், கேலிகள் பலமடங்காகின. அவளால் அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சட்டெனத் திரும்பி கூட்டத்தை ஒருமுறை அனல் தெறிக்கும் கண்களால் நோக்க, அங்கே...

''ஏப்ரல் பூல்'' என்று அருண் கத்தவும், அவளுக்கு அப்போது தான் அன்றைய திகதி நினைவுக்கு வந்தது. எனினும் அருண் மீது கொண்ட ஆத்திரம் அழுகையாய் வெடித்து சிதற கண்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

மறுகணம் அருணை ஒருமுறை பார்வையால் சுட்டெரித்துவிட்டு அவ்விடம் விட்டு அகன்றாள்.

மறுநாள் அருணின் கண்களில் திவ்யா தென்படவே இல்லை. இவ்வாறே வாரம் ஒன்று கழிந்தது. திவ்யா கம்பஸ் வராதது அருணுக்கு என்னவோ போல் இருந்தது.

''தன்னால் தான் அவளுக்கு இக்கதி, தனது விளையாட்டு இப்படி விபரீதமாகி விட்டதே' அவனது நெஞ்சே அவனுக்கு எதிரியானது.

எப்படியும் எங்கே என்றாலும் அவளைச் சந்தித்து மன்னிப்பு கேட்டுவிடுவதென்ற தீர்மானத்துடன் அன்று வீடு சென்றான்.

மறுநாள் காலை வளாக முற்றத்தில் அருண் அவளைக் கண்டான். சந்தோசமடைந்தவனாக தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டு அவளருகே சென்றான்.

''திவ்யா... என்னை மன்னிச்சிடுங்க... அன்று... நான்.... சும்மா... ஏப்ரல் பூல் அதுதான் அப்படி'' என்ற சொற்கள் தடுமாற கூற முடியாது தவித்தான்.

''என்ன அருண் நீங்க.. ஏதோ செய்யக் கூடாததை செய்த மாதிரி இப்படி துடிக்கிறீங்க...... நான் தான் கொஞ்சம் பழைய ரைப். நான் வீட்டில ஒரே பொண்ணு. எனக்கு அப்பா மட்டும்தான் ஒரே சொந்தம். அதுதான் எனக்கு பிரன்ஸ்சோட எப்படி அணுகிறது எண்டு தெரியாது. ஏனெண்டா மற்றவர்கள் போல் என்னை அம்மா வளர்க்கல. எனக்கு அன்பு, பாசம் என்றால் என்ன என்றே தெரியாது.''

''நான் தான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும். அன்றைக்கு நீங்க பகிடியாகச் செய்ததைக் கூட நான் சீரியசாக எடுத்திட்டன்.'' அவள் கண்களில் இப்போ கண்ணீர் ஊற்றெடுத்தது.

உடனே பதறிய அருண் ''என்ன திவ்யா நீங்க... நான் ஏதோ நினைக்க இங்க இப்படி... எனக்கு உங்க கரக்ரர் ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றான்.

''உண்மையாகச் சொல்லுறீங்களா.... அப்படீண்ணா நான் என்றுசொல்லட்டா...'' என்று தயங்கினாள் திவ்யா.

''என்ன சொல்லுங்க திவ்யா...'' என்று வியப்பு மேலிட்டவனாக வினவினான் அருண்.

''அருண் என்னால என் மனசில பட்டதை சொல்லாமல் இருக்க முடியாது. நான் கொஞ்சம் ஓவரா கதைப்பன்,எதையும் உடனே கேட்டிடுவன். அருண் ஐ லவ் யூ.''

உடனே அருணின் நிலை சொல்லவே வேண்டியதில்லை. இப்படி ஒரு வார்த்தையை அவன் இதுவரை எவரிடம் இருந்தும் எதிர்பார்த்திருக்க வில்லை.

''சொரி திவ்யா, எனக்கு! லவ் பண்ற மூடே இல்ல, அத்தோட என்ற தகுதிக்கும் உங்கட....'' என்று ஏதோ கூற முற்பட்ட அருணை'

''அருண் எனக்கு உங்கட குடும்பம் பற்றி நல்லாத் தெரியும். உங்களுக்கு உங்க அம்மா தான் ஒரே சொந்தம், அவவும் படுத்த படுக்கையாக இருக்கா.. அப்பாவின்ர பென்சனிலதான் உங்க செலவு போகுது. நான் சொல்றது சரியா?'' என்று இடைமறித்தாள்.

அருணின் நிலை இப்போது தர்மசங்கடமாய் இருந்தது. அவள் தன் குடும்பம் பற்றிச் சொன்னது அவனுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. தனது வறுமைக்கும், காதலுக்கும் அவன் முடிச்சுப்போட நினைப்பதில்லை. அவை இரண்டும் ஒன்று சேரா இரு துருவங்கள் என்றே எண்ணி இருந்தான்.

அருண் எதுவும் பேச முடியாமல் அவ்விடம் விட்டு நகர்ந்தான். அவன் மனம் இப்போ அவனிடம் இல்லை.

வீடு சென்ற அருண் தனது தாயாரின் பணிவிடைகள் முடித்து படுக்கையில் விழுந்தான். அவன் முன்னே அன்றைய நிகழ்வுகள் எழுந்து நித்திரையை விரட்டியடித்தன.

அவளது பிடிவாதமான முடிவு அவன் நெஞ்சைநெகிழச்செய்தது. அவளது அழகு, பிடிவாதம், துடிதுடிப்பு, குறுகுறுப்புப் பார்வை எல்லாம் சேர்ந்து அவன் மனதில் காதலாக ஊற்றெடுத்தது பெரும் பிரவாகமாகப் பாய்ந்தோடத் தொடங்கியது. தன் நெஞ்சத்து ஊற்றை பேனா மை கொண்டு கவி வடிக்கத் தொடங்கினான், அவளிடம் சமர்ப்பிப்பதற்காக.

மறுநாள் காலை அவளிடம் தனது கடிதத்தை உடனே சேர்ப்பித்தான். கடிதம் பெற்றதுதான் தாமதம் திவ்யா மிருகமானாள்.

இருபுறமும் திரும்பி பார்த்து கூட்டம் அதிகமாக இருப்பதை உறுதிப் படுத்திக் கொண்டு கத்த ஆரம்பித்தாள்.

''டேய் உனக்கு லவ் கேக்குதா?.. என்ன துணிவில எனக்கு லவ் லெற்றர் தருவாய்.... ஏண்டா.... உனக்கு என்ர தகுதி தெரியுமா? என்னைப் பொறுத்தவரை நீ எனக்கு பிச்சைக்காரன் தாண்டா'' என்று ஒரு கணம் தயங்கி... பின் கூட்டத்தை நோக்கி...

''இவன் எனக்கு லவ்லெற்றர் தாரான்... படிச்சுப் பாருங்க'' என்று அந்த கடிதத்தை விட்டெறிந்தாள். பின் அக்கடிதத்தையும் கொண்டு துணைவேந்தர் அலுவலகம் நோக்கிச் சென்றாள்.

துணைவேந்தர் முன் சிலையென நின்றான் அருண். அவளது ஒவ்வொரு வார்த்தைகளும் நெஞ்சில் இடியென தாக்கியது. மறுகணம் அருணுக்கு ஒரு வருடம் பல்கலைக் கழகத்திலிருந்து இடைநிறுத்ததுவதற்கான கடிதம் வழங்கப்பட்டது.

அதுவரை எதுவும் பேசாது மெல்ல வெளியேறி வீதி நோக்கி சென்று கொண்டிருந்த அவனை இடைமறித்தாள் திவ்யா.

''நினைவிருக்கா... அண்டைக்கு என்னை அவமானப்படுத்தினா இல்ல.. அதற்குத் தான் இந்த நாடகம். அது மட்டுமல்ல ஒரு வருடம் நீ இங்க கால் வைக்கவே முடியாது. இப்பவாவது என்னைப் புரிஞ்சுக்க''... என்றவள் சட்டென விலகிச்சென்றாள்.

அவனால் தனது எதிர்காலம் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. எவ்வளவு இனிக்கப் பேசி இப்படி செய்து விட்டாளே என்ற ஏக்கம் அவன் நடையில் தெரிந்தது.

கால் போன போக்கில் அருண் நடந்து சென்றான்! மாலையாகி நேரம் இருட்டி விட்டிருந்தது. மெல்ல வீடு சென்ற அருண் அங்கே சிலர் கூடி இருப்பதைக் கண்டதும் என்ன ஏதோ என்று பதறியபடி ஓடிச் சென்றான்.

அங்கே சென்ற அருண் இடியில் தாக்குண்டவன் போல் அதிர்ந்து அடியற்ற மரம் போல் விழுந்தான்.

கூட்டத்தில் நின்ற ஒருவன் ''தம்பி... மனதை கட்டுப்படுத்திக்கொள்... உனது கம்பஸ் செய்தியைக் கேட்டவுடன் அம்மா இருமுறை கண்ணீர் விட்டாள். பின் நெஞ்சைப் பிடித்தபடி படுத்தவள் தான் பிறகு எழுந்திருக்கவே இல்லை'' என்று ஒருவாறு கூறி முடிக்கவும், அருண் அந்த உயிரற்ற உடல் மீது புரண்டு கதறத் தொடங்கினான்.

தாயாரின் இறுதிக் கிரியைகள் யாவற்றையும் நிறைவேற்றினான் அருண். சுய நினைவை இழந்து உணவு, தூக்கம் எல்லாவற்றையும் இழந்தான், வீட்டை மறந்தான். கால் போன போக்கில் நடந்து மனம் சொன்ன இடத்தில் படுத்தான். ஏறத்தாள ஒரு பைத்தியக்காரன் போல் அலைந்து திரிந்தான்.

***

திடீரென ''ஐயோ.....'' என எங்கிருந்தோ கேட்ட குரல் அவன் நினைவுகளை அடியோடு துரத்தி அவனை இவ்வுலகுக்கு இழுத்து வந்தது. உடனே திரும்பி பார்த்த அவன் அதிர்ச்சியுற்றான்.

அங்கே கார் ஒன்று அக்சிடன்ற் பட்டு பெண் ஒருத்தி இரத்தவெள்ளத்தில் கிடந்தாள். எழுந்து சென்று பார்த்தவன். ஒரு கணம் தன்னை மறந்து ''ஆ.. திவ்யா'' என்று அலறினான்.

மறுகணம் அவளை தூக்கிச் சென்று அருகில் உள்ள ஒரு வைத்தியசாலையில் சேர்ப்பித்தான்.

நேரம் கடந்து கொண்டிருந்தது. திவ்யா மெல்ல கண் விழித்தாள். எதிரே தெரிந்த உருவங்கள் மங்கலாக பின் தெளிவாக தெரிய ஆரம்பித்தன. அவளது அப்பா, அருகில் வைத்தியர், அவளது சில உறவினர்கள் தெரிய கண்களை சிலமுறை மூடித் திறந்தாள்.

பின் அவளால் நடந்தவற்றை ஊகிக்க முடிந்தது. அவளால் நம்பவே முடியவில்லை. தான் அப்படி ஒரு விபத்தில் இருந்து மீள்வதா? தனது இரு கைகளையும் மெல்ல எடுத்து வைத்தியரை கும்பிட்டாள். அவள் கண்களில் முதன் முறையாக கண்ணீர் துளி என்று ஓடியது.

வழமை போல் வைத்தியரும் ''அம்மா உன்னை சரியான நேரத்தில் இங்கு கொண்டு வந்தவருக்குத்தான் நீ நன்றி சொல்லவேண்டும். அவர் இல்லாவிட்டால் நீ பிழைத்திருக்கவே முடியாது'' என்று ஒரு பெருமூச்சு விட்டவராக. உனக்கு அதிகமா இரத்தம் வெளியேறியதால் அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது. எங்கட வைத்திய சாலையில் கூட உன்ர குரூப் இரத்தம் இல்லை... அப்ப அந்த தம்பிதான் வந்து தனது இரத்தமும் அதுதான் என்று சொல்லி உனக்கு தேவையான இரத்தம் முழுவதையும் தன்னிட்டஇருந்து எடுக்கச் சொல்லிட்டார். அதனால தான் நீ இப்ப கதைக்க முடிந்தது.''

''என்னை பொறுத்தவரை அவர் உனக்கு தெய்வம் மாதிரி... மறு பிறவியையே கொடுத்திருக்கிறார்'' என்று கூறி முடித்தார்.

(06 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுடர் ஒளி' வாணி விழா 2004



பூசை நிகழ்வில் நிர்வாக இயக்குநர்
திரு. ஈ.சரவணபவனும் அவரது பாரியாரும்



கவிஇசை நிகழ்வில்...
ரேவதி, எப்சிபா, சுதா, யனேஸ்வரன், கலா.



ஜெகனின் மேலைத்தேய
நடனம்.

பட்டிமன்றத்தில் ரங்கன்,
அஸ்லம், லோறன்ஸ், றாதாமேத்தா (நடுவர்),
ஜெகன், பிறேம், குணறுபேஸ்.





அறிவிப்பாளர்கள் ரங்கன், ரேவதி



நன்றிதெரிவிக்கிறார் நிமல்ஷன்
பாடல் யனேஸ்வரன்


## பரதநாட்டிய அரங்கேற்றம்



நாட்டிய கலாமந்திர் நடனக் கல்லூரி இயக்குனர் கலாசூரி வாசுகி ஜெயதீஸ்வரனின் மாணவி அஸ்வினி வந்திதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 2 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது. 9 வயதான அஸ்வினி கொழும்பு சர்வதேச பாடசாலையில் 5 ஆம் தரம் பயில்கிறார். அஸ்வினியின் தாயாரான குஷானி நாணயக்காரவும் வாசுகி ஜெயதீஸ்வரனிடம் பரதநாட்டியம் பயின்று அரங்கேற்றம் கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# ஜா-எல நகருக்கு மத்தியில்

Lakecity homes





## காண்பதை நம்புங்கள்....

நகருக்கு மத்தியில் மற்றுமோர் நகரம் உங்களால் முடிந்தவாறு உங்களுக்கு ஏற்ற விலையில் மிகச் சிறந்த நவீன இணைப்புகளுடன் லேக் சிட்டி உங்களுக்கு வழங்குகின்றது. ஏரிக்கரைக்கு பக்கத்தில் ரம்மியமான சூழலில் உங்கள் கற்பனை இல்லம் உயர்தர கட்டிடப் பொருட்களைக் கொண்டு தொழில் நிபுணர்களின் மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்ட விசாலமான கச்சிதமான வீடு.

நகரின் நெருக்கடி, இரைச்சலுக்கு அப்பால் ஆயினும் நகருக்கு மத்திமமாக உங்கள் கற்பனை இல்லத்தை நன்கு வடிவமைக்கப்பட்டு நான்கு மாதிரிகளில் இருந்து தெரிவு செய்யுங்கள்.

10% செலுத்தி இன்றே உங்கள் இல்லத்தை ஒதுக்கி கொள்ளுங்கள்






**Diamond** 4 படுக்கையறைகள்
விலை: ரூ. 6,200,000/- தொடக்கம்
காணி விஸ்தீரணம் - 10 பேர்ச்

- அரசாங்க காணி உறுதி
- முதலீட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்ட திட்டம்
- ஜா-எல நகருக்கு 200 மீற்றர் (கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதி)
- கொழும்புக்கு 15 நிமிட பிரயாணம் (கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை)
- 60" அகலமான நுளைவு வீதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- நிர்மாணங்களுக்கு 10 வருட உத்தரவாதம்
- விளையாட்டு திடல், சிறுவர் மைதானம், நீர் விளையாட்டுக்கான குளம் அமைப்பு
- தொலைபேசி, கேபள் டி.வீ. வசதிகள்
- நீச்சல் தடாகம்
- ஜிம்
- டே கெயார் நிலையம்.
- தாரிடப்பட்ட வீதிகள்
- இலகுவான தவணை முறை கொடுப்பணவுகள்



**Ruby** 3 படுக்கையறைகள்
விலை: ரூ. 5,300,000/- தொடக்கம்
காணி விஸ்தீரணம் - 8 பேர்ச்

முழுமையான கொடுப்பனவுகளுக்கு
ரூ. 900,000/- வரை விலை கழிவு.
இந்த சலுகை 2004 நவம்பர் 10 வரை மட்டுமே
நிர்மாணத்தின் பின்பு, கழிவுக்கு முந்திய அசலான
விலைக்கு உத்தரவாதம்

JEBZ



**Emerald** 3 படுக்கையறைகள்
விலை: ரூ. 4,300,000/- தொடக்கம்
காணி விஸ்தீரணம் - 6 பேர்ச்

## NEM REALTORS (PVT) LTD
விற்பனைகள் சந்தைப்படுத்தல் அலுவலகம்.
தொலைபேசி : 4834251/4834252
ஹொட்லைன் : 2339250 பக்ஸ் : 2339253
நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
E-mail : lakecityhomes@wow.lk
web site : www.lakecityhomes.lk



**Topaz** 3 படுக்கையறைகள்
விலை: ரூ. 3,375,000/- தொடக்கம்
காணி விஸ்தீரணம் - 6 பேர்ச்

வட்டி இல்லாத 35 மாத தவணை முறை கட்டணங்கள் 30% முன் கட்டணம் மட்டுமே!

Lakecity homes நீங்கள் விரும்பும் வாழ்விற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தவிப்பு

## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

4

ஆயிற்று 8 வருடங்கள். நாளை அனுப்பி விடுகிறோம் என்று சொன்னவர்களை நம்பி மகனை அனுப்பி, இந்த 8 வருடங்களாக "நாளை" "நாளை" என்று நாட்களை எண்ணியதுதான் மிச்சம்.

*19* வயது விடலைப் பையனாகச் சென்ற மகன், இன்று வாலிபனாக வெளிவரப் போகிறான். வாழ்வின் முக்கியமான 8 வருடங்கள் சிறைக் கொட்டடியிலேயே அவனுக்குக் கழிந்துவிட்டன. வாழ்வின் சுகங்களை அனுபவிக்க வேண்டிய வயதில், அனுபவிக்கக்கூடாத துன்பங்களை எல்லாம் அனுபவித்துவிட்டு வெளியே வருகிறான் என் மகன். இனியாவது அவன் வாழ்வில் சுகங்களை மட்டுமே காண வேண்டும். அந்தத் தாயுள்ளம் விம்மியது. கன்னங்களில் நீர் வழிந்தது.

"அம்மா!" - யாரோ கையைப் பற்றி அழைப்பது கேட்டது. மெதுவாக கண்திறந்தார் அற்புதம். எதிரே ராஜா.

"என்னம்மா இங்க தனியா உட்கார்ந்துட்டு..., முதல்ல எந்திரிங்க. மணி இரண்டரைக்கு மேல் ஆச்சு, வந்து சாப்பிடுங்க. எல்லோர் கூடவும் இருங்க. அதைவிட்டுட்டு தனியா இப்படி உட்கார்ந்திருந்தா கண்டதையும் யோசிக்கத்தான் தோணும். எந்திரிங்க! எந்திரிங்க....ம்!"

"வரேன். வரேன்! இவ்வளவு நேரமாயிருச்சா? ஆமா, அந்தாளு திரும்ப வந்து ஏதாச்சும் சொன்னாரா? என்ன நடக்குதாம் உள்ள?"

*11* மணிக்கு வந்து நளினிக்குத் தூக்கு என்றதை, *12.00* மணிக்கு வந்து முருகனுக்கு தூக்கு என்றதை, சற்றுமுன்வந்து "நால்வருக்குத் தூக்கு; யார் யாரென்று தெரியவில்லை. ஆனால், பிறருக்கு ஒன்றும்இருக்காது" - என்று தவணை முறையில் தகவல் சொல்லி பெரிய அதிகாரி குழப்புவதைக் கூறி அம்மாவைக் கலங்க வைக்க ராஜாவுக்கு விருப்பமில்லை.

"இல்லம்மா! ஒண்ணும் சரியான தகவல் இல்லை. நீங்க வாங்க முதல்ல சாப்பிடுங்க."

காலையில் இருந்த உற்சாகம் வந்திருந்தோரிடையே சற்றுக் குறைந்துதான் போயிருந்தது. எனினும் அற்புதம் முன்பு யாரும் தங்கள் கலக்கத்தை வெளிக்காட்ட துணியவில்லை. நடந்தது எதுவும் அறியாத அற்புதமோ அனைவருடனும் கலகலப்பாகப் பேசியவாறே உண்டு முடித்தார்.

"எப்பா தண்ணி இருக்காப்பா? பரவாயில்லயேப்பா! எல்லாம் சரியான ஏற்பாட்டோடதான் வந்திருக்கீங்க."

"ஆமா. எப்படியும் சாயந்திரம் வரைக்கும் ஆயிடும்னு தெரியும்! அதான் எல்லோருக்கும் சேர்த்து சோறு கட்டி எடுத்து வந்துட்டோம்."

"என்னப்பா தண்ணி பாக்கெட் தீர்ந்து போச்சா? இரு நான் போய் வாங்கிட்டு வர்றேன்!"

கடைக்குச் சென்று திரும்பிய அற்புதத்தின் எதிரே வந்து நின்றாள் அன்பு. அறிவின் அக்கா. அற்புதத்தின் மூத்த மகள்.

"என்னம்மா அங்கயும் இங்கயும் அலைஞ்சிட்டு இருக்கீங்க. வாங்க உங்கள அவரு கூப்பிடுறாரு!"

அற்புதத்தின் அடிவயிற்றில் ஏதோ உருண்டது போலிருந்தது. பதட்டமும், கோபமும் கலந்த குரலில் "என்ன கண்ணு! சரி நீங்கல்லாம் சாப்பிட்டீங்களா? அப்பா இந்தாப்பா தண்ணிப் பாக்கெட்டு. ஆமா ராஜா எங்க? வா போலாம்!"

ராஜா... அன்புக்கு கணவர். அற்புதத்தின் மருமகன் - "மறு" மகன். ஒரு ஆட்டோவில் அமர்ந்தவாறே இவர்கள் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் வந்த அற்புதத்திற்கு ராஜாவின் முகவாட்டம் குழப்ப மூட்டியது.

"என்னப்பா! ஏன் ஒரு மாதிரி இருக்க?"

"என்னம்மா நீங்க பாட்டுக்கு கவலையில்லாம சுத்திட்டு இருக்கீங்க. நம்ம அறிவுக்குத்தான் பெருசா ஏதாவது இருக்கும்னு எல்லாரும் பேசிக்கிறாங்க..."

"என்னப்பா சொல்ற! நம்ம வழக்கறிஞர் உள்ள போறப்பகூட நல்லாத்தானப்பா சொல்லிட்டுப் போனாரு. ரொம்ப வீக்கா இருக்கு. ஆதாரமேயில்லே. யாருக்குமே பெருசா எதுவும் கிடைக்காது, அதானல நம்ம அறிவுக்கு ஒண்ணுமே இல்லைன்னு உறுதியாச் சொல்லிட்டுப் போனாரேப்பா... சி.பி.ஐ. அதிகாரிங்ககூட அப்படித்தானப்பா சொன்னாங்க. ஏன் பெரிய அதிகாரியே காலை பத்திரிகைக்காரங்ககிட்ட அப்படித்தான்ப்பா சொன்னாரு. நீ என்னவோ புதுசா சொல்றியே....?"

"இல்லம்மா. பத்திரிகைக்காரங்கதானம்மா இப்ப இப்படிப் பேசிக்கிறாங்க...."

"இங்க பாரு ராஜா! பத்திரிகைக்காரங்களப் பத்தித்தான் நமக்குத் தெரியும்ல. நம்மளப் பத்தியே எத்தனை பொய்ச் செய்தி போட்டாங்க. சும்மா நம்ம வாய கிளருறதுக்கே இப்படி ஒண்ணுகிடக்க ஒண்ணு எதுன்னா சொல்வாங்க. நீ அதையெல்லாம் கேட்டுட்டு வந்து என்னட்ட சொல்லி என்னையும் குழப்பி நீயும் குழம்பிக்காதே!" - கண்டிப்புடன் சொல்லி விட்டு நகர்ந்தார் அற்புதம்.

ராஜாவிடம் உறுதியுடன் பேசிவிட்டாலும் அப்படி எதுவும் இருந்திடுமா என்ற கவலையும், பயமும் சின்னதாய் மனதின் மூலையில் எட்டிப்பார்க்கத்தான் செய்தன. அந்த நினைப்பை ஒதுக்கிவிட்டு மீண்டும் வந்தோருடன் கலந்து பேச ஆரம்பித்தார்.

அதற்குள் பெரிய அதிகாரி ஒருமுறை வந்து சென்று விட்டார். பெரிய அதிகாரி தலையைக் கண்டதும் சோற்றுக் கவளத்துக்குப் பறக்கும் காக்காய்க் கூட்டம் போல், ஆங்காங்கே சிதறி நிற்கும் பத்திரிகையாளர்கள் அவரை நோக்கி ஓடுவதும், அவர் திரும்பியவுடன் தளர் நடையும், தொங்கிய முகமுமாக இவர்கள் திரும்புவதும்... பார்க்கப் பார்க்க அற்புதத்திற்கு வேடிக்கையாக இருந்தது.


அந்த நிலையிலும், தனக்குத் தொடர்பில்லாத நிகழ்வுகள் போல ஒரு குழந்தை மனசுடன் வேடிக்கை பார்க்க அற்புதத்தால் மட்டுமே முடியும்.

நேரம்கடந்தது. இடை இடையேவதந்தியா, உண்மையா எனக் கணிக்க முடியாதபடி பல செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. சாதகமாகவும், பாதகமாகவும். பாதகமாய் எது காதில் விழுந்தாலும் அது பத்திரிகையாளர்களின் அல்லது கியூ பிரிவு பொலிஸாரின் சதியென அற்புதம் முழுமையாய் நம்பினார். சொன்னவர்களிடமும் அதையே கூறினார்.

மாலை இருளத் துவங்கியது, குழப்ப நிலை கூடியிருந்தோரிடையே ஒருவித இறுக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. இறுக்கத்தை அதிகரிக்கும் வகையில் ஒன்று அப்போது நடந்தது.

இரண்டு லாரிகள் நிறைய ஆயுத பொலிஸ் வந்திறங்கியது. ஏற்கனவே இருந்த மரத்தடுப்போடு, அணிவகுத்து நின்ற பொலிஸ் படை மற்றொரு அரணாகியது. கூடியிருந்தோரைச் சற்று தள்ளி நிற்கும்படி விரட்டினர். கடைகளை இழுத்து மூடத்துவங்கினர்.

குழப்பம் அதிகமானது. ஏதோ நடக்கப் போவதை எல்லோரும் உணர ஆரம்பித்தனர். அற்புதத்தின் மனம் பதறியது. இவனுங்க செய்யறதப் பார்த்தா ஒண்ணும் நல்லதாப் படலையே! என்ன ஆகப்போகுதோ? பதற்றம். ஒவ்வொரு தசையிலும், நரம்பிலும் பதற்றம். எதுவா இருந்தாலும் சீக்கிரம் சொன்னாலாவது பரவாயில்லையே. இப்படிக்காக்கவைச்சுக் கொல்றாங்களே. சாதாரண பெண்ணாய் இருந்தால் இந்நேரம் உலகில் எந்தக் கடவுளையும் விட்டு வைக்காது பேரம் பேசியிருப்பார். ஆனால், அற்புதம் பெரியார் பெண்ணாயிற்றே. எதுவாயிருந்தாலும் வருவதை எதிர்நோக்கத் தன் மனதை மெதுவாய் தயாரிக்க ஆரம்பித்தார்.



மணி *6.00*. தூரத்தில் பெரிய அதிகாரி தலை தெரிந்ததும் அனைவரிடத்தும் பரபரப்பு தீபோல் பற்றிக் கொண்டது. அவர் பந்தலுக்கு வந்து சேரும்வரை பத்திரிகையாளர்களுக்குப் பொறுமை இல்லை. முட்டி மோதி ஓடினர். அந்த 5 நிமிடங்கள். அற்புதத்தின் வாழ்வில் மறக்க முடியாதவை. காத்திருப்பு, கொடுமையான காத்திருப்பு. தன் மகனின் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ள அந்தத் தாய் தவித்த தவிப்பு.

பத்திரிகையாளர்கள் திரும்பி ஓடி வருவது தெரிந்தது. கூட்டத்தில் முதன்மையாக நின்றிருந்த ஒரு தோழர் "என்னாச்சு, என்னாச்சு" எனக் கத்தினார். வந்தவர்களில் ஒருவர் கூடப் பதில் சொல்லவில்லை. கையைப்பிடித்து நிறுத்திக் கேட்டவர்களும் முகத்தைக்கூட நிமிர்ந்துபாராது கையைஉதறி விட்டு ஓடினர். ஏதோ ஒரு தொலைக்காட்சியைச் சேர்ந்த ஒரு பெண் "எல்லாம் போச்சு" என்று அழுதவாறே ஓடினார். ஏதோ புரிந்தமாதிரியும், புரியாதமாதிரியுமான நிலை.



8 வருட கொடுமையான காத்திருப்பு... எல்லாம் முடிவுறும் நாள் வந்துவிட்டது.

"அட! சொல்லுங்கப்பா" - அடித் தொண்டையில் கத்தினார்.

சட்டென யாரோ ஒருவர் அத்தோழரின் கையைப்பற்றி அருகில் இருந்த ஒரு ஸ்டுடியோவுக்கு இழுத்துச் சென்றார்.

"யார் நீங்க..?"

"பதட்டப்படாதீங்க! நான் 'நக்கீரன்' நிருபர்! நீங்க இப்பதான் பொறுமையா இருக்கணும்!"

"சொல்லுங்க-"

"தமிழ்நாடு என்ன ஆகப் போகுதுன்னே எனக்குத் தெரியலே, இந்த மாதிரி ஒரு கொடுமையைக் கேட்டதேயில்லை. போச்சு! எல்லாம் போச்சு.. தமிழ்நாடே எரியப் போகுது! என்னா நினைச்சு இப்படிச் செஞ்சாங்களோ... இனிமே நாட்டைக் காப்பத்தவே முடியாது!...."

"தயவுசெய்து விசயத்தைச் சொல்லுங்க!"

"பதட்டப்படாதீங்க!" - அவர் கையைப் பற்றிச் சொன்னார் அந்த நிருபர்.

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

(தவிப்புத் தொடரும்....)

# பியர் அருந்தும் பெருவிழா

*16* நாட்கள் தொடர்ந்து இடம்பெற்ற பியர் அருந்தும் பெருவிழா ஜேர்மனியின் மூனிச் நகரில் ஒரு முடிவுக்கு வந்துள்ளது.

உலகிலேயே மிகப் பெரிதாகக் கருதப்பட்ட இந்தப் பெருவிழாவில் 59 லட்சம் விருந்தாளிகள் கலந்து கொண்டு பியர் குடித்துச் சிறப்பித்து இருக்கின்றார்கள்.

மொத்தமாக 55 லட்சம் லீற்றர் பியர் அருந்தப்பட்டுள்ளது. இந்த விழா நடைபெற்ற மண்டபத்தில் கைவிடப்பட்டுள்ள *4000* வரையிலான பொருட்களுக்குச் சொந்தக்காரர்களை அதிகாரிகள் தேடிக் கொண்டு இருக்கின்றார்கள். பொய்ப்பற்கள், நூற்றுக்கணக்கான கைத்தொலைபேசிகள், கல்யாண மோதிரங்கள் என்று பல பொருட்கள் விழா நடைபெற்ற மண்டபத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.



நல்ல குடிபோதையில் சிறுநீர் கழிவகத்தைத் தேடி நிலவறைக்குள் சென்ற ஒரு ஆஸ்திரி நாட்டவர், நிலவறைக்குள் ஓடும் ரயிலொன்றில் மோதியதைத் தவிர, வேறு எந்த அசம்பாவிதங்களும் இங்கு இடம்பெறவில்லை. ரயிலில் மோதுண்டவரும் தெய்வாதீனமாக உயிர்தப்பி விட்டாராம்.

*17* ஆவது தடவையாக இடம்பெற்றுள்ள இந்த விழா, *1810* இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரையில் 24 தடவைகள் யுத்தம், காலரா காரணமாக

# உதிரத்தால் வந்த.....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவளது தலையைத் தடவியபடி அப்பாவும் "ஆமாம் அம்மா.. அந்தத் தம்பி தன்ர பேரைக்கூடக் கூறாமல் இந்த விடயம் உனக்குத் தெரியக்கூடாது என்று கூறி இருக்கிறானாம். என்னால முடியாததை அவன் செய்திருக்கிறான்" இப்போது திவ்யாவின் மனம் சங்கடப்பட்டது.

"அப்பா நான் அவரை உடனே பார்க்கணும். எப்படி எண்டாலும்ஹெல்ப் பண்ணுங்கப்பா" என்று கெஞ்ச ஆரம்பித்தாள். வைத்தியர் எவ்வளவு மறுத்தும் இறுதியில் அவளது பிடிவாதம் வென்றது.

"அதிகமாக இரத்தம் எடுத்திட்டதால அவர் மயக்கமா இருக்கிறார். அதனால ஒரு நிமிடம் பார்த்திட்டு நீ திரும்பிடணும் சரியா!" என்று உத்தரவு போட்டவராக மறு அறையில் படுத்திருந்த அருணை அவளுக்குக் காட்டினார்.

ஒரு கணம் வானமே இடிந்து அவள் தலையில் விழுவது போல் உணர்ந்தாள். ஆயிரம் மின்னல்கள் தாக்கியது போல் புழுவாய்த் துடித்தாள்.

கடந்த கால நினைவுகள் எல்லாம் ஒரு நொடிக்குள் தோன்றி மறைந்தன. தனது உடலில் இருந்த காயங்கள், நோவுகள் எல்லாவற்றையும் மறந்தவளாக "அருண்" என்று அலறி ஓடோடிச் சென்று அவன் மார்பின் மேல் விழுந்தாள்.

"இத்தனை நாள் நான் செய்த துரோகத்திற்காக காணத்துடித்த உங்களை நான் இப்படியா காண வேணும்" என விம்மிக்கொண்டிருந்தாள்.

இப்பொழுது திவ்யாவின் அப்பாவுக்கு எல்லாமே புரிந்தது. முன்பு திவ்யா கூறிய அருண் இவன்தான் என்றபோது அருண் அவர் மதிப்புக்குரியவனாக இன்னும் வளர்ந்து நின்றான்.

வைத்தியர் கூட இரு நல்ல உள்ளங்கள் சங்கமமாகும் அந்தக் காட்சியைக் கண்டு கண்களைத் துடைத்துக் கொண்டார்.

யாரையும் கவனியாத திவ்யா தனது கண்ணீர் என்னும் நீரால் அவள் மனதைத் தூய்மைப்படுத்தி அதன் மூலம் அருணின் ஆன்மாவை குளிரவைத்துக் கொண்டிருந்தாள், அருண் கண் திறப்பதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஊருக்குத்தான் உபதேசம் உனக்கும் எனக்கும் இல்லை

"உனக்கும் எனக்கும் இல்லையடி கண்ணே! இது ஊருக்குமட்டும் தான் உபதேசம்" என்றாராம் அந்தப் போதகர்.

"அந்த மாதிரியான கதையாக இல்ல இருக்கு" என்றார் மும்மொழிப் பண்டிதரான சகலகலா வல்லவர்.

"என்ன ஐயா பழமொழிகளை எல்லாம் தாராளமாக கொட்டிக் கொண்டு வருகின்றீர்கள்" என வளைத்தார் நண்பர்.

"ஒகோ.... நீங்களா?. வாங்க சார். எங்களை எல்லாம் மறந்து விட்டீர்களோ என்று பார்த்தேன், ரொம்பச் சந்தோசம், இப்படி வாங்க" என்று மும்மொழிப் பண்டிதரும் அருகில் உட்பார்ந்து கொண்டார்.

"என்ன ஐயா கேட்டவிசயத்தை சொல்லாம உபசரிக்க ஆரம்பித்து விட்டீர்கள்" என்று ஞாபகப்படுத்தினார் நண்பர்.

"மறக்க வில்லை சார். அந்த வேதனையால் ஏற்பட்ட சூட்டை சற்றுத் தணிக்க வேண்டாமா கொஞ்சம் கூலாக ஏதாவது குடித்துக் கொண்டே பேசுவோம்" என ஆரம்பித்தார்.

"பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அந்த அமைச்சர் செய்யிற விசயத்தைத்தான் சொல்ல வந்தேன்."

"அப்படி அவர் என்ன செய்துவிட்டார்?"

"அதைக் கேளுங்க. நம்ப நாட்டு அரசமைப்புச் சட்டத்தின்படி ஒரு தேர்தல் நடந்தால், வேட்பாளர் மனுத்தாக்கல் செய்யும் போதே தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களையும் கொடுக்க வேண்டும்."

"ஆமாம் அதுதான் எல்லோருக்கும் தெரிந்த விடயமாச்சே!"

"ஆனால், இப்ப என்ன ஆச்சு இந்தச் சட்டம் ஒழுங்கை எல்லாம் காப்பாற்றுவதற்காக அம்மாவால் நியமிக்கப்பட்ட ரட்ணசிறியார் பட்டியலில் இல்லாமதானே வந்தாரு."

"சரிஅவர்தான்இப்பஎம்.பி.யானதையோடமந்திரியாகவும் வந்திட்டாரே. இப்ப என்ன அதுக்கு?"

"அது தானுங்களே வம்பு. இந்த நியமனத்தை ஆட்சேபித்து லோயர் ஒருத்தர் வழக்குப் போட்டும் புட்டார். அந்த வழக்கும் இப்பவிசாரனைக்கு வரப் போகுது."

"ஆனால், இந்தச் சட்டத்தை யும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய ரட்னசிறியார் என்ன செய்திருக்கார்தெரியுமோ? இந்தவழக்கைவிசாரிக்ககூடாது என்று ஒரு தனி வழக்கே போட்டுப்புட்டாரே!"

"அப்படின்னா 'சட்டமும் ஒழுங்கும் ஊருக்கு மட்டும் தான், அது எனக்கு இல்லை' என்கிறார் போலும். அதுதான் வேலியே பயிரை மேய்கிற கதை" என்றார் சகலகலாவல்லவர்.

"போஸ்டர் ஒட்டும் கூட்டத்தில் இருந்தாலும் சிவப்புச் சட்டை சந்திரனார் எதையும் துணிச்சலாகக் கூறிவிடுவார்.

இதற்கு ஒரு உதாரணம் என்ன தெரியுமா? கடந்த வாரம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது அல்லவா? அதைப்பற்றி இந்தச் சிவப்புச் சட்டை சந்திரன் ஒரு போடு போட்டு வைத்தார்.

அதாவது இந்த 14 ரூபா சம்பளத்தை ஆரம்பித்திலேயே தருவதாகக் கூறினார்களாம் தோட்டத் துரைமார்.

அப்போது தான் இந்தத் தொழிற்சங்க முதலாளிமார் பேரம் பேசும் பேச்சுக்களை நடத்தினராம்.

முதலில் இந்தத் துரைமார் பேசியதில்லையாம். காரணம் அமைச்சர்களும், ஜே.வி.பியினரும் கூடச் சம்பள உயர்வு வழங்கவேண்டும்எனக்கூறினாராம். அதேவேளை இந்த அரச சார்பற்ற அமைப்புகளும் போராட்டம் நடத்திவிட்டன.

இதனால், அரசாங்கம் ஒரு வேளை சம்பள உயர்வை வழங்கும்படி உத்தரவு ஏதும் போட்டு விடுமோ என்ற பீதி தோட்டத் துரைமாரிடம் இருந்ததாம்.

ஆனால், இந்த தொழிற்சங்கப் பெருச்சாலிகள் எப்படியோ வசியம் பண்ணிவிட்டார்களாம். நீங்கள் பயப்பட வேண்டாம். அந்த பட்ஜெட் வரமுந்தி நாங்க சரிக்கட்டிப்புடுவோம். கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்வோம் என்று தைரியம் ஊட்டினார்களாம் இந்தத் தொழிற்சங்க வியாபாரிகள்.

கடைசியில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் பேரம் நல்லபடியா முடிந்ததோ என்னவோ, தொழிற்சங்க வியாபாரிகளின் பேரம் சிறப்பாகவே முடிந்ததாம்.

பலகோடிகள் கை மாறியதாம். தொழிலாளர்களின் கழுத்தில் கூட்டு ஒப்பந்தம் என்ற சுருக்கு மாட்டப்பட்டுவிட்டது என்கிறார் இந்த போஸ்டர் சந்திரன்.

## வாய்வார்த்தை மட்டுமல்ல அடிவயிற்றில் இருந்து வந்தவை

தனித்துவமாக நின்று தனித்தே சென்றுவிட்ட அந்த கிழக்கின் தலைவரது சிரார்த்ததினம் சிஷ்யர்களின் மனத்திலும் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டதாம்.

இதனால் தனித்துவ நாயகியும், மரநாயகனும் இணையப் போகின்றார்கள் என்ற செய்தி கிழக்குச் சீமை மக்களின் மனதில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கின்றதாம்.

இம்முறை கிழக்குச் சீமையில் நடந்த விழாவில் நாயகியின் தலைமையில் மரத்தில் இருந்து முறிந்த பல கொப்புகள் மேடையை அலங்கரித்துக் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்ததாம்.


தனித்துவ நாயகி மனம் விட்டுக் கூறினாராம். "இன்று பல இடங்களில் விழாக்களை நடத்திவிட்டு இன்று ஒன்று கூடி உள்ளோம். அது பெருமையாக இருக்கின்றது" என்று ஆனந்தக் கண்ணீர்வடியக் கூறினாராம்.

இந்த வார்த்தைகள் தலைவியின்வாயில் இருந்து வரவில்லை.அவரது அடிமனதில் இருந்து உதித்த வார்த்தைகள் என்று ஆனந்தப்படு கின்றனர்.

யாருடைய கண்பட்டதோ தெரியவில்லை. கிழக்குச்சீமையில் ஒருவைபவத்துக்கு கிழக்குச்சீமையின் கட்டமைப்புக்கே பொறுப்பானவர்சென்ற போது கல்லடித்துக்குழப்பி விட்டனராம் சில பாவிகள். ஒன்றுபடுவதையும் விரும்பாத பாவிகள்எங்குதான் இல்லை என்று கிழக்குச் சீமையார்கள்வேதனைப் படுகின்றனராம்.

## நேரம் மிகப் பெறுமதியானது

## TIME IS PRECIOUS




இழக்கப்பட்ட ஒரு நொடிப்பொழுது என்றைக்கும் இழக்கப்பட்டதே. இவ்வாறு இழக்கப்படும் நேரத்தின் பெறுமதி பற்றி கீழ்வரும் வசனங்கள் எடுத்தியம்புகின்றன. அதனை உணர்ந்து நொடிப்பொழுதுக்கும் உயர்ந்த மதிப்பளியுங்கள்.

ஒரு வருடத்தின் பெறுமதியை உணர்ந்து கொள்ள ஆண்டிறுதித் தேர்வில் தோல்வியுற்ற ஒரு மாணவனை அல்லது மாணவியைக் கேட்டுப்பார்.

ஒரு மாதத்தின் பெறுமதியை உணர்ந்து கொள்ள குறைப் பிரசவத்தில் குழந்தையைப் பெற்றெடுத்த ஒரு தாயைக் கேட்டுப்பார்.

ஒரு வாரத்தின் பெறுமதியை உணர்ந்துகொள்ள ஒரு வாராந்த சஞ்சிகையின் பதிப்பாசிரியரைக் கேட்டுப்பார்.

ஒரு நாளின் பெறுமதியை உணர்ந்து கொள்ள ஆறு குழந்தைகளுக்கு உணவூட்டும் நாளாந்த கூலி வேலையாளைக் கேட்டுப்பார்.

ஒரு மணித்தியாலத்தின் பெறுமதியை உணர்ந்து கொள்ள சந்திப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கும் காதலர்களைக் கேட்டுப்பார்.

ஒரு நிமிடத்தின் பெறுமதியை உணர்ந்து கொள்ள தனது ரயில்வண்டியைத் தவறவிட்ட ஒருவரைக் கேட்டுப்பார்.

ஒரு வினாடியின் பெறுமதியை உணர்ந்து கொள்ள ஒரு விபத்தில் உயிர் தப்பிய ஒருவரைக் கேட்டுப்பார்.

ஒரு மணித்துளியின் (மில்லிசெக்கன்ட்) பெறுமதியை உணர்ந்து கொள்ள ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை வென்றெடுத்த ஒருவரைக் கேட்டுப்பார்.

*தமிழாக்கம் : மார்க்கண்டு கண்ணன், சொய்சாபுரம்.*

*நன்றி: ஹிண்டு நாளிதழ்.*


உ
சிவமயம்
ஓம் சங்கராய பரணம்



தமிழ் உலக மக்களுக்கு இன்றும், என்றும் எனது பரிபூரண துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.
தெய்வத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை, உங்கள் குறைகள் என்ன?
குடும்பப் பிணக்கா, பிரிந்தவர் ஒன்று சேர வேண்டுமா? உங்கள் பிள்ளைகள் நல்வாழ்வு பெற வேண்டுமா? இன்னும் உங்கள் குறை நிறைகளுக்கு.
வெளிநாட்டவருக்கு விஷேட சலுகை உண்டு
இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.
பேராசிரியர். டாக்டர். பி.கே. சாமி.
இல. 62, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு – 13.
T.Phone : 2342463, 2342464, 2344832, 2431137, 2449110.
Mobile: 0777 588405, 0777 388860
Fax: 0094112344831

தற்பொழுது நவீன காட்சியறையுடன்



வவுனியாவில்
மைக்ரோ பிசி சிஸ்ரம்ஸ்
(வவுனியாவில் எமக்கு வேறு கிளைகள் இல்லை)
MICRO PC SYSTEMS
73C, 2ஆம் குறுக்குத் தெரு. வவுனியா. 024 4588339

Computers
ரூ41,000/= தொடக்கம்
warranty 3 years
2.0Ghz, 2.4Ghz, 2.8Ghz, 3.0 Ghz
15" Monitor, Mother board, 64MB VGA, 128 40GB HDD, 52X CD ROM, MB FDD, PS2 Keyboard Mouse, Casing, Sound Speaker.
Free Internet, E-mail

Peripherals
•TV Card •Woofers,2.1,4.1,5.1 •UPS •Pen drives •Printers •Combo/DVD Drives •Digital Cameras •Scanners •Network cards •Hub/Switch •Memory cards •Fax modems •Capture cards •wireless keyboard •wireless mouse •Home theater sys.
Visit for special prices

Accessories
•Head phones •Screen filters •Cartridges •Ribbons •Toners •Refills •Blank CDs/DVDs •CD covers •Floppy disks •Floppy/CD wallets •Photo quality papers •Cables, Connectors •Laptop bags •Joy sticks •USB hubs •Power supply
Visit for special prices

PC Repairs
•PC stuck •LCD Problems •Virus Problems •Display problems •Memory errors •Windows problems •Drivers installation •Software Installations •Power Pack Problems •Capture Card problems •Internet and Email Setup •Net-2-Phone configuration •Battery Problems(Lap-top)
திருத்தங்களுக்கு உத்தரவாதம்

Electronic Repairs
•Analog & Digital Monitors •Inkjet / Laser / Dot matrix Printers •Power Supply •Scanners •Laptop & Mobile PCs •UPS
All Electronic Equipments
திருத்தங்களுக்கு உத்தரவாதம்

Mobile Service நடமாடும் சேவை



உங்கள்அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து உங்கள் முன்னால் திருத்தித் தரப்படும்
உங்கள் அருகில் உள்ள கிளையை அழையுங்கள்

| | |
|---|---|
| வெள்ளவத்தை | 15. 36th Lane, Colombo-06 Tel: 011-4513235, 011-4516764 |
| கொட்டாஞ்சேனை | 82, New Chetty St, Kotahena, Tel: 011-4613617, 011-4619673 |
| வவுனியா | 73C, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 4588339, 0777308417 |
| யாழ்ப்பாணம் | 175/3 Kasturiyar Rd, Jaffna. Tel: 021 2225893, 071 2374181 |
| நெல்லியடி | Main Street,(Next to Police Station) Nelliyadi. Tel: 077 3039536 |
| திருகோணமலை | 148, Main Street, Trinco. Tel: 026 222 1054 |

CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo 06. Tel: 011 4510686

பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
நவம்பர் 21 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
நவம்பர் 06 - 07 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
நவம்பர் 13 - 17
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஒக்டோபர் 31 – நவம்பர் 06, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஜனாதிபதியின் பம்மாத்து

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி கடைசியாக இலங்கை வந்த போது, சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்காக அரசும் பொதுமக்களும் இணைந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று ஜனாதிபதியிடம் யோசனை தெரிவித்தார்.

வெறுமனே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் இலங்கையில் எந்த ஓர் அபிவிருத்தித் திட்டத்தையும் செயற்படுத்த முடியாது என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

தற்பொழுது யசூசி அகாஷி மீண்டும் இலங்கை வந்துவிட்டார். ஜனாதிபதி என்ன சொல்லப் போகிறார்?

யசூசி அகாஷி கடைசியாக இலங்கை வந்து திரும்பிய பின்பு இதுவரை ஜனாதிபதியால் உருப்படியாக எதனையாவது சாதிக்க முடிந்ததா? எதுவுமே நடைபெறவில்லை.

ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சமாதானம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் ஜனாதிபதியின் வெறும் பம்மாத்து என்பது தற்பொழுது நிரூபணமாகி வருகிறது.

புலிகள் இதனை நிராகரித்துவிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் ஆலோசனை கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்துவிட்டன.

இடைக்கால தன்னாட்சி சபைகள் தொடர்பான புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என்று ஐ.தே.க. கூறிவிட்டது.

இந்தநிலையில் எதிர்வரும் 1 ஆம், 2ஆம், 4 ஆம் திகதிகளில் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்தேச மாநாட்டு மண்டபத்தில் இந்த கவுன்ஸிலின் முதலாவது கூட்டம் நடைபெற இருக்கிறது.

முதலாம் திகதிக் கூட்டத்துக்கு ஒவ்வொரு கட்சியில் இருந்தும் இருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2 ஆம் திகதிக் கூட்டத்துக்கு பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமூகப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். 4 ஆம் திகதிக் கூட்டத்துக்கு துறைசார் நிபுணர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கல்வி சார்மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சமாதான நடவடிக்கைகள், பல்வேறு இனங்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் மேம்படுத்துதல் ஆகியவை குறித்து இந்த மூன்று குழுக்களும் ஒழுங்கான கால இடைவெளியில் கவுன்ஸிலின் பிரதான அமர்வுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் எல்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதனால் என்ன பயன் ஏற்படப் போகிறது?

ஜே.வி.பியின் எதிர்ப்புக் காரணமாக ஜனாதிபதியால் சமாதான முயற்சிகளை நோக்கி எந்த ஒரு நகர்வையும் மேற்கொள்ள முடியாது.

கடந்தவாரம் கூட, புலிகளின் தன்னாட்சி அதிகார சபை யோசனையை ஜே.வி.பி. எதிர்க்கும் என்று அதன் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியையும் அவர் கண்டித்துப் பேசி இருக்கிறார்.

ஆகவே, ஜே.வி.பியின் விருப்பத்துக்கு மாறாக ஜனாதிபதியினால் செயற்பட முடியாது. நினைத்த நேரத்தில் ஜே.வி.பி அரசாங்கத்தை வீழ்த்திவிட முடியும்.

ஜனாதிபதியின் முக்கிய நோக்கம் தனது பதவிக் காலம் வரை காலத்தை இழுத்தடிப்பதே. அதற்காகத்தான் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில், ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சு என்று காலத்தை கடத்துகிறார்.

தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை புலிகள் நிராகரித்து விட்டனர். ஒஸ்லோ பிரகடனம் என்ற பெயரில் விதிக்கும் நிபந்தனை எதனையும் ஏற்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்துவிட்டனர். சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபடுவது போன்ற ஒரு பிரமையை ஜனாதிபதி வெளி உலகுக்கு காட்ட முயற்சிக்கிறார்.

# ஜனாதிபதி விரித்த வலையில் புலிகள் சிக்குவரா?

அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் சாத்தியம் இன்னும் வெகு தூரத்திலேயே இருந்து வருகின்றது.

புலிகளை எப்படியாவது தனது வலையில் வீழ்த்தி பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வந்து சேர்க்க ஜனாதிபதி திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறார்.

ஆனால், ஜனாதிபதி விரிக்கும் வலையில் சிக்குவதில்லை என்பதில் புலிகள் உஷாராக


பிரபாகரன்

இருந்து வருகின்றனர்.

"ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கத்தயார் என்பதே ஜனாதிபதியின் ஆகப்பிந்திய அரசியல் தந்திரம்.

"ஒஸ்லோ பிரகடனம் என்று எதுவுமே இல்லை. சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு ஒஸ்லோ பிரகடனம் என்ற பெயரில் விதிக்கப்படும் நிபந்தனைகளை புலிகள் ஏற்க மாட்டார்கள்" என்று 'போரும் சமாதானமும்' என்ற தமது புத்தகத்தில் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் அதனை செயற்படுத்திக்கொண்டு இறுதித் தீர்வு தொடர்பான பேச்சுக்களை நடத்தவும் புலிகள் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் இன்னும் விலகவில்லை.

ஆனால், ஜனாதிபதி, இறுதித் தீர்வு குறித்து முதலில் பேசுவோம். பின்பு இடைக் கால நிர்வாகம் குறித்துப் பேசலாம் என்றார்.

பின்னர் இடைக்கால நிர்வாகம் குறித்தும், இறுதித் தீர்வு குறித்தும் ஒரே சமயத்தில் பேசுவோம் என்றார். அதுவும் புலிகளிடம் எடுபடவில்லை.

இடைக்கால நிர்வாகம் குறித்து முதலில் பேசுவோம். அதன் பின்பு இறுதித் தீர்வு குறித்து பேச்சுக்களை ஆரம்பிக்கும்போது இடைக்கால நிர்வாகம் தொடர்பாக காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்துவோம் என்றும் கூறிப்பார்த்தார். புலிகள் அதற்கும் மசிந்து கொடுக்கவில்லை.

இவை எல்லாவற்றிலும் தோல்விகண்ட ஜனாதிபதி தற்பொழுது விரித்துள்ள வலை தான் 'ஒஸ்லோ பிரகடனம்.'

தனது பழைய எண்ணத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி தயாரித்த புதிய வடிவத்திட்டம் தான் இது.

அதாவது இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதற்கு முன்னர் இறுதித்தீர்வு குறித்துப் பேசக் கூடாது என்ற புலிகளின் திட்டத்தை உடைப்பதே ஜனாதிபதியின் நோக்கம்.

ஒஸ்லோ பிரகடனம், ஒஸ்லோ உடன்பாடு, ஒஸ்லோ இணக்கம் என்றெல்லாம் அரசு தரப்பு பிரசாரப்படுத்திவருகிறது. ஆனால், மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் தெரிவித்துள்ளது போன்று இது ஒரு பிரகடனமோ, உடன்பாடோ இல்லை.

புலிகளுக்கும், அரச தரப்பினருக்கும் இடையில் ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சின் முடிவில் நோர்வேத் தரப்பினர் விடுத்த வெறும் அறிக்கை ஒன்றையே ஜனாதிபதி தற்பொழுது 'ஒஸ்லோ பிரகடனம்' என்ற பெயரில் தூக்கிப் பிடித்து வருகிறார். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண்பதே முடிந்த முடிவு என்று இரு தரப்பும் தீர்மானித்தாக அதில் கூறப்படவில்லை.

உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையிலான சமஷ்டித் தீர்வின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை அடைவது குறித்துப் புலிகள் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையில் அதற்கான வாய்ப்புக்களை கண்டறிவதற்கு அரசும், புலிகளும் இணங்கினர் என்றே மூன்றாவது சுற்றுப் பேச்சின் இறுதியில் நோர்வே விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதாவது, உள்ளக சுய நிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தீர்வு ஒன்றை அடைவதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிய புலிகள் இணங்கினரே தவிர அது தான் முடிந்த முடிவு என்று புலிகள் அறிவிக்கவில்லை. அந்த வாய்ப்புக்களைக் கண்டறிய இணங்கியதன் மூலம் தமக்கே உரியதான வெளியக சுய நிர்ணய உரிமையை புலிகள் கைகழுவி விட்டனர் என்று அர்த்தம் இல்லை. இனப்பிரச்சினைக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை என்ற கோட்பாட்டின் கீழ் சமஷ்டி முறையின் அடிப்படையில் தீர்வு காண முயற்சிக்கலாம் என்ற புலிகளின் தீர்மானத்தை தமிழ் மக்களின் வெளிப்புற சுய நிர்ணயஉரிமையையும், பிரிந்து செல்லும் உரிமையையும் நிபந்தனை இன்றி கைவிடுவதாக அர்த்தப்படுத்த முடியாது.

தேசியத் தலைவர் பிரபாகரனின் 2002 மாவீரர்உரையில், உள்ளகசுயநிர்ணயஉரிமை என்ற கோட்பாட்டின் கீழ் தன்னாட்சி கோரும் புலிகளின் எதிர்பார்ப்பு மேலோட்டமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

"எங்களின் உள்ளகசுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் எங்கள் தாயகத்தில் குறிப்பிட்டளவு பிராந்திய அதிகாரங்களுடன் கூடிய தன்னாட்சி முறையைத் தரும் அரசியல்கட்டமைப்பு ஒன்றைத் துரிதமாகப் பரிசீலனை செய்ய நாம் தயாராக இருக்கிறோம்" என்று பிரபாகரன் தெரிவித்திருந்தார்.


சந்திரிகா

அதே சமயம் "உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படைகள் தடுக்கப்பட்டால் அல்லது மறுக்கப்பட்டால் அதன் மூலம் பிராந்திய சுயாட்சிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் பிரிந்து சென்று சுதந்திர அரசை உருவாக்குவதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை" என்றும் எச்சரித்திருந்தார்.

இதன் அடிப்படையிலேயே வெளிப்புற சுய நிர்ணய உரிமையை கடைசியும், இறுதியுமான தெரிவாக திட்டவட்டமாக வெளிப்படுத்தி இருந்தார்.

ஆகவே, தமது பிரச்சினைக்கு வேறு வழி இல்லாதநிலையில் கடைசி அஸ்திரமாக, வாய்ப்பாக வெளியக சுய நிர்ணய உரிமை முடிவையே புலிகள் இன்றும் வைத்துள்ளனர்.

மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர், 'ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில் சமஷ்டி முறையில் தீர்வு காண்போம், என்று தேசியத் தலைவர் பிரபாகரனை பகிரங்கப் பிரகடனம் மூலம் அறிவிக்க வைத்துவிட்டால், 'இடைக்காலத் தீர்வு குறித்துப் பேச முன்னர் இறுதித் தீர்வு இது தான் என்று புலிகளை இணங்க வைத்துவிட்டோம்' என்று தம்பட்டம் அடிக்கலாம் என்று ஜனாதிபதி கருதுகிறார். ஜனாதிபதியின் திட்டம் இம் முறையும் வெற்றி அளிக்கப்போவதில்லை.

-சஞ்சாரன்-

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை; முரண்படும் முஸ்லிம் தலைமைகள்

இலங்கை அரசியலில் இன்று பல்வேறு புதுமையான தகவல்களும், அறிவிப்புக்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசை ஸ்திரப்படுத்தும் அதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்கால அரசியல் இருப்பை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளே அவை.

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றபோதிலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை.

அதனால் சுதந்திரக்கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையற்ற ஓர் அரசாகவே முதல் ஐந்து மாதங்களைக் கடத்தியது. ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கடந்த மாதம் அரசுடன் இணைந்ததன் மூலமே அது பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொண்டது.

என்றாலும், தனது அரசை ஸ்திரப்படுத்திய திருப்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஏற்படவில்லை. காரணம் நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் திட்டத்தை இ.தொ.கா. எதிர்க்கிறது.

**ஜனாதிபதித் தேர்தலுக்கு இடமில்லை**

நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு இ.தொ.கா. ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டாது என அதன் தலைவர்கள் அடித்துக் கூறிவிட்டனர். அதனால் தான் இ.தொ.கா. அரசுடன் இணைந்திருக்கின்றபோதிலும் ஜனாதிபதி இன்னும் திருப்தியடையாதிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவடைகிறது. அதனைத் தொடர்ந்து அவர் அரசியலுக்கு விடை கொடுத்துவிட்டு வீடு செல்ல வேண்டும்.


பேரியல்

ஆனால், அதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராக இல்லை. நாட்டின் தலைவியாக ஒரு தசாப்த காலத்திற்கு மேலாகப் பதவி வகித்து – அனுபவித்து வருகின்ற சுகபோகத்தை அவர் இழக்க விரும்பவில்லை. அதனால் பதவியில் நீடிக்க ஆசைப்படுகிறார்.

இதற்காக 2005 [illegible]சம்பர் மாதம் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடமளியா அதற்கு முன்னதாகவே தனது பதவிக்காலத்தை மேலும் ஒரு தவணைக் காலத்திற்கு (ஆறு வருடங்களுக்கு) நீடிப்பதற்கான அனுமதியைக் கோரி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றைத் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பிரயோகித்து நடத்துவதற்கு அவர் சட்டவல்லுனர்களுடன் ஆலோசித்து வருகின்றார்.

இவ்வாறான ஏற்பாடு ஒன்றுக்குச் சட்டம் இடமளிக்காதபட்சத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவியை இல்லாதொழித்து விட்டு நாடாளுமன்றத்திற்கு அதிகாரத்தைக் கையளிப்பதற்கான ஏற்பாட்டை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்படுகிறது. அதன் மூலம் தான் பிரதமர் பதவியை ஏற்றுத் தொடர்ந்தும் நாட்டின் அரியாசனத்தில் வீற்றிருக்க முற்படுகிறார்.

தடைப்பட்டிருக்கின்ற சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதை விட, தனது எதிர்கால அரசியல் இருப்புக் குறித்தே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது கூடிய கவனம் செலுத்தி வருகிறார். பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒருவருடம் இருக்கும் போது, இப்போதிருந்தே அப்பதவியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

– அஸ்லம் எஸ்.மௌலானா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மிஸ்டர் வேதாளம்



திடீரென எமது மேசையில் இருந்த இன்டர்கொம் அலறத் தொடங்கியது. எடுத்துக் காதிலே வைத்தோம். பயத்திலே வெடவெடத்தபடி பேசினார் வரவேற்புப் பெண். அவரை ஆசுவாசப்படுத்தி ''என்ன பிரச்சினை'' என்று விசாரித்தோம்.

''ஐயையோ! காலே இல்லாத ஒரு உருவம் வந்து எனக்கு முன்னே நிற்கிறது. உங்களைச் சந்திக்க வேண்டுமாம். என்ன செய்வது? எனக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.'' என்று பரபரத்தார்.

எமக்கு விளங்கிவிட்டது,'வேதாளத்தார் இம்முறை ஜன்னலால் குதிக்கவில்லை. சாதாரணமாக எல்லோரும் அலுவலகத்துக்கு வரும் பாதையால் தான் வந்திருக்கிறார். அதனால் தான் இந்தக் குழப்பம்' என்று.

''சரி, அவரை மேலே அனுப்பிவிடும்'' என்று சொல்லி இன்ரகொம்மை வைத்தது தான் தாமதம், முன்னே நின்றார் வேதாளத்தார்.

''ஏனய்யா வழமையாக வருவது போல் ஜன்னலால் குதிக்க வேண்டியதுதானே! ஏன் எல்லோரையும் டென்ஷன் பண்ணுகிறீர்?'' என்றோம். அசட்டுத்தனமாகச் சிரித்தார்.

வரவேற்புப் பகுதியில் உள்ள பெண்ணைக் கலக்கத்தான் இந்த வேலை செய்திருக்கிறார் என்பது விளங்கியது.''கொண்டு வந்த விடயங்களைக் கொட்டும்''என்றோம்.

''என்ன வேண்டும்? ஏது வேண்டும்? நீங்கள் கேள்விகளைக் கேளுங்கள். நான் பதில் தருகிறேன்'' என்றார்.

''அடடா... அவ்வளவுக்கு எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீரோ! சரி... கேட்கிறோம். பதில் சொல்லும்'' என்றுவிட்டுக் கேள்விகளை அடுக்கினோம்.

''வன்னியிலே ஏதோ கசமுசாவாமே... இரு பெரும் தளபதிகளுக்கிடையில் முட்டல்—மோதலாமே?''என்றோம்.

பெரிதாகச் சிரித்தார்.''கருணாவின் குழப்பத்தை வைத்து குட்டையைக் குழப்ப நினைத்தார்கள் சிலர். அது புஸ்வாணமாகிப்போனதால் அடுத்து இப்படி ஒரு சரடு விட்டுப் பார்க்கிறார்கள். ஆனால், அப்படி அங்கு எதுவும் இல்லை.'' என்றார்.

''அப்படியா...? சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்ற கேணல் சூசை உடனடியாகத் திரும்பிவிட்டாரே!'' என்றோம்.

''ஆம். அவர் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் ஒன்றில் துப்பாக்கிச் சன்னம் பட்டுக் காயமடைந்தார். அவருக்கு உள்ளூரிலேயே சிகிச்சை நடந்தது. ஆனால், அந்தச் சிகிச்சையால் தோள் பட்டைப் பகுதியில் பதுங்கியிருந்த துப்பாக்கிச் சன்னத்தை வெளியே எடுக்க முடியாமல் போய்விட்டது.''

''ஓஹோ! அப்படியா? பின்னர்''

''அந்தச் சன்னம் நீண்ட காலத்தின் பின்பு இப்போது வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டது. கை மூட்டுப் பகுதியில் இடைவிடாத உளைவு. இதனால் சிங்கப்பூருக்கு சிகிச்சைக்குச் சென்றார். ஆனால், அங்கே அவரைப் பரிசோதித்தவர்கள் அந்தச் சன்னத்தை வெளியே எடுக்க முடியாதெனக் கையை விரித்துவிட்டார்கள்.''

''அப்படியென்றால் சிங்கப்பூர் பயணம் வீணாகிவிட்டதோ?''

''இல்லை.ஆனால்...அவரை வைத்தியசாலையில் அனுமதிக்காது வெளியே ஒரு ஹோட்டலில் தங்க வைத்து பிசியோதெரபி எனப்படும் உடல் பயிற்சி சிகிச்சைகள் மூலம் அந்தச் சன்னத்தைப் பாதுகாப்பான வேறு பகுதிக்கு நகரச் செய்து விட்டார்கள். அதனால், இப்போது கை உளைவுபோயே போச்சு.''

''அப்படியா!வெளியே ஹோட்டலில் தங்குவதென்றால் பாதுகாப்புப் பிரச்சினை இருந்திருக்குமே?''

''இல்லவே இல்லை. சிங்கப்பூர்ப் பொலிஸார் ஒரு வெளிநாட்டுத் தலைவருக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பை அவருக்கு வழங்கினார்களாம்.ஹோட்டலுக்கு உள்ளே யாரையும் செல்ல அனுமதிக்கவில்லையாம். கேணல் சூசையைப் பார்க்க விடுதலைப்புலிகளின் அவுஸ்திரேலிய நாட்டுப் பொறுப்பாளர் வந்திருந்தாராம். அவரைக் கூடப் பார்க்கவிடவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! சிங்கப்பூரில் காலடி எடுத்து வைத்தது முதல் சிங்கப்பூரை விட்டு வெளியேறும் வரை நிழல் போலப் பாதுகாத்தார்கள் என்று புளகாங்கிதம் அடைகிறார்கள் புலிகள்.'' என்று இடைவிடாமல் பேசிவிட்டுக் கொஞ்சம் மூச்சு வாங்கினார் வேதாளம்.

''அப்போ தளபதிகளான சொர்ணம்— சூசை ஆகியோரிடையே மோதல் என்பது கப்சா என்கிறீரோ?''

''கப்சாவே தான்... நாடு திரும்பிய சூசை உடனடியாக மீண்டும் தனது கடல் புலிப்பிரிவை நிர்வகிக்கத் தொடங்கிவிட்டார். சொர்ணம் திருமலையில் கடமையே கண்ணாக நிற்கிறார்.''

''அப்படியோ! சரி அடுத்த விடயம். ஆறுமுகன் தொண்டமான் எப்போ அமைச்சுப்பதவியைப் பொறுப்பேற்கிறார்?''

''இது கப்சா நம்.2. அப்படி ஏதும் நோக்கம்,சிந்தனை,எண்ணம், நினைப்பு,எதிர்பார்ப்பு எதுவுமே இல்லையாம். இது யார் கொடுத்த கயிறு என்று வினாவுகிறார்கள் இ.தொ.கா.வினர்.''

''அப்படியா! என்னய்யா எல்லா ஊடகங்களிலும் வந்ததே!''

''அதென்னவோ எனக்குத் தெரியாது. அண்மையில் எரிபொருள் மின் சக்தித்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த—மேல் கொத்மலை நீர் மின் நிலையம் தொடர்பாகக் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்துக்கு சென்ற ஆறுமுகன் இந்த நீர் மின் நிலையம் தொடர்பாகத் தனது கண்டனத்தைத் தெரிவித்து வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டு வந்துவிட்டாராம். அமைச்சர் பதவி எடுப்பதாக இருந்தால் அமுக்கி அல்லவா வாசித்திருப்பார் என்று கேட்கிறார்கள் அவரது ஆட்கள்''

''நியாயம் தான். ஆனால், இப்படி இருக்குமோ? 'நீ அடிக்கிறமாதிரி அடி.. நான் அழுகிற மாதிரி அழுகிறேன்' என்ற தந்திரமோ தெரியவில்லை''

''ஐயா! இந்த அரசியல் சாணக்கியம் எல்லாம் எனக்குத் தெரியாது. அவர்கள் சொன்னதை—உங்களிடம் சொல்கிறேன். வேறு எதுவும் எனக்குத் தெரியாது. ஆளை விடும்'' என்று தலைக்கு மேலே கையை வைத்துக் கும்பிட்டார்.

''நில்லும் நில்லும். இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. ஜே.வி.பியின் தலைவர்களுள் ஒருவரான விமல் வீரவன்ச என்ன இப்படி ஜனாதிபதியைப் போட்டுத் தாக்கியிருக்கிறாரே!'' ''ஓ... அதுவா? நித்திரையில்லாமல் தவித்தார். ஐம்பது சதம் பெறுமதி.இல்லாமல் இருந்தார். நாங்கள் தான் எல்லாவற்றுக்கும் விமோசனம் கொடுத்தோம். என்று புளுகித் தள்ளியிருக்கிறாரே? அதையா கேட்கிறீர்?''

''அதுவே தான்'' என்றோம் நாம்.

''இதனை விலாவாரியாக விசாரித்து குறிப்பெடுத்து வைத்திருக்கிறாராம் அம்மையார். கடும் சினத்துடனான பதிலடி ஒன்று விரைவில் வெளிவருமாம்'' என்று சொன்னவர் ''பாய்'' என்றபடி பயணமானார்.

# அடுத்தது யார்?

நவம்பர் 2ஆம் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல். வெற்றி பெறப்போவது யார்? வாக்களிக்கும் கடைசி நிமிடம் வரை அது தெரியாமலேயே போகக் கூடும். 2000ஆம் ஆண்டு தேர்தல் போன்றே கடும் சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே ஒருவர் வென்று அதிபராகலாம்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோரை விட ஒரு சில வாக்கு வித்தியாசத்திலேயே வென்று அதிபரானார் வில்லியம் புஷ். பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் மீண்டும் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் இந்த மயிரிழை வித்தியாசத்தில் புஷ் வென்றார் என்று அறிவிக்கப்பட்டது. இப்போதும் அதேபோன்றதொரு நிலை.



குடியரசுக் கட்சி வேட்பாளர் புஷ்ஷுக்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கெரிக்கும் இடையில் வாழ்வா சாவாப் போராட்டம் நடக்கிறது. கடைசி நேரப் பிரசாரத்தில் அனல் பறக்கிறது.

ஈராக் போர் விவகாரத்தை வைத்து புஷ்ஷைப் போட்டுத் தாக்கி வருகிறார் கெரி. பதிலுக்கு தனது போட்டியாளரிடம் எந்தத் திட்டமோ எதிர்காலப் பார்வையோ இல்லை என்றும் ஆனால் நீண்ட குற்றச்சாட்டுப் பத்திரிகை மட்டுமே இருக்கிறது என்றும் புஷ் தரப்பு என்னதான் காட்டுக் கத்தல் கத்தினாலும், அமெரிக்க மக்கள் மத்தியில் கெரிக்கு ஆதரவு இருக்கத்தான் செய்கிறது.

தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில், அமெரிக்காவின் மிகப் பிரபலமான பத்திரிகைகளான 'வோஷிங்டன் போஸ்ட்', 'நியூயோர்க் டைம்ஸ்' ஆகியன வேட்பாளர் கெரிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. நியூயோர்க் எப்போதுமே ஜனநாயகக் கட்சியின் கோட்டையாக இருக்கும் பகுதி. ஆனால் 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை கெரிக்கு ஆதரவு தெரிவித்திருப்பது முக்கிய திருப்பமாகவே பார்க்கப்படுகின்றது.

இறுதி நேரத்தில் கிளின்டன் வேறு கெரிக்கு ஆதரவாகக் களம் இறங்கி இருக்கிறார். அமெரிக்காவில் இன்னும் கிளின்டனுக்கு கவர்ச்சிகரமான செல்வாக்கு மிச்சம் இருக்கின்றது.

புஷ் தரப்புக்கு ஆரம்பத்தில் இருந்த அதே நிலைதான் தொடர்கிறது. இறுதிநேர வசீகரங்கள் கிடைக்கவில்லை. ஆனாலும் போட்டியில் மோசமான பின்னடைவுகளும் அவருக்கு இல்லை.

கடைசிப் பந்துவரை எந்தத் தரப்பு வெல்லப் போகிறது என்று கதிரை நுனியில் நகங்கடித்தபடி அமர்ந்திருக்க வைக்கும் கிரிக்கெட் ஆட்டம் மாதிரியான பரபரப்புடன் நகர்ந்து கொண்டிருக்கிறது அதிபர் தேர்தலும். ஒவ்வொரு பந்துக்கும் வெற்றி வாய்ப்பு அணி மாறிக் கொண்டே இருக்கிறது. ஒரு நாளைக்கு புஷ் ஒரு சதவீதத்தால் முன்னணிக்கு வந்தால் மறுநாள் கெரி அதேயளவு சதவீதத்தால் முன்னணிக்கு வருகிறார்.

புளோரிடா, பென்சில்வேனியா, ஒகியோ, மினோசோட்டா, விஸ்கொன்சின், ஐயோவா, நவாடா, நியூமெக்ஸிக்கோ, நியூ ஹம்ஷெயர் ஆகிய மாகாணங்களில் யாருக்கு அதிக ஆதரவு இருக்கின்றது என்பது தெளிவாகவில்லை. இவற்றின் முடிவுகள்தான் அடுத்த அதிபர் தேர்வில் முக்கிய பங்கு வகிக்கப் போகின்றன.

அடுத்த அதிபர் யார் என்பதைத்தான் உலகம் முழுதும் ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. தேர்தல் முடிவு மட்டுமே அதைச் சொல்ல முடியும். முன்னரே அதனை ஊகிப்பது கடவுளால் மட்டுமே சில வேளைகளில் முடியக்கூடியது.


# வர்த்தகச் சின்னம் பற்றிய எச்சரிக்கை அறிவித்தல்

**CHILLINGTON**

(REGISTERED TRADE MARK IN ENGLAND)

**CROCODILE**

"குரொக்கடைல் ஹவுஸ்", ஸ்ட்ரோபரி ஒழுங்கை, விலென்ஹோல், வெஸ்ட் மிட்லன்ட்ஸ், WV13 3RS, இங்கிலாந்து என்னும் முகவரியிலுள்ள த சிலிங்டன் டூல் கம்பனி லிமிட்டெட் நிறுவனமே இலங்கையில் "முதலை" மற்றும் "சிலிங்டன்" வர்த்தகச் சின்னங்களினதும் சர்வதேச 6ஆம் பிரிவிலான மண்வெட்டிகள், மண்வாரிகள, கடப்பாரைகள், சம்மட்டிகள், சாந்தகப்பைகள், குப்பைவாரிகள், அலவாங்குகள் முதலியவற்றிலுள்ள முதலைச் சின்னத்தினதும் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளராக விளங்குகின்றது.

பதிவுசெய்யப்பட்ட இந்த வர்த்தகச் சின்னங்களை முற்றிலும் ஒத்த வர்த்தக அடையாளச் சின்னங்களைக் கொண்ட வேறு மண்வெட்டிகள் இப்போது இலங்கையில் விற்பனை செய்யப்படுவதாகத் தெரியவந்துள்ளது. இது பொதுமக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை உண்டுபண்ணக்கூடிய செயலாகும். இவ்வாறு விற்கப்படும் மண்வெட்டிகள் த சிலிங்டன் டூல் கம்பனி லிமிட்டெட் நிறுவத்தினால் உற்பத்தி செய்யப்பட்டவை அல்ல.

சிலிங்கடன் மண்வெட்டிகள் மற்றும் மண்வாரிகள் முதலிவற்றை இலங்கையில் விநியோகிக்கும் ஏகபோக உரிமை இல. 38, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11 என்னும் முகவரியில் அமைந்துள்ள சிற்றி ட்ரேடிங் கம்பனிக்கு மட்டுமே உள்ளது என்பதைப் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகிறோம், இக் கம்பனியின் தொலைபேசி: 94-011-2345891, ∴பெக்ஸ் 94-011-2593151,
ஈ-மெயில்: office@macksons.com

உற்பத்தியாளர் அல்லது உள்நாட்டு விநியோகத்தர் அல்லது அதிகாரம்பெற்ற வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யப்படாத பொருள்களுக்குத் தரச்சிறப்பு உத்தரவாதம் எதுவும் கிடையாதெனவும் த சிலிங்டன் டூல் கம்பனி லிமிட்டெட்டின் உரிமைகளை மீறும் விதத்தில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு அல்லது உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டால், மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தகச் சின்னங்களின் பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் என்ற வகையில் த சிலிங்டன் டூல் கம்பனி லிமிட்டெட் தனது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமெனவும் பொதுமக்கள் மற்றும் வியாபாரத் துறையினருக்கு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

*திருவாளர்கள் முருகேசு அன்ட் நீலகண்டன்*
சட்டத்தரணிகள்
M&N கட்டடம் (5ஆம் தட்டு)
இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3, இலங்கை.
தொலைபேசி: 2371100 ∴பெக்ஸ்: 2371111 & 2371122

*த சிலிங்டன் டூல் கம்பனி லிமிட்டெட்*
"குரொக்கடைல் ஹவுஸ்" ஸ்ட்ரோபரி ஒழுங்கை,
விலென்ஹோல், வெஸ்ட் மிட்லன்ட்ஸ்,
WV13 3RS, இங்கிலாந்து.
தொலைபேசி:(44 1902)826826, ∴பெக்ஸ்: (44 1902)826827


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிறைவேற்றதிகார ஜனாதிபதி......

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் இந்த நாட்டின் எதிர்காலம் பற்றி என்னதான் சொல்ல முடியும்?

## முஸ்லிம் தலைமைகளின் போக்கு

ஜனாதிபதியின் இந்த அரசியல் காய் நகர்த்தல்கள் தொடர்பில் முஸ்லிம் தலைமைகள் சமூகத்தின் எதிர்காலம் குறித்து எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றன? இந்த விவகாரத்தை அவரவர் வாசிக்கு – அரசியல் சுயநலத்துக்கு முஸ்லிம் தலைவர்கள் கையாளப்போகிறார்கள் என்பதை



ரணில்விக்கிரமசிங்க

அவர்களது கருத்துக்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி, அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன சந்திரிகாவுக்கு சார் பான நிலைப்பாட்டையும், ஐக்கிய தேசியக் கட்சியின் தோழமைக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அதன் தலைவர் ரவூப் ஹக்கீமின் வழிநடத்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்த வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டையுமே கொண்டிருக்கின்றன.

''நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுலில் இருப்பதே சிறுபான்மையினருக்கு விசேடமாக முஸ்லிம் சமூகத்திற்குப் பாதுகாப்பானது'' என்ற வாதத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்து வருகிறது. இக்கருத்தை அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார்.

இந்த நிலைப்பாட்டையே மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் கொண்டிருந்தார் என ரவூப் ஹக்கீம் ஞாபகமூட்டியும் வருகிறார். இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் கடைப்பிடித்து வருவதனாலேயே நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்ற எடுக்கும் ஜனாதிபதியின் முயற்சியை மு.கா. எதிர்ப்பதாகவும் கூறுகின்றார் ரவூப் ஹக்கீம்.

''நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பான விடயம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது'' என தேசிய ஐக்கிய முன்னணி (நுஆ) செயலாளர் நாயகமும், ஊடகத்துறை பிரதி அமைச்சருமான எம்.எச்.சேகு இஸ்ஸதீன் கூறியுள்ளார்.

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டபோது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே, அதன் கொள்கையாக இருந்தது'' எனவும் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

## அஷ்ரப் நம்பிய ஜனாதிபதி

''ஆர்.பிரமதாஸ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது, அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பின், நம்பிக்கையைப் பெற்றிருந்ததால், அக்காலப் பகுதியிலேயே ஜனாதிபதி முறை விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு சற்றுமாற்றமடைந்



அதாவுல்லா

தது'' எனவும் விபரிக்கிறார் சேகு இஸ்ஸதீன்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ மட்டும் ஒரு வித்தியாசமான தலைவராகவே நோக்கப்பட்டார். முஸ்லிம்களின் நன்மதிப்பை அவர் பெற்றிருந்தார். மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபும் அவருடன் நெருக்கமாகப் பழகி, சில விடயங்களைச் சாதித்தார். அதனால் பிரேமதாஸ தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவிவகிப்பதை அஷ்ரப் விரும்பியிருந்தார். அது குறித்து பகிரங்கமாகவும் பேசி வந்தார்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு பிரேமதாஸவை ஆதரித்து நம்பிக்கை வெளியிட்டதுபோன்று மர்ஹூம் அஷ்ரப், ஆட்சியின் பங்காளியாக – அமைச்சராக இருந்தும் கூட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நம்பிக்கைக்குரியவராகப் பார்க்கவில்லை.

அஷ்ரபின் அந்திய காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவர் வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். முஸ்லிம் சமூகத்திற்கு சந்திரிகா அம்மையார் அநீதி இழைத்து விட்டார், முஸ்லிம் காங்கிரஸை ஏமாற்றி விட்டார் என அஷ்ரப் பகிரங்க அறிவிப்புச் செய்திருந்தார்.

## சந்திரிகாவை நம்பும் தலைவர்கள்

ஆனால், இன்று சில முஸ்லிம் தலைவர்கள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை முழுமையாக நம்புகின்றனர். முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களது உரிமைகளை அடைந்து கொள்வதற்கும் சந்திரிகா அம்மையார் பக்கபலமாக இருப்பார் என அவர்கள் கூறி வருகின்றனர்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்புத் தேவையில்லை என்றும், எல்லாவற்றையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பார்த்துக் கொள்வார் எனவும் அவர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர்.


அதனால் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இல்லாதொழிக்கப்படுவதன் மூலம் சந்திரிகா அம்மையார் நாடாளுமன்றத்திற்கு வந்து நாட்டின் தலைவியாகத் தொடர்ந்தும்பதவி வகிக்க வேண்டும் என்பதை அவர்கள் ஆசித்து வருகின்றனர்.

இந்த நிலைப்பாட்டை அமைச்சர்கள் பேரியல் அஷ்ரப், அதாவுல்லா, பிரதியமைச்சர்கள் சேகு இஸ்ஸதீன், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் கொண்டிருக்கின்றனர்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடரவேண்டுமா அல்லது இல்லாதொழிக்கப்பட வேண்டுமா என்பதை விடச் சந்திரிகா அம்மையார் தொடர்ந்தும் நாட்டின்தலைவியாக இருக்க வேண்டும் என்பதையே அவர்கள் விரும்புகின்றனர்.

## ரணிலை நம்பும் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமைப் பொறுத்தவரை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதி



ரவூப் ஹக்கீம்

யாகக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டுகின்றார். ரணிலை ஹக்கீம் முழுமையாகவே நம்பியுள்ளார்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையே சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பானது. அது இல்லாதொழிக்கப்படாது தொடரவேண்டும் என்கின்ற முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை நிலைப்பாட்டை ஹக்கீம் தனது தனிப்பட்ட விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பயன்படுத்தி வருகிறார்.

ஆக, மொத்தத்தில் ஜனாதிபதி முறைமை தொடர்பில் முஸ்லிம்தலைவர்கள் மாறுபட்ட நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றனர். அவை முஸ்லிம் சமூக நலன் கருதியது என்பதை விடத் தேசிய அரசியலில் தமது பாத்திரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான வியூகத்தை அடிப்படையாகக் கொண்டவையாகவே தெரிகிறது.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங்ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஆங்கில காட்டூன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி சிறுவர் | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | ஞாயிறு சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சண்டே சமையல் | மங்கையர் நேரம் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரி.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 1.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | (பாண்டவர் பூமி) | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.00 | (காதல் காவியம்) | (அதிரடி) | (நகைச்சுவை) | (கிளசிக்) | (குடும்பம்) | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்திதிரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.00 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மை டியர் பூதம் | மை டியர் பூதம் | சக்தி திரைப்படம் | விக்கிரமாதித்தன் | சூப்பர் 10 பாடல்கள் |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | கிட்ஸ் சோன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | விசேட நிகழ்ச்சி |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் காட்சிகள் | என்றும் கலாட்டா | நகைச்சுவை நேரம் | என்றும் கலாட்டா |
| 5.30 | பாடல்கள் ரமழான் சிறப்பு நிகழ்ச்சி5.45 | பாடல்கள் ரமழான் சிறப்பு நிகழ்ச்சி5.45 | பாடல்கள் ரமழான் சிறப்பு நிகழ்ச்சி5.45 | இளந்தளிர் ரமழான் சிறப்பு நிகழ்ச்சி5.45 | பாடல்கள் ரமழான் சிறப்பு நிகழ்ச்சி5.45 | ரமழான் சிறப்பு நிகழ்ச்சி5.45 | ரமழான் சிறப்பு நிகழ்ச்சி |
| 6.00 | ரமழான் சிறப்பு நிகழ்ச்சி | ரமழான் சிறப்பு நிகழ்ச்சி | ரமழான் சிறப்பு நிகழ்ச்சி | ரமழான் சிறப்பு நிகழ்ச்சி | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | புத்தம் புதிசு | மின்னல் |
| 6.30 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | மியூசிக்கல் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | மியூசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுடி உதிர்தலும் இரும்புச் சத்தின் அவசியமும்

கேள்வி:- பெண். வயது24. திருமண மாகி 3 மாத கர்ப்பமாக இருக்கிறேன். ஒரு நாள் திடீரென்று கால் வழுக்கி விழுந்து விட்டேன். இரண்டு நாள் வயிறு வலித்தது. இப்பொழுது ஒரு வருத்தமும் இல்லை. நான் விழுந்ததால் எனது வயிற்றில் உள்ள குழந்தைக்கு ஏதாவது ஆகியிருக்குமா?

பதில்:- கால் தடுக்கி விழுந்தாலோ, படியில் தவறிச் சறுக்கி விழுந்தாலோ– கருவில் இருக்கும் சிசுவுக்கு ஒன்றும் ஆகிவிடாது. கருவானது சுற்றி வர நீர் உள்ள சூழலில் தடித்த கருப்பைச் சுவர் உள்ள அறையினுள் வாழ்கின்றது. சிறிய தாக்கங்கள் அதனை ஒன்றும் செய்யாது. நேருக்கு நேர் மோதிக்



கொண்ட கார்விபத்து ஒன்றில் தாய் இறந்தும் கூட கருவில் உள்ள சிசு உயிர் வாழ்ந்த சம்பவங்கள் மருத்துவ சஞ்சிகையில் படித்துள்ளேன். சில வேளைகளில் – கருச்சிதைவு ஏற்படக்கூடிய உடல்நிலையில் உள்ள தாய்மார்களுக்கு சிறிய அளவினதான தாக்கங்கள் கூடக் கருவைக் கலைத்துவிடும். அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுபவர்கள் கவனமாக இருக்க வேண்டும். குனிவது, குனிந்து வேலை செய்வது, குனிந்து பாரங்களைச் சுமப்பது போன்ற காரியங்களை கர்ப்பிணிகள் தவிர்ப்பது நல்லது.

கேள்வி:– ஆண். விடுதியில் தங்கி கல்வி கற்கிறேன். இங்கு கல்வி கற்கும் ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கிழமை இரவில் குளோரோகுவின் (chloroquine) மாத்திரைகள் இரண்டு, இரும்பு சத்து மாத்திரை ஒன்று, போலிக் அசிட் மாத்திரை ஒன்று தருவார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் வேப்பம் பட்டைக்கஷாயம் குடிக்கத்தருவார்கள். இவற்றை உபயோகிக்கும் போது எனக்கு ஒவ்வொரு தடவையும் குளிரோடு கூடிய காய்ச்சல் போன்ற நிலைஏற்படுகின்றது. வயிற்றோட்டம், சமிபாட்டுக் குறைவு ஏற்படுகின்றன. உடல் சோர்வு ஏற்படுகிறது. விடுதியில் தங்குபவர்கள் கட்டாயம் மாத்திரைகள் எடுக்க வேண்டும் என்பதால் இந்த மாத்திரைகளை மறுக்கவும் முடியாது. ஆலோசனை தரவும்.

பதில்:– நீங்கள் இருக்கும் இடம் மலேரியா நோய்வரக்கூடிய இடமாகும். அதனால் தான் உங்களுக்கு முன் எச்சரிக்கையாக பாதுகாப்புக்கருதி குளோரோகுவின் மாத்திரைகள் வாரத்துக்கு ஒருதடவை தருகின்றார்கள். வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் எம்மவர்கள் கூட மலேரியா வந்துவிடக் கூடாது என்று வட பகுதிக்குச் செல்லும் போது முன் எச்சரிக்கையாக இந்த மாத்திரையை வாரத்துக்கு ஒரு தடவை உபயோகிப்பது வழக்கம்.

உங்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குளோரோகுவின் மாத்திரைகளை உண்பதால் ஏற்படும் பக்க விளைவுகளே. இன்னும் விளக்கப் போனால் ஹோமியபதி (homeopathy) வைத்தியத்தின் தந்தை எனப்படும் ஹீன்மன், ஹோமியபதி தத்துவமான ஒரு மருந்து சாதாரண மனிதர்களுக்கு கொடுக்கப்படும் போது ஏற்படும் விளைவுகள் – குணநலன்கள் என்பவற்றை அவதானித்து அந்தக் குணநலன்களோடு ஏற்படும் நோய்க்கு அதே மருந்து கொடுத்துக் குணமாக்கலாம் என்பதை விளக்க குயினைன் (quinine) மருந்தை உபயோகித்தார். சாதாரண மனிதருக்கு குயினைன் மருந்தை கொடுத்தால் குளிராடு காய்ச்சல் ஏற்படும். எனவே குளிரோடு காய்ச்சல் வரும் மலேரியா நோய்க்கு குயினைன் சிறந்த மருந்து என்று அந்த வைத்திய நிபுணர் நிரூபித்தார். நீங்கள் எடுக்கும் குளோரோகுயின் மருந்தும் குயினைன் மருந்தின் அடிப்படை ரசாயன குணத்தைக் கொண்டது. அதனால் தான், சாதாரண சுகதேகியான உங்களுக்கு இந்த மருந்தைத் தரும்போது குளிரோடு காய்ச்சல் ஏற்படும் . இப்போது புரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன். இன்று மலேரியா வராமல் தடுக்க குளோரோகுயின் மருந்தை விட வேறு மருந்துகள் உள்ளன. அவற்றில் சில Maloprim, mefloquine என்பன. ஆனால் குளோரோகுவின் விலைமலிவு என்பதால் பரந்த அளவில் உபயோகிக்கப்படுகிறது. உங்கள் விடுதி மருத்துவரிடம் இந்தப் பிரச்சினையைக் கூறி உமக்கு மட்டுமாவது மேற்கூறிய மருந்தில் ஒன்றை வாங்கி உபயோகிக்க கோரலாம். சித்த வைத்தியத்தில் வேப்பம் பட்டைகஷாயம் மலேரியாத் தடுப்புக்கு உபயோகிப்பதுண்டு. தனியே வேப்பம் பட்டையை அவித்துக் குடிப்பதால் வேண்டிய பலன் ஏற்படாது. மலேரியா கஷாயத்தில் வேப்பம் பட்டை, பற்படாகம் வாடாமஞ்சள், மல்லி போன்ற வேறு சில சரக்குப் பொருட்களும் சேர்த்து அவித்துக் குடித்தால்தான் பிரயோசனம் தெரியும்.

*கேள்வி:-எனது குழந்தை ஆண். பிறந்து 2 மாதம் ஆகிறது. பிற்பகல் 3 மணி என்றதும் வீறிட்டு அழத்தொடங்குகின்றான். அழத் தொடங்கினால் இரவு பத்து பதினொரு மணி வரை துடித்துத் துடித்து அழுவான். பசியால் அழுகிறான் என்று பால் கொடுத்தாலும் குடிப்பது இல்லை. வயிற்றில் பிரச்சினை என்று டாக்டரிடம் கொண்டு சென்றேன். இது சில குழந்தைகளுக்கு இந்த வயதில் ஏற்படும் சாதாரண நிலைதான் பயப்படவேண்டாம் என்று அறிவுரை மட்டும் தந்தார். சிலவேளைகளில் கத்தும் போது வாயு வெளியேறுகிறது. வாயுகுழப்பம் என்று பெரியவர்கள் சொல்கின்றார்கள். இதனால் மனம் சஞ்சலமாக இருக்கிறது. இது நோயா? நான் என்ன செய்யவேண்டும். ஆலோசனை தரவும்.*

பதில்:- ஒரு படித்த டாக்டர் பரிசோதித்து விட்டு இந்த அழுகை ஒரு நோயின் குறியல்ல என்று சொன்னபடியால் நீங்கள் அஞ்சத்தேவையில்லை. அவர் கூறியபடி இது சில குழந்தைகளின் 2 மாத முடிவில் ஆரம்பமாகி 3 மாதம் நிறைவேறும் போது தானாகவே சரியாகிவிடும். இதனை மூன்று மாத வயிற்றுவலி என்ற கருத்தில் THREE MONTH COLIC என்று அழைப்பர். குழந்தை வயிற்றை இறுக்கி முக்கி அழுவதால் குடலில் உள்ள வாயு வெளியேறுவதுண்டு. ஆனால், வாயுதான் இந்த அழுகைக்குக் காரணமல்ல. இதற்கு என்ன காரணம் என்று சரியாக அறியப்படவில்லையாயினும் பசித்து அழுவதாயின் அணைப்புக்கு அழுவது அல்லது NAPPY என்று துண்டு நனைவதால்



அழுவதுஎன்று சில காரணங்கள் சொல்லப் பட்டாலும், இந்த காரணங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும், குழந்தை அழுவதை நிறுத்துவதில்லை. ஆனால், எப்படியோ மூன்று மாத முடிவில் இந்தப் பிரச்சினை தீர்ந்த்துவிடும்.

கேள்வி:–பெண். வயது 21. மாதவிலக்கு

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

ஒழுங்கில்லை. இரு மாதத்திற்கு ஒருதடவை வருகின்றது. இதனால் உடல் பருத்துவிடுமா? தலைமயிரும் கொட்டுகின்றது. கீரைவகைகள் சாப்பிட்டால் மயிர் அடர்த்தியாக வளரும் என்கிறார்கள். நிறையக்கீரை சாப்பிட்டும் பலன் காணவில்லை பரிகாரம் கூறவும்.

பதில்:– மாதவிலக்கின் ஒழுங்கீனத்திற்கு பல காரணங்கள் உண்டு. உடலின் ஹோர்மோன்களின் செயல்பாடு சரிவர நடைபெறாதது, உடலில் இரும்புச்சத்து குறைவாக இருப்பது, உடலில் கொழுப்புச் சத்து அதிகமாவதால்கருப்பையில் கொழுப்புப் படை உருவாவது என்பன சில முக்கிய காரணங்களாகும். அதிலும் உங்களுக்கு தலைமயிர் உதிரும் குணமும் இருப்பதால் ஓரளவுக்கு உங்கள் சுகயீனத்தை நிதானிக்கமுடிகிறது. தலைமயிர் கொட்டுவதற்கு முக்கிய காரணம் மயிர்வளர தேவையான போஷாக்குக்கு சத்து கிடைக்காமல் இருப்பதே. தலைமயிரின் போஷாக்குக்கு இரும்பு சத்து முக்கியம். இந்த இரும்பு சத்து உங்கள் உடம்பில் குறைவாக இருக்கலாம் என்று நம்புகிறேன். இந்த இரும்புச் சத்து குறைவாக இருப்பதன் தாக்கத்தினால்தான் உங்கள் மாதவிலக்கு கோளாறும், தலைமயிர் உதிர்தலும் ஏற்படுகின்றன. எனவே, இரும்புச் சத்துத் தரும் உணவு உட்கொள்ள வேண்டும். கீரை வகைகளில் இரும்புச் சத்து நிறைய உண்டு. ஆனாலும், குறைபாடு உள்ள நேரத்தில் உணவு வகைகளோடு இரும்பு சத்து மாத்திரைகளும் உட்கொள்வது நல்லது. எதற்கும் மாதவிலக்கு பிரச்சினைக்கு ஒரு பெண் நோயியல் நிபுணரின் ஆலோசனை பெறுவது விரும்பத்தக்கது.

# மெழுகுச் சிலையாக ஐஸ்வர்யராய்

*50 கிலோ தாஜ்மஹால், அழகு தேவதை, அழகுச் சிலை என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட முன்னாள் உலக அழகி*



*யும் நடிகையுமான ஐஸ்வர்யராய் நிஜமாகவே அழகுச் சிலையாக மெழுகில் வடிக்கப்பட்டுள்ளார்.*

*லண்டனில் மிகப் பிரபல்யமாகவுள்ள Madame Tussauds என்று அழைக்கப்படும் மெழுகுச் சிலைஅருங்காட்சியகத்தில்ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள பிரபல்யங்களின் சிலைகளுடன். இந்த அழகுச்சிலையும் புதிதாக இணைந்துள்ளது.*

*உலகப்பிரபல்யம்வாய்ந்த இந்த அழகி, ஓர் ஆங்கிலத் திரைப்படத்தில் நடிக்கச் செல்வதன் மூலம் Bollwood உலகிலிருந்து Holly wood உலகிற்கு அகலக் கால் பதிக்கின்றார்.*

*தனது தாயுடன் சிலைக் கருகே நின்றபோது, தன்னைக் குளோனிங் செய்தது போல, மெழுகுச்சிலை அச்சொட்டாக தன் உருவத்தைக் கொண் டிருப்பதாக இவர் பாராட்டியிருக்கிறார்.*

*200 ஆண்டுகள் பழமை வாய்ந்த Madame Tussauds என்று இந்த நிறுவனம் லண்டன் உட்பட நியூயோக், லாஸ் வெகாஸ், அம்ஸ்ரடாம், ஹொங்கொங் ஆகிய நகரங்களிலும் தன் அருங் காட்சியங்களை திறந்து வைத்துள்ளது. காந்தித் தாத்தாவும் இங்கே துண்டுத் துணியுடன் நின்றுகொண்டிருக்கும் இன்னொரு இந்தியப் பிரபல்யம் ஆவார்.*


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரு.30,000.00 | ரு. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரு.15,680.00 | ரு. 23,520.00 |
| C.M. | ரு. 98.00 | ரு.147.00 |
| Page Specified C.M.Cl | ரு.122.50 | ரு. 183.75 |
| Contract ADV. | ரு. 70.00 | ரு. 110.00 |
| (250-300 Col. Cms) | | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தாள் 'சந்திரமுகி'

ரஜனியின் 'சந்திரமுகி' படத் தொடக்கவிழா கடந்த 23 ஆம் திகதியன்று சிவாஜி கணேசனின் வீட்டில் நடந்தது. படப் பூஜையில் கமல் உட்பட நடிகர், நடிகைகள் பலர் கலந்து கொண்டனர். படப்பிடிப்பு 24 ஆம் திகதி ஆரம்பமாகியது.

'மன்னன்' படத்துக்குப் பின்னர் சிவாஜி புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் ரஜனிகாந்த் 'சந்திரமுகி' என்ற படத்தில் நடிக்கிறார். படத்தை பி.வாசு இயக்குவார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விஜயதசமியன்று 'சந்திரமுகி' படத்தின் பூஜை தி.நகரில்உள்ளசிவாஜி க ணே ச னி ன் வீட்டில் ந டை பெற்றது. காலை 10.52 மணிக்கு சி வா ஜி வீ ட் டி ற் கு ரஜனி வந்தார். அவரை நடிகர் பிரபு வரவேற்றார். காலை 11 மணிக்கு பூஜை முடிந்தது. சிவாஜியின்மனைவி கமலா, ரஜனிக்கு திலகமிட்டு வாழ்த்தினார். பின்னர் இயக்குநர்கள், நடிகர்கள், விநியோகஸ்தர்கள் ரஜனிக்கு வாழ்த்து கூறினர்.


-நயன்தாரா-

'படப்பிடிப்பு எப்போது தொடங்குகிறது' என்று ரஜனியிடம் செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு, 'நாளை படப்பிடிப்பு தொடங்குகிறது' என்று கூறினார். உங்களுக்கு ஜோடியாக நடிக்கப் போகும் நடிகை யார்?'' என்று கேட்டதற்கு, ''அது இன்னமும் முடிவாகவில்லை'' என்று ரஜனி காந்த் பதில் அளித்தார்.

நடிகர் பிரபு செய்தியாளர்களிடம் பேசுகையில் ''இரண்டொரு நாட்களில் படப்பிடிப்பு ஆரம்பிக்கும். சென்னை அல்லது ஹைதராபாத்தில் படப்பிடிப்பை நடத்த இருக்கிறோம். படத்தில் ரஜனியுடன் நான், சிம்ரன், நஜன்தாரா, விஜயகுமார், நாசர், வடிவேலு உட்பட பலர் நடிக்கின்றனர். ஐஸ்வர்யாராய் இந்தப் படத்தில் நடிக்க வில்லை. படத்திற்கு வித்தியாசாகர் இசையமைக்கிறார்'' என்றார்.

பி.வாசு செய்தியாளர்களிடம் பேசிய போது. ''படத்தில் ரஜினிக்கு, 'சரவணா' என்று பெயர் சூட்டியிருக்கிறோம். இந்தப் படம் 'ராஜாதி ராஜா' மாதிரி ஜாலியான பொழுது போக்குப் படமாக அமையும். ரஜனியின் ஜோடி இன்னும் முடிவாகவில்லை. 80 சதவீதம் அது புதுமுகமாகவும் இருக்கலாம். அதாவது ஓரிரு படங்களில் மட்டும் நடித்தவராகவும் இருக்கலாம். மாளவிகா, ஷீலா ஆகியோரும் நடிக்கின்றனர். படத்தில் வில்லன் கிடையாது. பாடல்களை பல கவிஞர்கள் எழுதுவார்கள். பாடல் கம்போசிங் நடந்து கொண்டிருக்கிறது'' என்று கூறினார்.

''வழக்கமாக ரஜனியின் புதிய படத்தின் ஆரம்ப விழா ஏ.வி.எம்., ஸ்டூடியோவில் உள்ள பிள்ளையார் கோயிலில் தான் நடைபெறும். இந்த முறை சிவாஜி வீட்டில் நடத்தப் பட்டிருக்கிறதே என்று கேட்டதற்கு, இதைவிட உணர்வு பூர்வமான இடம் வேறு இல்லை'' என்று பி.வாசு கூறினார்.

கடந்த 24 ஆம் திகதி ஹைதராபாத்தில் தொடங்கிய படப்பிடிப்பில் முதல் காட்சியாக சண்டைக் காட்சி எடுக்கப்பட்டது. அதில் ரவுடிகளுடன் மோதினார் ரஜினி.

இதற்கு முன்னர் கே.எஸ். ரவிக்குமாரின் இயக்கத்தில் ஜக்குபாய் என்ற படத்தில் தான் நடிக்க உள்ளார் என தெரிவித்தார் ரஜனி.

சாமி படத்தைப் பார்த்துவிட்டு அப் பட நாயகனான விக்ரமை புகழ்ந்த ரஜனி இயக்குநர் ஹரியின் இயக்கத்திலும் நடிக்க உள்ளார் எனவும் அறிவித்தார்.

ஆனால், அத்தனையையும் தவிடு பொடியாக்கிவிட்டு யாரும் எதிர்பார்த்திராத வகையில் பி.வாசுவின் இயக்கத்தில் நடிக்க இருப்பது தென் இந்திய சினிமா வட்டாரத்தில் உள்ளவர்களை மூக்கின் மேல் விரல் வைக்க வைத்துள்ளது. சந்திரமுகி வெளியானால்தான் எல்லாம் புரியும்.


- ரஜினி, கமல்-

## மீண்டும் நதியா

'குமரன் சன் ஆப் மகாலட்சுமி' என்ற படத்தில் தாய் வேடத்தில் வந்து சென்றாலும் நதியாவின் நடிப்பு எல்லோரையும் கவர்ந்து விட அவரை ஒப்பந்தம் செய்ய தமிழ் சினிமாக்காரர்கள் மும்முரம் காட்டுகிறார்கள்.

சத்தியராஜ் நடிக்கும் புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக ஒப்பந்தம் ஆகியிருக்கிறார் நதியா. தொடர்ந்து அவர் மீண்டும் தமிழ் சினிமாவில் ஒரு ரவுண்ட் வலம் வருவார் என்று நம்பப்படுகிறது.

## 'நிலா'வில் 4வயதுச் சிறுமி

'உதயா கௌசல்யா பிக்சர்ஸ்' என்ற புதிய நிறுவனம் நாலரை வயதுக் குழந்தையை மையமாக வைத்து 'நிலா' என்ற புதிய படத்தைத் தயாரிக்கிறது. ஹிந்திப் படம் மற்றும் பல விளம்பரப் படங்களில் நடித்து, பிரபலமாகியுள்ள பேபி வன்ஷிகா இந்தப் படத்தில் 'நிலா'வாக நடிக்கிறார்.

ஒரு குழந்தைக்காக 4 கதாநாயகர்கள் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்கிறார்கள். தங்களின் வாழ்க்கையை ஏன் அந்தக் குழந்தைக்காக தியாகம் செய்கிறார்கள் என்பதுதான் கதை.

நான்கு புதியவர்கள் கதாநாயகனாக இந்தப் படத்தில் அறிமுகமாகிறார்கள். ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் பிரபல முன்னணி நடிகை ஒருவர் நடிக்கவுள்ளார். இவர்களுடன் மேலும் பல நட்சத்திரங்கள் நடிக்கவுள்ளார்கள்.

'நிலா' படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் ஜோ.கிரிஷ்.கார்த்திக்ராஜாவின் இசையில்ஜனரஞ்சகத்துடன்தயாரிக்கப்படும் இப் படத்தின் தயாரிப்பு, மேற்பார்வையினை உதயகுமார், எஸ். ஜே.ஆர். கவனிக்க, ஏ.ஜெயசீலன் இப்படத்தை இயக்குகின்றார். அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இப்படம் திரைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இராணுவச் சிப்பாயாக நெப்போலியன்

ஜி.என்.டி. விஷன் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிட்டெட் என்னும் பட நிறுவனம் வீரண்ணா என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்கிறது. நெப்போலியன் இந்தப் படத்தின் கதாநாயகனாக அநீதிக்கு எதிராக போராடும் இராணுவச் சிப்பாயாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக முன்னணி கதாநாயகி ஒருவர் நடிக்கிறார். இவர்களுடன் மணிவண்ணன், வடிவேலு, வினுச்சக்கரவத்தி, வெண்ணிறஆடை மூர்த்தி, சங்கீதா ஆகியோரும் நடிக்கிறார்கள். ஜனாதிபதி விருது பெற்ற 'செம்மீன்' எனும் மலையாளப் படத்தின் கதாநாயகியும், எம்.ஜி.ஆருடன் 'பாசம்' படத்தில் நடித்தவருமான ஷீலா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள்.

## இரண்டு 'மண்வாசனை' நாயகர்கள் இணைகிறார்கள்

'புதியமண்வாசனை' சேரனைவைத்து இயக்கப்போகும் படத்தின் கதைவிவாதத்தில் தீவிரமாக இருக்கிறார் பாரதிராஜா. பொற்காலம் என்ற படம் வெளிவந்த சமயத்தில் இன்னொரு பாரதிராஜா தமிழ்த் திரையுலகிற்கு வந்து விட்டார் என்று வர்ணிக்கப் பட்டவர் சேரன்.

இந்த இரண்டு பாரதிராஜாக்களும் இணைந்து 'புதிய மண்வாசனை' எனும் படத்தைக் கொடுக்கவுள்ளார்கள். இதற்கான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றது.

## சினி டிப்ஸ்

உலக அழகியின் முதலாவது ஆங்கிலப் படம் 'பிரைட் அன்ட் பிரிஜுடிஸ்' அகிலமெங்கும் அமர்க்களமாகப் பேசப்படும் படம். வேனிட்டி பேர், ஹலோ ஆகிய இதழ்களின் அட்டைகளில் ஒரே நேரத்தில் இடம்பெற்ற முதல் பெண் ஐஸ்தானாம்!

* * *

ஜக்குபாயை தள்ளி வைத்து விட்டு ரஜினி 'சந்திரமுகி' வேலைகளில் இறங்கி விட்டதனால் தான் ஏற்கனவே தள்ளிவைத்த 'ஓடிப் போகலாமா' படத்தின் பட வேலைகளில் இறங்கத் திட்டமிட்டுள்ளார் கே. எஸ். ரவிக்குமார். ஆனால், இப்போது தனுஷ் பிஸியாக இருப்பதால் இக்கட்டில் தவிக்கிறார் ரவிக்குமார்.

* * *

தங்கைக்காக நடிகர் சிபிராஜ் பிரபல கார் பந்தய வீரர் நரேன் கார்த்திகேயன் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக கோவை சென்று வந்திருக்கிறார். காரணம் சிபியின் சகோதரியும் மணப்பெண்ணும் தோழிகளாம்.

* * *

தனது குடும்பத்துடன் ஒருவார பயணமாக டுபாய் சென்று திரும்பியிருக்கிறார் சினேகா. குடும்பத்துடன் வெளிநாடு சென்று வந்துள்ளதால் மலர்ந்த மலராக இருக்கும் சினேகாவின் முகம் மேலும் மலர்ந்திருக்கிறது.

* * *

ஆசை நடிகர் விக்ரமின் அப்பா சினிமாவில் நடிக்க வந்ததின் அர்த்தம் இப்போது புரிகிறது. விக்ரமைவிட அவரது தந்தைக்கு சினிமா ஆசை அதிகமாம். என் தந்தை சினிமாவில் நடிக்கும் ஆசையினால் ஊரைவிட்டே ஓடிவந்தவர். அவருடைய ஆசையுடன் ஒப்பிடும்போது என்னுடைய ஆசை ஒன்றுமே இல்லை என்கிறார் நம் சியான் விக்ரம்.


'கிரிவலம்'
-ஷாம், ரோகினி-

## முரளியின் இளமை

என்றும் இளமையானவர் என்றதும் ரசிகர்கள் அனைவரது மனதிலும் ஞாபகத்திற்கு வருபவர் நடிகர் முரளி.

இவரை நாம் இன்றும் திரைப்படங்களில் கல்லூரி மாணவனாகவே பார்த்து வருகின்றோம். ஆனால், அவருக்கு பிளஸ் வண் (+1) இல் கல்விபயிலும் மகள் ஒருவர் உள்ளாராம். முரளியின் வயதைக் கேள்விப்படுபவர்கள் அவரின் இளமை கண்டு வியக்கின்றார்கள்.

## 'காக்க காக்க' கன்னடத்திற்கு

தமிழில் நூறு நாட்களைத் தாண்டி ஓடி வெற்றி பெற்ற படம் 'காக்க காக்க' இப்படம் தெலுங்கில் 'கர்ஜனை' என்ற பெயரில் வெளியாகி வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து இப்படத்தினை 'வம்சி எ.பி.சி. என்ற பெயரில் கன்னடத்தில் தயாரிக்கிறார்கள். இதில் ஜோதிகா நடித்த வேடத்தில் 'குத்து' ரம்யா நடிக்கிறார். சூர்யா நடித்த வேடத்தில் சுதீப் நடிக்கிறார். அங்கும் காக்க காக்க வெற்றி பெறும் என்று நம்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய் ஆகாஷின் 'அமுதே'

'துள்ளாத மனமும் துள்ளும்' படம் மூலம் ஆர்ப்பாட்டமாக அறிமுகமாகி 'பெண்ணின் மனதைத் தொட்டு', 'பூவெல்லாம் உன் பாசம்', 'ராஜா' என்று படிப்படியாக இறங்கிக் கடைசியில் காணாமலே போன இயக்குனர் எழில் மீண்டு(ம்) வந்திருக்கிறார்.

இவர் இயக்கும் புதிய படம் 'அமுதே' ஹீரோ ஜெய் ஆகாஷ் (இந்த ஆள் எத்தனை படத்துலதான் நடிப்பார்?) ஹீரோயின்கள் மதுமிதா, உமா இவர்களுடன் பிரகாஷ் ராஜ், ரஞ்சிதா, டெல்லிகணேஷ், சந்தான பாரதி மற்றும் பலர் நடிக்கின்றனர்.

தமிழின் பிரபல 'பைங்கிளி' எழுத்தாளர் மணிமாலா எழுதிய ஒரு நாவல் தான் 'அமுதே'. இந்தப் படத்தை தயாரிக்கிறார் ஜெயம் புரொடக்ஷன்ஸ்.

படத்தின் தொடக்கவிழா எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல்.. யாருக்கும் அழைப்பு விடுக்காமல் அமைதியாக நடந்தது.

# 'சச்சினுக்காக' பாய்ஸ் ஹரிணி

கிரிக்கெட் வீரர்கள் நடித்துக் கொண்டிருந்த விளம்பரப் படங்களில் 'இளைய தளபதி' விஜய் நடித்தார். இப்போது கிரிக்கெட் வீரர் சச்சினின் பெயரை வைத்தே ஒரு படத்தில் நடிக்கிறார்.

கலைப்புலி எஸ். தாணுவிற்கு விஜய் கால்ஷீட் கொடுத்திருந்தார். 'திருப்பாச்சியைச்' சரியாக பட்டை தீட்டியதும், அடுத்த தயாரிப்பு தாணுதான் என்பதால் தீவிரமாகக் கதை கேட்கும் படலம் நடைபெற்று வந்தது.

கடைசியில் தெரிவானவர். 'உதிரிப்பூக்கள்' மகேந்திரனின் மகன் ஜான்.

இவர் சொன்ன கதை அனைவருக்கும் படித்துப்போக, விஜய்யின் அடுத்த இயக்குநர் தயாராகிவிட்டார். ஆனால், பெயர் தமிழாகவும் இருக்க வேண்டும். அத்தோடு தரமாகவும் இருக்க வேண்டும் என்று பெயர் தேடிச் சலித்து இறுதியில் 'சச்சின்' என்று படத்திற்குப் பெயர் வைத்துள்ளனர்.

மைதானத்தில் சச்சின் செஞ்சரிகள் விளாசுவதுபோல் தியேட்டரில் இந்தச் சச்சினும் செஞ்சரி போடுவார் என்பது பெயர் வைத்தவர்களின் கணக்காம்.

நடுவர்கள் (ரசிகர்கள்) என்ன சொல்லப் போகிறார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

இன்னொரு செய்தி — விஜய்க்கு ஜோடியாகப் பலரைத் தேடி இறுதியில் 'பாய்ஸ்' படநாயகி ஹரிணியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சச்சினுக்கும் இதைவிடப் பொருத்தமான ஜோடி கிடைப்பது கஷ்டம்தான். ஏனெனில், 'பேர் என்ட் லல்லி' விளம்பரத்தில் கிரிக்கெட் வர்ணனையாளராக வரும் ஹரிணி சச்சினுக்கு நல்ல ஜோடிதானுங்கோ.


-ஹரிணி-

# எம்.ஜி.ஆரின் பேரன் தமிழுக்கு வருகிறான்

எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்ரபாணி. இவருடைய பேரனும், எம்.ஜி.சுகுமாறனின் மகனுமான 'இந்திரஜித்' ஏற்கனவே மலையாளப் படங்களில் கதாநாயகனாக நடித்துவருகிறார்.


இவர் முதன் முதலாக 'அதிபன்' என்ற தமிழ்ப் படத்தில் கதாநாயகனாக அறிமுகம் ஆகிறார். உமாகுட்லக் சினி மேக்கர்ஸ் என்ற புதிய பட நிறுவனம் இந்தப் படத்தைத் தயாரிக்கிறது.

இந்திரஜித்துக்கு ஜோடியாக உமா நடிக்கிறார். புதுமுகம் ஹரிபாபு வில்லானாக அறிமுகம் ஆகிறார். கதை ஒரு காதல் ஜோடியை மையமாக வைத்து, நகரத்திலும், கிராமத்திலும் நடக்கும் சுவையான சம்பவங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் முதல் வாரத்தில் பொள்ளாச்சி, பழனி, ஈரோடு, கொடைக்கானல், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற இருக்கிறது.

இப் படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் கே. தர்மராஜ். இவர் டைரக்டர் ராஜசேகரின் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர். இசை ஜேம்ஸ்ஆனந்த், பாடல்கள் கோபால்தாசன், கவிமுருகன், அறிவழகன், சண்டைப் பயிற்சி ஜாக்குவார்தங்கம்.

# சரத்குமார் விட்ட சவால்


'சத்ரபதி'
-சரத், நிகிதா-

'சத்ரபதி' படத்தின் பத்தாவது காட்சியில்தான் சத்ரபதி யார் என்ற உண்மையே தெரியும். அதற்குள் யாராவது அந்தக் கதாபாத்திரத்தைச் சொல்லிவிட்டால் அவர்களுக்கு 25, 000 ரூபாய் பரிசு வழங்கப்படும்.

இப்படம் பற்றிப் பேசினால் உற்சாகமாகிவிடுகிறாராம் சரத்குமார். தன்னுடைய படத்தின் முன்னைய சாயல்கள் எதுவுமே இந்தப் படத்தில் இருக்காது என்று சத்தியம் செய்யாத குறையாகச் சரத்குமார் சொன்னதைப் பார்த்தால், இப்போதே 100 ஆவது நாள் பதாகை அடித்து வைத்துக் கொள்வார்களோ என்று தோன்றுகிறது.

சூப்பர் குட் நிறுவனத்திற்கும், சரத்குமாருக்கும் அப்படி ஒரு ராசி இருக்கிறது. இந்தப் படத்தை இதே நிறுவனத்துடன் இணைந்து தயாரிப்பவர் முன்பு இதே நிறுவனத்தின் தூண்களில் ஒன்றாக இருந்த பாபுராஜா. இவருடைய ஜே.ஜே.குட் பிலிம்ஸ் தயாரிப்பில் வந்த படம்தான் சரத்குமார் நடித்த அரசு. மறுபடியும் இந்தக் குழுவினர் சத்ரபதியில் இணைந்து கொண்டிருக்கிறார்கள். இயக்குநர் ஸ்ரீமகேஷ் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' கொள்கை உடையவர் போலிருக்கிறது. எதைக் கேட்டாலும் படம் வரட்டும். வந்தபின் பேசுகிறேனே.... என்கிறார்.

இதில் கல்லூரி ஒன்றின் பஸ் சாரதியாக நடித்திருக்கிறாராம் சரத். இவருக்கு ஜோடியாக நடித்திருப்பவர் நிகிதா. குறும்பு என்ற படத்தில் ஆறடி உயர ஐஸ்கிரீமாக வந்தாரே... அவரேதான்!

இவரும், சரத்தும் நடித்த பாடல் காட்சி ஒன்று பாங்கொக் கடற்கரைப்பகுதியில் எடுத்திருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட தீவுகள் இருக்கிறதாம் இந்த பகுதியைச் சுற்றி. அதில் எல்லாத் தீவுகளிலும், தங்கள் காதலை விதைத்துவிட்டு வந்திருக்கிறது இந்த ஜோடி.

# முடி வளர்க்கும் மாதவன்


-மாதவன்-

ஹிந்தியில் 'ராம்ஜி லண்டன் வாலா' (நளதமயந்தி) ஆங்கிலத்தில் 'நத்திங் பட் லைவ்' எனப் பிறமொழியில் பரபரப்பாகவும், மும்முரமாகவும் இருந்த மாதவன் மீண்டும் தமிழுக்குத் திரும்பியிருக்கிறார் படம் 'தம்பி'.

சீமான் இயக்கும் இந்தப் படத்தை சீமா இயக்கப் போவதாக ஒரு வதந்தி கிளம்பியது. ஆனால், அவை எதுவும் உண்மையில்லை. சீமான் சொன்ன 'தம்பி'க் கதை மாதவனுக்கு மிகவும் விருப்பத்தை ஏற்படுத்தியது. அதனால் வேறு பல படவாய்ப்புக்களுக்கும் 'நோ' சொல்லிவிட்டுத் 'தம்பி'க்குத் தலையாட்டியிருக்கிறார் மாதவன்.

'தம்பி' படத்தில் மாதவனுக்கு இதுவரை ஏற்று நடித்திராத வித்தியாசமான கதா பாத்திரம். இதற்காகத் தலைமுடி அதிகம் வளர்க்கச் சொல்லியிருக்கிறார் சீமான். மாதவனும் இந்தத் தலைமுடி விவகாரத்தை தலைமேற்கொண்டு வளர்த்து வருகிறார்.

இப்போதைக்குத் 'தம்பி' படம் மட்டும்தான். ஒரே நேரத்தில் பல படங்கள் நடிக்கப் போவதில்லை என்று கூறியிருக்கிறார் மாதவன். தம்பிக்கு பிறகு அவர் இயக்குநர் பாசிலின் படத்தில் நடிக்கக் கூடும் என்கிறார்கள்.

# வடிவேலின் பந்தா!



''ஒருவேளை சாப்பாடு போட்டு, கையில் முப்பது ரூபா தந்தால் போதும், மூன்று நாள் தொடர்ந்து நடிச்சு தர்றேன்'' எனறு ஒரு காலத்தில் ஸ்டுடியோ ஸ்டுடியோவாக அலைந்தவர் வடிவேலு. இப்போது இவர் அடிக்கும் கூத்தில் தயாரிப்பாளக்குத் தினம் மூன்று லட்சம் வரை நஷ்டமாகிறது.

மினி 'பட்ஜெட்டில்' தயாராகி வரும் படம் 'காற்றுள்ள வரை'. படத்தில் நகைச்சுவைக்குப் பஞ்சம் வரக் கூடாது என்று நல்ல நகைச்சுவையாளர் என வடிவேலுவை புக் பண்ணியிருக்கிறார்கள். இவருக்குப் பேசப்பட்ட சம்பளம் ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் ரூபா.

படப்பிடிப்புக்கு நேரத்திற்கு வராமல் பிந்திவருவது. கடும் பந்தா காட்டுவது. ஆறுமணியானால் வீடு செல்லத் தயாராகுவது என பந்தாவோ பந்தா.

வடிவேல் இப்படிச் செயற்படுவது அனைவருக்கும் எரிச்சலைக் கிளப்பியுள்ளது. இப்படியே போனால் வைகைபுயல் கோடம்பாக்கத்தில் மையம் கொள்ள முடியாது. வங்கக் கடலுக்குப் போகவேண்டியதுதான் என்கிறார்கள். ஆனாலும், விவேக் கதாநாயகனாக நடிப்பதனால் தனது வாய்ப்புக்கள் மேலும் அதிகரிக்கும் என்ற தெம்பில் இருக்கிறார் வடிவேலு.

# 7 ஜி ரெயின்போ காலனி விமர்சனம்

காதல் கொண்டேனுக்குப் பிறகு செல்வராகவன் இயக்கிய படமென்பதால் பலத்த எதிர்பார்ப்புக்களுடன் வெளிவந்திருக்கிறது '7 ஜி ரெயின்போ காலனி.'

ரெயின்போ காலனியில் உள்ள ஒரு வீட்டில் வசிக்கும் ரவி கிருஷ்ணா, அதே குடியிருப்பில் வசிக்கும் சோனியா அகர்வாலை காதலிக்கிறார். முதலில் ரவியை வெறுக்கும் அவர், பின் விரும்புகிறார். இருவரின் வீட்டுக்கும் விஷயம் தெரியவந்து காதலர்கள் பிரிய வேண்டிய நிலை, பெற்றோரை ஏமாற்றி விட்டு வீட்டை விட்டு வெளியேறி, ரவியுடன் வெளியூர் வருகிறார் சோனியா.

ஒரு நாள் இரவு மட்டும் உனக்கு மனைவியாக இருக்க விரும்புகிறேன் என்கிறார் சோனியா. ரவியும் சம்மதிக்கிறார். நாம் பிரிந்துவிடலாம் என்றார் மறுநாள். ரவி தடுத்த போதும் அவரை விட்டு விலகிச் செல்லும் சோனியா வீதி விபத்தில் இறக்கிறார்.

நான் மட்டும் ஏன் உயிரோடு இருக்க வேண்டும் என நினைக்கும் ரவியும் தற்கொலைக்கு முயல, நீ சாகக்கூடாது. நீ எப்போது நினைத்தாலும் நான் உன் முன்னால் வந்து நிற்பேன் என்கிறார் சோனியா. அதேபோல் ரவி நினைக்கும்போதெல்லாம் வருகிறார் சோனியா. படம் முடிகிறது.

இறந்த பின் சோனியா வருவது போல் ரவி கற்பனை செய்வது, ஹிந்தியில் வெளிவந்த ஷாருக்கானின் 'மொஹபத்தே' படத்தின் பிரதி. முதல் பாதி ஓரளவுக்குச் சுமாராகச் செல்கிறது. இரண்டாம் பாதியில் மிகவும் சொதப்பலான திரைக்கதை.

யுவன் ஷங்கர்ராஜாவிடம் நல்ல இசையை வாங்கிய ராகவன், அதைச் சரியாகப் படத்தில் பயன்படுத்தவில்லை. யுவனின் பின்னணி இசையும், அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும் பாராட்டுக்குரியவை.

போக்கிரித்தனமான பாத்திரத்தை ரவிகிருஷ்ணா நன்றாகச் செய்திருக்கிறார். தியேட்டரில் 'பாபா' பார்க்கும் போது ரஜனி வந்ததும் திரையின் முன் நின்றுகொண்டு 'தலைவா' எனக் கத்துவது, யதார்த்தம். ஆனால், பல இடங்களில் காதல் கொண்டேன் தனுஷைப் போல ரவி பேசுகிறார். நடிக்கிறார்.

சோகம், சந்தோஷம் என எல்லாக் காட்சிகளிலும் சோனியா அகர்வாலின் பிரதிபலிப்பு ஒரே மாதிரியாகத் தெரிகிறது.

ஆரம்பத்தில் மலையாள தமிழில் பேசுகிறார் விஜயன். பின் அவரது மொழி சரியாகிவிடுகிறது. ஏன் இப்படி?

சோனியா மீது ரவிகிருஷ்ணாவுக்கு இருக்கும் ஆழமான காதலைக் காட்டிய அளவுக்கு, ரவி மீது சோனியாவுக்கு இருக்கும் காதலைக் காட்டவில்லை. குறிப்பாக ரவிக்குத்தான் அளித்த பரிசுகளைப் பற்றி தனது அம்மாவிடம் கூறிவிடுகிறார் சோனியா.

ரவி ஆசையாக வைத்திருக்கும் சோனியாவின் புகைப்படத்தைக் கூட எடுத்துச் செல்கிறார் சோனியாவின் தாய். அதிலேயே சோனியா ரவியை எந்த அளவுக்கு விரும்புகிறார் என்பது தெரிந்துவிடுகிறது.

இதய நோயாளியான தனது தந்தை இறந்துவிடுவார் என்பதால் ரவியைத் திருமணம் செய்ய மறுக்கும் சோனியா போன்ற ஒரு பெண், அவனுடன் உறவு வைத்துக்கொள்ள மட்டும் சம்மதிப்பது எப்படி? அது தெரிந்தால் சோனியாவின் தந்தை சந்தோஷமடைவாரோ என்னவோ? — செல்வராகவனுக்குத்தான் தெரியும்! ரவி, சோனியாவின் வீடுகளில் நடக்கும் காட்சிகள், சென்னைத் தொலைக்காட்சியில் வரும் நாடகத்தைப் பார்ப்பது போன்றிருக்கிறது.


'7 ஜி ரெயின்போ காலனி'
-ரவி, சோனியா அகர்வால்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

### கனவு
அடுத்தவர் அறியமால்
அவனே (ளே)
பார்த்து முடித்த
நிஜமற்ற திரைப்படம்

### வரதட்சணை
பெண்கள் தம்
வாழ்வின் ஒரு படி
மாற்றத்தின் போது
ஆண் பொம்மைகளை
வாங்கக் கொடுக்கும்
விலைப் பெறுமதி

### மண் வாசம்
கார் மேகம் ஆசையோடு
பூமியைத் தொட்ட போது
பூமித்தாய் ஆனந்தத்தோடு
விட்ட பெருமூச்சு

*சுமி அருட்செல்வம்*
*பிரமந்தனாறு*

### நினைவு மாளிகை !
உன் நினைவுகளை
அடுக்கி அடுக்கி
கற்களைப்
பூசிப் பூசிப்.....
கனவுகளில் வர்ணம் தீட்டி
மாளிகை கட்டினேன்!
அழிக்கலாம் என
நினைக்கிறேன்......
ஒவ்வொரு கல்லாய்....
சிறுசிறு துகள்களாய்
ஆனாலும்
அத்திவாரத்தின்
அடையாளங்கள்
அழியாது.....
உயிரென்ற நிலம்
என் சொந்தமாக
இருக்கும் வரை.......

**சிபானா சனூான்**
**கல்ஹின்னை**

### நீ எனக்கில்லையாயின்......
உலகம் இடம் வலமாய்
விரைவாய்ச் சுற்றும்
கண்களில் கண்ணீர்
இரத்தமாய்,
உணர்விழந்து நான்
தரையில் விழ
உயிர் பிரியும்,
உடல் மட்டும்
மண்ணில் விழ
உயிர் மூச்சு விண்ணைத்
தேடி வரும்
நீ எனக்கில்லையாயின்........

*வி.நிசாந்தி, மல்லாவி*

### றோஜாவாய்!
பெண்ணே!
உன் காதலனாய்
இருப்பதை விட—
றோஜாவாக
இருக்கவே
விரும்புகிறேன்
அதற்கல்லவா முத்தம்- நீ
அள்ளிக் கொடுக்கிறாய்

**ந. சுரேஸ்**
**புதுக்குடியிருப்பு**

### பேச்சுக்கள்!
நகர்ந்த பேச்சுக்கள்
நாலைந்து நடந்தன
நாளடைவில்
நன்மைகள் கிடைத்தன.

துப்பாக்கி சீறவில்லை
பீரங்கி பாயவில்லை
குண்டுகள் பொழியவில்லை
கண்ணீர்கள் சொரியவில்லை
இரத்த ஆறு பாயவில்லை

இளசுகளுக்கு தனி
இன்பம் சுதந்திரமாய்
சுற்றி வர

சுற்றி வளைப்புக்கள்
கைதுகள் இல்லை
சோதனையும் இல்லை
சாவடியும் இல்லை
நம்பிக்கையாய் நகர்ந்த
பேச்சுக்கள்
ஏனோ சிறகொடிந்த
பறவையாய்
உறங்கி விட்டது.

பேச்சுக்கள் தொடர
காயம் கட்டி
பரிகாரம் பண்ண
நோர்வே தரப்பு
முயன்று பார்க்குது
முடிவுகள் இல்லை

பேச்சு முறிந்து
யுத்த பேய்கள்
வருமோ என்று
இங்கு ஏங்குது
மனிதம்!

**பாபு**
**கல்முனை**

### தேவை!
இன்றைய
இளைஞர்கள்
தம் கூடுகளை
மட்டுமல்ல
திசைகளையே
மறந்து போனார்கள்
இன்றைய சமூகம்
அவர்களை
ஏற்றிவிடக் கை தட்டவில்லை
மாறாக
குட்புற விழுந்த
பள்ளம் தோண்டுகின்றது
வானவில்லையே
வானமாகக் காணும்
இந்தப் பக்குவமில்லாப்
பறவைகளின்
திசைகளை அறிவிக்க
எத்தனை
விவேகானந்தர்கள்
எமக்குத் தேவை

**சசிகலா ராஜ்குமார்**
**திருமலை.**

### வெட்கம் கெட்டது வெள்ளைமாளிகை!
அரங்கேறிக் கொண்டது
அசிங்கங்கள்
வெட்கம் கெட்டவர்கள்
வெட்கி குனிந்திட
பதை பதைத்துப் போனது
பார்த்தவர் மனங்கள்
வெள்ளைமாளிகையின்
வெளிப்பூச்சுக்கூட
வெள்ளை இல்லையென்பதை
தோலுரித்துக் காட்டின
வாஷிங்டன் வாரிசுகள்
மரணத்தின் பின்னும்
மதிக்கப்பட வேண்டிய
போர் வீரனின்
மானத்தைக் காண
மார்தட்டிக் கொண்ட
வல்லாதிக்கம்
கப்பலேற்றியது தன்
மானத்தை இன்று
தாய்மை போற்றும்
பெண்மை தன்
தாய்மையை விற்ற
வேதனைகண்டு
வெட்கிக் குனிகிறது
உலகத்துப் பெண்மை
செவ்வாயில் தண்ணீர்
தேடுகின்றீர்
வெட்கம் கெட்டவரே
அங்கேயும் உங்கள்
அசிங்கங்களை
அரங்கேற்றம் கண்டிடவோ?
விலங்குகள் பற்றி
விரிவாக ஆராயும்
உங்களுக்குள்ளேயே
விலங்குகள் உள்ளதை
எப்படி மறந்தீர்கள்?
வக்கிரங்களை
வகைவகையாய்
இரசிப்பதற்கு உங்கள்
வெள்ளைமாளிகையில்
இருப்பவர்கள் மிருகங்களா?
உலகத்துப் பொலீஸ்காரனாய்
உலா வர நினைத்தோரே
அசிங்கங்களை ஆடைகளாய்
அள்ளி உடுத்துக் கொண்டு
அவிட்டெறிய முடியாத
அவலத்தில் நீங்கள்...

**புதியவன்**
**யாழ்ப்பாணம்.**

### பிரிவுத் துயர்!
முகவரிகளைத் தந்து விட்டு
முகங்கள் தொலைந்து போகும்
நட்பின் கவிதைகளுக்கு
கண்ணீரால் முற்றுப்புள்ளி
வைக்கும்
கடைசி வேளை.......

பயணம் இன்னுமிருக்க
நமது பாதைகள் முடிந்து போய்
திசைகள் தொலைந்து
கத்தியழவும் கண்ணீர் சிந்தவும்
முடியாமல் திக்கற்ற
அனாதைகள் போல்........
காலமெனும் காற்றில்
காகிதமாகி— அதில்
சந்திக்கும்
நாட்களை எண்ணியபடி
இனி
புதிய முகவரிகள் புதிர்களாய்.
கேள்விக்குறிகளாக
விடை காண முடியாத
வினாக்களைச் சுமந்து
பிரிவுத் துயருடன்
எம் நட்புக்கள்.

**யசோ**
**ஒட்டுசுட்டான்**

### முகாரியுடன்!
தொலைவுகள்
நீண்டு போனாலும்
நினைவுகள்
நீங்கிவிடாது
இதயமதில்
உன் ஞாபகங்கள்
முகவரியற்று
அலைகின்றன.
பூபாள ராகம் இசைத்த
என் உதயப்
பொழுதுகள் — இன்று
முகாரியுடன்.....!

*நவயுகா*
*சுன்னாகம்*

### வந்திடாயோ!
உன்னுடன்
சேர்ந்திருந்த
போது
சோகம் ஏதும்
தோன்றவில்லை
பிரிந்து நீ
போனதும்
பிளந்து போனது
என் இதயம்
காணுமிடமெங்கும்
கண்கள்
உன்னைத் தேடுது
வேதனை தாளாது
நெஞ்சம்
அழுகிறது.
சேர்ந்திருந்த
காலத்தில்
சேர்த்து வைத்த
உன்
நினைவுகளை
மீள ஒரு முறை
மீட்டிப்
பார்த்தும்
வேதனை
தீரவில்லை
தூது விட்ட
தென்றலும்
உந்தன் சேதி
வந்து
சொல்லவில்லை
செயலிழந்து
தவிக்கிறேன்
தேற்றிட
நீ
வந்திடாயே......

**யஸ்மினா**
**மீசாலை**

### காதல் தேவதை- நீ!
பூக்களின்
புன்னகை நீ....!
பூமியின்
பொக்கிஷம்-நீ....!
காற்றின்
உருவம்- நீ....
கவிதையின்
நாயகி-நீ....!
என் காதலின்
அவஸ்தைகள்- நீ

**எஸ்.ஜெகன்**
**நானாட்டான்**

### கொழுந்து பறிக்கும் பெண்ணே!
அவள்தான் இன்னமும்
இலங்கை தேயிலைப்
பெட்டிகளின் அட்டைகளில்
இலங்கையென்றால்
கொழுந்துபறிக்கும்
பெண்தான்
உலகின் கண்முன்
அவளுக்கு இன்னும்
அடையாள அட்டை இல்லை
மலை அட்டைகளுக்கு
இரத்தத்தைப் பரிசளிக்கிறாள்
அவளுக்கு இன்னும்
வதிவிட அட்டை இல்லை
அவளுக்கு இன்னமும்
ஒழுங்காகச்
சம்பளம் இல்லை
அரசுக்கு
தேயிலை வருமானம்
மில்லியனைத் தாண்டுகிறது
அவள் இன்னமும்
ரொட்டி தான்
சுடுகிறாள் சாப்பிட
பெண்ணினமே
உனக்கு உரிமைதராத
இந்த நாடு
தேயிலைப்பெட்டியில்
உன்படத்தைப் போட்டு
வியாபாரம் பண்ணுகிறது
தட்டிக்கேட்க உணர்வு
வரவில்லையா
இன்னமும் உனக்கு-

**இ. யாழவன்**
**சப்ரகமுவ**
**பல்கலைக்கழகம்.**

### விடுவாயா!
இளமையை நாடி வசந்தத்தைத் தேடி
தொடும் முன்னரே — என்
வாழ்வு வெறுத்து விட்டது
மரணம் மகிழ்ச்சிக்குரியதாயிற்று
பொறுமை பொசுங்கிப் போனது
பாசத்தின் வலையினிலே
என்னை மீனாக ஆக்கினாய்
தண்ணீர் இன்றித்
தத்தளிக்கும் — என்னை
மீண்டும் கடலிலே
மீனாக விடுவாயா...?

**சகிலா. ஆ**
**கல்வியங்காடு.**

### வேண்டாம் பெண்ணே....!
பெண்ணே..!
என் கண்மணிகளை — உன்
காந்தப் பார்வையால் கருக்கிவிட்டு
என்னைப் பார் என்கிறாயே...
என் இதயத்தின் சுவர்களை — உன்
மௌன பாஷையால் தகர்த்து விட்டு
வாழ இடம் கேட்கின்றாயே..
என் வார்த்தைகளின்
வரிகளை— உன்
உதடுகளால் பிடுங்கிவிட்டு
எனக்காக கவிதைவடி
என்கிறாயே...
என் உயிரினை— உன்
அசைவினால் உறையவைத்து
உறவாட அழைக்கின்றாயே...
மொத்தத்தில் என்னை
நடைப்பிணமாக அலையவிட்டு
என் இதய மாளிகையின்
மன்னன் என்கிறாயே...
பெண்ணே...!
இதுவரை உன்னால் — நான்
அனுபவித்த இன்னல்கள்
என்றுமே மறக்காது— அதனால்
வேண்டாம் இன்னொரு வாழ்க்கை
இனியும் உன் இம்சைகளைத்
தாங்கும் சக்தி எனக்கில்லை....

**க. புஸ்பாஞ்சலி**
**புங்குடுதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் போட்டி இல.132

சொற்சிலம்பம் 132 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் நவம்பர் 7 ஆம் திகதி ஆகும். விடைகள் நவம்பர்14ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர்21 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.130க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.130

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பி | ர | 2 ச | 3 வ | ம் | ■ | 4 வி | 5 த |
| ர | ■ | 6 ம | லை | ■ | 7 அ | ர | ளி |
| 8 மா | 9 த | ர் | ■ | 10 த | ச் | ச | ர் |
| 11 த | லை | க் | 12 க | வ | ச | ம் | ■ |
| ம் | ■ | 13 க | த | று | ம் | ■ | 14 ந |
| ■ | 15 க | ள | வு | ■ | 16 த | வி | டு |
| 17 பா | வ | ம் | ■ | 18 பா | வி | ■ | நி |
| 19 கு | லை | ■ | 20 மு | தி | ர் | ச் | சி |

## சொற்சிலம்பம்-129 பரிசு பெறுவோர்.

1. திருமதி.எஸ்.ஹமீட்,
"C", 2/2, எல்விட்டிகல தொடர்மாடி,
கொழும்பு—08.
2. தாமோதரம் வடிவேல்,
5, ஏறாவூர்,
செங்கலடி.
3. ச.சசிக்கா,
சாலிங்கா A.P.O,
நீதிமன்ற வீதி,
திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. வே.சரஸ்வதி,
அம்பன்,
குடத்தனை.
2. எம்.ஐ.அப்றோஸ்,
மருதமுனை,
கல்முனை.
3. ஷெரின் ஜொனத்தன்,
8ஆம் வட்டாரம், சாம்பல் தீவு,
திருகோணமலை,
4. கிருபாகரன் தனராஜன்,
இல.23/17, நீட்டா றோட்,
கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.
5. ஆர். இராஜேந்திரா,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
6. நா.இராஜசிங்கன்,
18/5, குடியிருப்பு,
வவுனியா.
7. கமால்தீன்.ஆல்.ஆஷாத்,
282, ஓடாவியார் வீதி,
ஏறாவூர்—02.
8. எஸ்.லக்ஸனா,
துணுக்காய் வீதி,
மாங்குளம்.
9. வீரசிங்கம் விஜிதா,
புதிய கொலனி,
மாங்குளம்.
10. எஸ்.எல்.எம்.அர்ஷாத்,
இல.142,
பிரதான வீதி,
காத்தான்குடி—02.

## சொற்சிலம்பம் போட்டி இல.132

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | ■ | 10 | | | ■ | |
| ■ | 11 | 12 | | | ■ | 13 | |
| 14 | ■ | 15 | | ■ | 16 | | |
| 17 | 18 | | ■ | 19 | | | ■ |
| 20 | | ■ | 21 | | ■ | 22 | 23 |
| 24 | | | | | | ■ | |

## சொற்சிலம்பம் போட்டி இல.132

**இடமிருந்து வலம்**

1. விலாசம்.
4. ஒத்தாசை.
7. சிறிது என்றாலும் காரம் அதிகம்.
8. அகப்பை வகையைச் சார்ந்தது.
9. தான்/தாங்கள் இரண்டையும் குறிக்கும்.
10. பாத்திரம்/படகு/கப்பல்/உடலின் நுண்ணிய பகுதி.
11. மகள்.
13. போதை தருவது/பன்மையையும் குறிக்கும்.
15. ஒன்றாகப் போடு/ஒருங்குசேர்.
16. போராட்டம் நடத்துபவன்.
17. தினசரி மாறுவது.
19. நீர்/சிறுநீர்.
20. முகத்தில் வரும் சிறிய புடைப்பு.
21. கூட்டல் குறி/சேர்ந்திருப்பது.
22. பூமி/அவனி.
24. நீர் வாழ் உயிரினம்/மிகப் பெரியது.

**மேலிருந்து கீழ்**

1. முன்னிலையில்.
2. கன்று போட்ட மாடு கறக்கின்ற பால் இந்த ரகத்தைச் சேர்ந்தது.
3. பிரி.
4. பசளை.
5. பசுமையான தன்மை.
6. அதிகாலைப் பொழுதில் வானில் தெரிவது.
8. ஒன்று சேர்வது/புணர்வது.
10. படிப்பு/அறிவு தருவது.
12. தகைமைத் தன்மை.
13. வாசனைத் திரவியம்.
14. தலைவன்.
16. போன்று/மாதிரி.
18. ஈயாதவன்/உலோபி.
19. அனைத்து/எல்லா.
21. தோழி.
23. பதில்.

# வாசகர் இதயம் பேசுகிறது




*என்.நிலவன், உடையார்கட்டு வடக்கு.*

சுகந்தம் வீசும் சுடர் ஒளியே! வாரம்தோறும் உனக்காக வாஞ்சையுடன் காத்திருப்பேன். நீ சுமந்துவரும் சொற்சிலம்பம், பித்தன் பதில்கள், கவிதைப்புனல், கண்ணாமூச்சி, நெட்குறும்பு அனைத்துமே சூப்பர். நீ மேலும் வளர்ச்சி பெற என் அளவற்ற வாழ்த்துக்கள் உரித்தாகுக.

*எஸ்.நாமலா, உடையார்கட்டு.*

தழைத்தோங்கும் சுடர் ஒளியே!
கவிதைப்புனல் கண்டு அதில்
கட்டுண்ட கன்னியாவேன்
பித்தன் பதில்களிலே—நான்
பித்தான பெண்ணாவேன்
ஆசிரியர் செய்தியையும்
ஆசையுடன் நான் படித்தேன்
அரசியல் அம்பலமும் என்
அறிவிற்குநல்விருந்தே
சமாதானப் பேச்சுமங்கே
சண்டைக்கும் தூபமிடும்
ஜனாதிபதியின் இருவேடமுடன்
ஜொலிக்கும் சுடர் ஒளி கண்டேன்
வாழ்க என வாழ்த்துகின்றேன்
வளர்க தமிழ் மண்ணில் நீ

*ரீ.அஞ்சலோ, கல்முனை*

நீ தரும் ஆக்கங்கள் அனைத்திலுமே எனக்குக் கொள்ளை ஆசை. வாரந்தோறும் உன்னைப் பார்த்த பின்னரே மனம் நிறைவடையும். எமது ஆக்கங்களை ஏற்பதோடு பல விடயங்களையும் அறிய வைக்கின்றாய். உன்னை வாழ்த்துவதற்கு இடமே போதாது எனினும், என் நல்லாசிகள் பலகோடி.

*செல்வி. அப்றோஸ், கல்முனை*

பொழுதுகள் விடியத் தவறினாலும்
பூக்கள் மலர மறுத்தாலும்
குயில்கள் கூவத் தவறினாலும்
தவறாது எனைத்தேடி ஓடி
வரும் சுடர் ஒளியே;
நீ தரும் அம்சங்கள்
அத்தனையும் அற்புதம்.
தாங்கி வந்து என்னைப் போஷிக்கும்
சுடர் ஒளியே
நீ மென்மேலும் வளர
என் வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்.

# இலக்கியப் பொழில்

## விரைவில் ஆரம்பம்

தமிழ் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளும் 'இலக்கியப் பொழில்' என்னும் தொடர் ஆக்கம் விரைவில் 'சுடர்ஒளி' வார இதழில் ஆரம்பமாகிறது.

**பிரபல இலக்கிய விற்பன்னர்கள் எழுதும் பல்சுவைக் கட்டுரைகள் இப்பகுதியில் வெளிவரும். வாசிக்கத் தவறாதீர்கள்.**


# உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்**



**K. சிவசுப்பிரமணியம்**
**M.I.H.Ind-S.M.P.**

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

**500 gram 300/-, 250 gram 150/-**
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.


வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

**Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை**
**G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)**
**கொழும்பு - 11. Tel: 2384645.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான புகைப்படம்




நாங்களெல்லாம் சைக்கிள் ஓடுவது, ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்குச் செல்வதற்காக. சிலவேளைகளில் சின்னப் பொதிகளை ஏற்றிச் செல்வதும் உண்டு. வன்னியிலே என்றால் விறகு ஏற்றி வருபவர்களைப் பார்த்து 'ஐயோ பாவம்' என்று அனுதாபப்படுவோம்.

ஆனால், இந்தியாவிலே சைக்கிள் ரிக்ஷாவிலே ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 - 6 பேரையும், அவர்களது பெட்டி படுக்கைகளையும் சேர்த்து - ஒரு காரிலே கொண்டு செல்லக் கூடிய பொருட்களையும் ஆட்களையும் ஏற்றிக் கொண்டு - நெஞ்சு வலிக்க வலிக்க சைக்கிள் மிதிப்பவர்களைப் பார்த்து ஐயைய்யோ.... படுபாவம் என்று அனுதாபப்பட்டிருக்கிறோம்.

ஆனால், இதோ இந்தப் படத்தைப் பாருங்கள். ஒரு லொறியிலே ஏற்றக்கூடிய பொருட்களை.... ஒரு சைக்கிளிலே ஏற்றிச் செல்கிறாரே... இவர். இவரைப் பார்த்து ஆறுதல்படுவதா? பரிதாபப்படுவதா? இது வித்தியாசம்தானே..!


# நெட் குறும்பு



அட... அவசரத்துக்கு கால்களாலும் கணினியை இயக்க முடியும் போலும்...


பின் குறிப்பு: இந்தப், படத்தைப் பார்த்துவிட்டு, நீங்களும் இது போல வளைந்து கணினியை இயக்கும் போது கை – கால் என்பன முறிந்து – வளைந்து போனால் அதற்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

# நெட் குழப்பம்



இதென்ன பறவையா மரக்கிளையா?

# ஓவியச் சிரிப்பு








## ஜோக்

அண்மையில் திருமணம் செய்து கொண்ட இரண்டு பெண்கள் பேசிக் கொண்டார்கள். அவர்களில் ஒருத்தி அமெரிக்கக்காரி. மற்றவள் இலங்கைப் பெண்.

அமெரிக்கப் பெண் சொன்னாள் "அமெரிக்க ஆண்கள் சிறந்தவர்கள் என்பதை அவர்கள் காதல் செய்யும் முறையின் மூலம் அறிந்து கொள்ளலாம். எனது காதலர் முதலில் எனது கைகளை முத்தமிடுவார். பின்னர் தோள்களில்... பின்னர் கழுத்தில்... அங்கிருந்து இஞ்சி... இஞ்சியாக நகர்ந்து கன்னம்.... உதடு.." என்று அடுக்கிக் கொண்டே போனாள்.


குறுக்கிட்ட இலங்கைப் பெண் சொன்னாள் "இலங்கை ஆண்களென்றால் இவ்வளவு நேரத்திற்குள் தேன்நிலவையே முடித்துக் கொண்டு வீடு திரும்பியிருப்பார்கள்."

# நெட் ஓவியரின் கற்பனை



கார் ஒன்றினை வாங்குவதற்காக அதன் வடிவங்களைப் பார்வையிட நெட்டினுள் நுழைந்தோம். அப்போது கார்களின் வடிவங்களைப் பார்த்ததும் நாம் வியந்து நின்ற உருவம் தான் இது. புதிதாக சந்தைக்கு அறிமுகமாகி உள்ள கார் என்று நினைத்து விடாதீர்கள். இது ஓர் கற்பனையாளர் ஓவியம். எங்கிருந்து இந்த வடிவத்தை எடுத்தாரோ அவருக்குத்தான் வெளிச்சம்

# கண்ணாமூச்சி



அருகேயுள்ள படத்தில் கண்களை அங்கேயும், இங்கேயும் அலையவிட்டுப் பாருங்கள். படத்திலே உள்ள சிறுசிறு வட்டங்கள் மிதப்பதுபோன்று அங்கும், இங்கும் அசையும். பார்த்து ரசியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்



என். வேணுகா, ஒலுமடு.

**கேள்வி:—** பித்தா.. உம்மை நேரிலே பார்த்தால் வாந்தி வரும் என்கிறார்களே உண்மையா?

**பதில்:—** சீச்சீ... நான் கற்புக்கு அரசன். கலியுக ராமன்... அப்படி எல்லாம் எதுவும் செய்யமாட்டேன். பயமில்லாமல் நேரிலே வந்து பார்க்கலாம். 10 அடி தள்ளிநின்று தான் பேசுவேன். 11 அடி தள்ளி நின்று தான் ஆட்டோகிராப்புக்கு கையெழுத்து போடுவேன். 12 அடி தள்ளி நின்றுதான் போட்டோவுக்குப் போஸ் கொடுப்பேன். இவ்வளவையும் மீறி நீர் வாந்தி எடுப்பீரேயாகில் அதற்கு நிச்சயமாக நான் பொறுப்பாக இருக்க மாட்டேன்.

இ.காந்திமதி, ஆனைவிழுந்தான்.

**கேள்வி:—** பித்தா! சமைக்கத் தெரியாத பெண்ணும், உழைக்கத் தெரியாத ஆணும் ஒன்றா?

**பதில்:—** இப்போதைய காலத்துக்கு உந்த வசனங்கள் எல்லாம் சரிவராது. இந்தக் காலத்தில் எந்தப் பெண் சமைக்கிறாள், எந்த ஆண் உழைக்கிறான். எல்லாம் மாறித் தானே நடக்கிறது. அதன்படி பார்த்தால், சமைக்கத் தெரியாத ஆணும், உழைக்கத் தெரியாத பெண்ணும் ஒன்றா என்றுதான் நீர் கேட்டிருக்க வேண்டும். இனிமேல் அப்படிக் கேள்வியைத் திருத்திக் கேட்கப் பழகிக்கொள்ளும்.

து.சுஜி, தர்மபுரம்.

**கேள்வி:—** பித்துக் குட்டி...! அநேகமான பெண்கள் கிணற்றில் விழுந்தாலோ அல்லது புருஷன் அடித்தாலோ அல்லது வேறு எந்த ஆபத்து வந்தாலோ ''என்ர அம்மா!, என்ர கடவுளே!'' என்றுதான் கத்துகிறார்கள்.. ஏன்.. ''என்ர புருஸனே!'' என்று கத்தினால் என்ன?

**பதில்:—** அதுதானே ... நியாயமான கேள்விதான். அப்படியென்றால் நாங்களெல்லாம் இனிக் கிணற்றிலே விழுந்தாலோ அல்லது பொண்டாட்டி அடித்தாலோ அல்லது வேறெந்த ஆபத்து வந்தாலும் ''என்ர அம்மா அல்லது என்ர கடவுளே'' என்று கத்தாமல் ''என்ர பொண்டாட்டியே'' என்று தான் கத்தவேண்டுமோ... கத்தலாம் ஆனால், ஆபத்துக்களின் போது அம்மாவையோ... கடவுளையோ கூப்பிடுவது, அவர்கள் வந்து எம்மை, காப்பாற்ற மாட்டார்களா என்ற ஆதங்கத்தில் தான். ஆனால், ஆபத்தை அதிகரிக்கக் கூடியவர்களை அந்த நேரத்தில் அழைத்து ஏனம்மா பொல்லாப்பைத் தேடுவான். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.




வி. சயந்தினி, செல்வபுரம்.

**கேள்வி:—** தேசத் துரோகிகள் சுட்டுக் கொலை செய்யப்படுகின்றமையினால் தமிழ் மக்களுக்கு நன்மையா... தீமையா?

**பதில்:—** நன்மை, தீமை எல்லாம் எனக்குத் தெரியாது... ஆனால், இன்று நேற்றல்ல.. கி.மு. காலத்திலிருந்துநாட்டுக்கு, இனத்துக்கு, மொழிக்குத் துரோகம் செய்பவர்களுக்கு மரண தண்டனைதான் வழங்கப் பட்டு வருகின்றது... என்பது நிச்சயம்.

தி.நித்தியா, கனகாம்பிகைக் குளம்.

**கேள்வி:—** டியர் பித்தண்ணா! இரணைமடுப் பகுதியில் புலிகளின் விமானத்தளம் இருப்பதாக இராணுவம் கூறுகிறதே. நாமும் இரணைமடுவுக்கு அருகில்தான் இருக்கிறோம். அப்படி ஏதும் அறிகுறி இல்லையே?

**பதில்:—** நித்தியா! விடுதலைப் புலிகளின் ரகசியச் செயல்பாடுகள் உலகமே ஆச்சரியப்படும் விடயம். முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்க முடியாது என்பது பழமொழி. ஆனால், விடுதலைப் புலிகளோ பூசணிக்காய்த் தோட்டத்தையே சொட்டுச் சோற்றில் மறைத்துவிடக்கூடிய சாமர்த்தியம் உள்ளவர்கள். விமானங்கள், ஹெலிக் கொப்டர்கள், விமானப் படை எல்லாம் வைத்திருப்பவர்களிடம் விமானத் தளம் இருக்காதா என்ன... இரணைமடுவில் இல்லாவிட்டால் அதற்குக் கொஞ்சம் தள்ளியதாக இருக்கும்.

மு.சிவரூபன், பாலிநகர்.

**கேள்வி:—** கஜேந்திரா படம் பார்த்தீரா? எப்படி? முழுக்க முழுக்க தமிழனைப் பற்றி வீரவசனங்கள் பேசப்படுகிறதே! இந்தப் படமும் பாரத தேசத்தில் தானே எடுக்கப்பட்டது. ஆனால், நமது தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு பயங்கர வாதம் என்று முத்திரை குத்தப்படுகிறதே! ஏன் பித்தா?



**பதில்:—** கண்ணு.... படத்திலே வசனம் பேசுவது பணத்திற்காக, கைதட்டலுக்காக, விசிலுக்காக, படம் 100 நாள் ஓடவேண்டும் என்பதற்காக... ஆனால், படத்திலே பேசிய அதே வசனத்தை விஜயகாந்த் ஒரு பொது மேடையில் பேசினால் அவரைத் தூக்கிப் பொடாச் சட்டத்திலோ அல்லது தடாச் சட்டத்திலோ உள்ளே போட்டுவிடுவார்கள். திரைப்படம் என்பது ஒரு மாயத்தோற்றம். சினிமாவைப் பார்த்து மயங்கிவிடாதேயும்.

ஏ.சந்திரன், முள்ளியாவளை.

**கேள்வி:—** அன்பின் பித்தா! எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:—** வாழ்க்கையில் சந்தோஷத்தைத் தொலைத்தவர்கள்.

சி.சிவாஜினி, புங்குடுதீவு.

**கேள்வி:—** அன்பின் பித்தா! காதலித்துவிட்டுக் கையைவிடும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:—** எங்கே கையை விடுகிறார் என்பதைப் பொறுத்தே அது அமையும். பொக்கற்றுக்குள் கையை விட்டால் அவன் திருடன். ஜாக்கெற்றுக்குள் கையை விட்டால் அவன் காமுகன்.

ஆர். கேதீஸ், ஒட்டுசுட்டான்.

**கேள்வி:—** இராணுவத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி சீனாவிலிருந்து கடனுக்கு யுத்த டாங்கிகளை கொள்வனவு செய்யவுள்ளதாகச் செய்திகள் வருகிறதே. ஏன் பித்தா! சமாதானக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடமே டாங்கிகளைப் பெற்றுக் கொள்ளலாம் தானே. இதனை பற்றி என்ன நினைக்கிறீர்கள் பித்தா?

**பதில்:—** நியாயம் தான்.. நீங்க சொல்லுறது.. ஆனா.. சீனாட்ட டாங்கி வாங்கினா கொமிஷன் லம்பா கிடைக்கும். புலிகளிட்ட வாங்கினா கிடைக்குமோ... அடுத்தது... நம்மகிட்ட இருந்ததுகளை நாமளே தூக்கி அவங்ககிட்ட குடுத்துப்புட்டு... அப்புறம் அதையே காசு குடுத்து அவங்ககிட்ட வாங்கினால் மனது ஒப்பிக்குமோ... சங்கடம்தானே...

யோ. ஞானகுமார், அக்கராயன்.

**கேள்வி:—** ஆண்களிடம் பலம் அதிகமா? பெண்களிடம் பலம் அதிகமா?



**பதில்:—** ஆண்களின் பலம் கையிலே. ஆனால், பெண்களின் பலம் கண்களிலே. அந்த கண்களால் பார்க்கும்பார்வைக்கும்... அழும் அழுகைக்கும் எந்த ஆணின் கைப்பலமும் ஈடுநிற்க முடியாது.

கனாதீபன், திருமலை.

**கேள்வி:—** நாங்கள் ஒரு அறிவிப்பாளருக்குக் கடிதம் போட்டோம். ஆனால், அவர் பதில் போடவில்லை. என்ன காரணம்?

**பதில்:—** இப்படித்தான் பலர் அறிவிப்பாளர்களுக்கு, நடிகர், நடிகைகளுக்கு என்று கடிதங்கள் போட்டுத் தங்கள் காலத்தையும், பணத்தையும் விரயம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அவசர யுகத்தில் அறிவிப்பாளர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள அரக்க பரக்க பறக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் உமது கடிதத்தைப் படிக்க — பதிலெழுத எல்லாம் எங்கே கிடைக்கும் நேரம்.

எஸ்.சுகுணா, திருமலை.

**கேள்வி:—** பித்துக் குட்டி! நீங்க உங்கட மனைவியிடம் அடிவாங்குவதை விட, அவரை விவாகரத்துச் செய்து விட்டு என்னைக் கல்யாணம் கட்டுங்களேன்?

**பதில்:—** ஐயையோ... நான் சட்டியிலே இருந்து தப்பி அடுப்புக்குள் விழுவதற்குத் தயாராக இல்லை.

மு.சிவரூபன், வவுனிக்குளம்.

**கேள்வி:—** அன்புள்ள பித்தா! கிளிநொச்சியில் நடைபெற்ற மாலதி நினைவுதினம் பார்க்க வந்தீரா? எப்படி.... படைவீடு, கப்பல், இறங்குதுறை, ஆயுத உற்பத்தி சாலை, எதிரியிடமிருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்கள் எவ்வளவு?

**பதில்:—** பார்க்க வர முடியவில்லை. ஆனால், கேள்விப்பட்டேன். அறிந்தவைகளிலிருந்து ஒன்றை உணர முடிந்தது. அந்த நிகழ்வின் மூலம் புலிகள் அரசுக்கும், படையினருக்கும் ஒரு சேதியைச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, யுத்தமென்று வந்துவிட்டால், நாங்கள் ரெடி, நீங்க ரெடியா என்று கேட்காமல் கேட்டிருக்கிறார்கள்.

கே.வளவன், ஆவரங்கால்.

**கேள்வி:—** பித்தா! தற்போதைய சினிமா நிலவரம் என்ன... என்ன படம் முன்னணி வகிக்கிறது?

**பதில்:—** இது இளைஞர்கள் காலம்...... பெரிய நிறுவனம், பெரிய நடிகர், பெரிய இயக்குநர் என்று எதுவும் இல்லாமல் இளம் இயக்குநர்களின் படங்கள்தான் நானா, நீயா என்று முந்திக் கொள்ளச் சண்டைபிடிக்கிறது. 7ஜி ரெயின் போ காலனி... செல்வராகவனின் படம், M. குமரன் S/O மகாலட்சுமி... ஜெயம் ரவியின் படம் இரண்டும் தான் போட்டி. எது முந்தும் என்று தெரியவில்லை.

மு.ராஜேஷ், புளியங்குளம்.

**கேள்வி:—** பித்தன் ஜோக் ஒன்று தாரும்?

**பதில்:—** ஒருவர் கடற்கரை ஓரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது கடல் பக்கமிருந்து உதவி... உதவி... என்னைக் காப்பாற்றுங்கள் என்று யாரோ கத்திக் கேட்டது. திரும்பிப் பார்த்தார். கடலிலே ஒருவர் மூழ்கித் தத்தளித்துக்கொண்டிருந்தார். இதனைக் கண்ட அவர் ஓடிப்போய் அந்த நபரைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார்.

அதன் பின்னர்தான் தெரிந்தது. கடலிலே மூழ்கப்போனவர் தனது அலுவலக மனேஜர் என்று.

மனேஜர் மிகவும் நெகிழ்ந்து போய் மூச்சு வாங்கியபடி, தனது ஊழியரைப் பார்த்து சொன்னார். ''நீ செய்த உதவியை வாழ்க்கையில் மறக்க மாட்டேன். நாளைக்காலை அலுவலகத்தில் எல்லா ஊழியர்களுக்கு முன்பாகவும் நீ என்னைக் காப்பற்றிய விஷயத்தைக் கூறி உனக்குப் பரிசு ஒன்று தரப்போகிறேன்'' என்றார்.

இதனைக் கேட்ட அந்த ஊழியர் விம்மி... விம்மி... அழத் தொடங்கினார். ''வேண்டாம் ஐயா.. உங்களை நான் காப்பாற்றினேன் என்ற விஷயம் எமது அலுவலக ஊழியர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் என்னை அடித்தே கொன்று விடுவார்கள்'' என்றான் அழுதபடி.

இ.இராசலீலா, கோப்பாய்.

**கேள்வி:—** கடந்த காலம் எமக்கு எதைத் தருகிறது என்பதைக் கூறும் பித்தா?

**பதில்:—** அனுபவத்தை.

அருணாச்சலாம் பன்னீர், தண்ணீரூற்று.

**கேள்வி:—** அன்பின் பித்தா! உமக்கும் நடிகை சிம்ரனுக்கும் காதல் தொடர்பு இருந்ததாகச் சொல்லப்படுகிறதே உண்மையா?

**பதில்:—** அவர்களை எல்லாம் திருப்திப் படுத்தக்கூடிய பணம், பதவி, அந்தஸ்து, உடல் பலம் etc.... etc.. எல்லாம் என்னிடம் கிடையாது. நான் எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விடக்கூடிய ஆளும் அல்ல.....

து.மயூரன், வத்தளை.

**கேள்வி:—** பித்தா! போக்குவரத்துப் பிரிவு பொலிஸார்தான் இன்று இலங்கையில் அதிகமான வருமானம் பெறுகிறார்கள் என்கிறேன் நான். இவர்கள் ஒழுங்காக லஞ்சம் வாங்காமல் கடமையாற்றினால் நாட்டிலே விபத்துக்கள் குறையும்தானே. அப்படி ஒரு காலம் எப்போதுவரும் பித்தா?

**பதில்:—** உண்மைதான்.... ஆனால், இதெல்லாம் நடக்குமா? கடவுளை ஒருவர் சந்தித்து... கடவுளே... உலகத்திலே லஞ்சம் வாங்காத காலம் ஒன்று எப்பவரும் என்று கேட்டாராம்.... கடவுள் சொன்னாராம்... அப்படி ஒரு காலம் வரும் வரை நான் உயிரோடு இருப்பேனோ தெரியாது...... என்று. லஞ்சம் உலகத்தைச் சுற்றவைக்கும் சக்திகளில் ஒன்றாகிவிட்டது... இனிமேல் லஞ்சத்தை நிறுத்தினால் சில சமயம் உலகம் சுற்றாது விட்டாலும்விட்டுவிடும்.

ஜெ.சுஜிதா, கனகாம்பிகைக் குளம்.

**கேள்வி:—** பித்து மாமா... முள்ளில் சேலை விழுந்தால் என்ன, சேலை முள்ளில் விழுந்தால் என்ன சேலைக்குத் தான் பாதிப்பு என்று கூறுகிறார்களே. இதில் சேலையைப் பெண்களுக்கு ஒப்பிடுகிறார்களே ஏன்?

**பதில்:—** தெளிவான இந்தப் பழமொழிக்கு விளக்கம் கேட்கிறீர். எனவே, நான் கொஞ்சம் பச்சையாகவே விளங்கப்படுத்துகிறேன். பரவாயில்லையா? அதாவது, பெண்கள் போய் ஆண்களுக்கு மேல் விழுந்தால் என்ன, ஆண்கள் போய் பெண்கள் மேல் விழுந்தால் என்ன... கடைசியில் வயித்தைத் தூக்கிக்கொண்டு திரிவது பெண்கள் தான் என்பதே அந்தப் பழமொழியின் பொழிப்புரை... போதுமா?



## பித்தனின் கேள்வி

கேள்வி:— மாண்புமிகு ஜனாதிபதியிடம் கேட்க விரும்புவது என்ன?

## வாசகர்கள் பதில்கள்

திருமதி.மலர் — யாழ்ப்பாணம்.

அம்மா! தாயே! மகாராசியே! நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகும் எம் வாழ்க்கைச் செலவைக் குறைக்க, நிவர்த்தி செய்ய தயவு செய்து ஒருவழி சொல்லுவீங்களா?

இளவேனில் — யாழ்ப்பாணம்.

ஜனாதிபதி அவர்களே! உங்களுக்கு கதிர்காமத் தாத்தா செல்லமா? டக்ளஸ் மாமா செல்லமா?

சிவாஜிபாலு — மாத்தளை.

தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இந்நாட்டின் ஜனாதிபதியாகி எல்லா இன மக்களுக்கும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போன்று ஒற்றுமையாக சுபீட்சத்துடன் வாழ்வதற்கு இனிய கனவொன்று கண்டேன், என் கனவு எப்போது நனவாகும் மடம்.

எம்.ஐ.அப்ரோஸ் — மருதமுனை.

ஜனாதிபதி அவர்களே ஜே.வி.பியையும், சிஹல உரிமையையும் இன்னும் எவ்வளவு காலம் தாஜா பண்ணிச் சேர்த்து வைத்திருப்பீர்கள்.

ச.சுகதி — வட்டக்கச்சி.

ஜனாதிபதி அவர்களே எமது விடுதலையை வெகுவிரைவில் தந்துதவுங்கள். இல்லாவிடில் உங்களது ராஜினாமாக் கடிதத்தையாவது கொடுத்துதவுங்கள்.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான —குறும்பான யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:—** நாடாளுமன்றத்தில் நடந்து முடிந்த நவராத்திரி விழா எமக்கு கூறும் செய்தி என்ன?

**பதில்:—** நாடாளுமன்றத்தில் நவராத்திரி விழா நடைபெற்றதுதமிழர் ஆதிக்கத்தை காட்டியது. தமிழுக்கு வெற்றி தான். இது நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு மைக்கல் என்பது ஞாபகமிருக்கட்டும்.



இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.


பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு — 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் இளம் புயல்

இந்தியக் கிரிக்கெட் அணியில் சகல துறை ஆட்டக்காரருக்கான பஞ்சம் விரைவிலே முடிவுக்கு வந்துவிடும் போலிருக்கிறது. காரணம் இர்பான் பதான் கடந்த மாதம் 27 ஆம் திகதி (புதன்கிழமை) 20 வயதை எட்டிப் பிடித்தார் . ஆனால், இவர் அடைந்திருக்கும் புகழ் பிறரால் சாதாரணமாக எட்ட முடியாதது.



மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து, நாட்டின் மிக முக்கிய பந்துவீச்சாளராக உருவாகியுள்ள இந்த இளம் புயலைத்தான் அணியின் புதிய பொக்கிஷமாகக் கொண்டாடுகிறார்கள் கிரிக்கெட் ஆர்வலர்கள்.

''இர்பான் பதானைப் போல எங்கள் தெருக்களில் ஆயிரக்கணக்கான பந்துவீச்சாளர்கள் இருக்கின்றார்கள்'' என்று ஏளனமாகக் கூறினார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜாவித் மியாண்டட். ஆனால், பதான் சாதித்துக்காட்டிய பிறகு, தமது கூற்றிலிருந்து பின்வாங்கினார் அவர்.

அமைதியான பதானின் மனவலிமைக்கு இது ஓர் உதாரணம். மிக இளம்வயதிலேயே மிகவும் பக்குவப்பட்ட வீரரைப் போலத்தான் இர்பானின் செயல்கள் இருக்கின்றன. நெருக்கடியான காலகட்டங்களில் கூட பதற்றமின்றி ஆடுவது பதானுக்குக் கைவந்த கலை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டவிடயம்.

பந்தைவீசும் பாணியில் அச்சுஅசலாக வசிம் அக்ரமைப் போலவே தோன்றுகிறார் பதான். அக்ரமைப்போல இவரும் வேகமாகப் பந்தை வீசாமல், விவேகமாக வீசுவதைத்தான் விரும்புகிறார். சராசரி வேகம் மணிக்கு 125 கி.மீ–135 கி.மீ. உலகின் அதிவேகப் பந்துவீச்சாளர்களான அக்தர், பிரெட் லீ ஆகியோர் மிக எளிதாக 150 கி.மீ வேகத்தை எட்டுகின்றனர்.

ஆனால்,வேகத்தைநம்பாமல்விவேகத்தை நம்புவதுதான் இர்பானின் பலம். பந்தை அட்டகாசமாகச் சுழற்றும் திறன் இயல்பாகவே இவரிம் இருப்பதாக விமர்சகர்கள் மெய்சிலிர்க்கின்றனர். அவுஸ்திரேலியாவிற்கு எதிராக சமீபத்தில் சேப்பாக்கில் நடைபெற்ற டெஸ்டில் ஜஸ்டின் லேங்கரை 'கிளீன் போல்ட்' செய்த விதம் இதை மெய்ப்பிக்கும்.

கடந்த 2003 ஆம் ஆண்டு டிசம்பரில்தான் பதானின் சர்வதேசக் கிரிக்கெட் வாழ்க்கை தொடங்கியது. அவுஸ்திரேலியாவுக்குஎதிரான அந்தத் தொடரில் பதானும், பாலாஜியும் எதிரணிக்கு சிம்மசொப்பனங்களாக விளங்கினார்கள். அப்போதைய முன்னணி பந்துவீச்சாளர்கள் இல்லாமலேயே இந்தியா கலக்கியதற்கு பதானும் ஒரு காரணம்.

பொதுவாக அவுஸ்திரேலியாவுக்கு எதிராகத் தங்களது கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கும் இந்திய வீரர்கள் ஜொலிக்கிறார்கள். அந்த வரிசையில் யுவராஜ்சிங்குடன் இர்பான் பதானும் சேர்ந்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளை விட ஒரு நாள் ஆட்டங்களில் அதிகமாக மிளிர்கிறார் பதான். ஜனவரி 2004 இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரே அவரது ஒரு நாள் ஆட்டப் பிரவேசம். இதுவரை 26 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள பதான் 46 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டங்களில் 19 மாதங்கள் மட்டுமே அனுபவம் பெற்றுள்ள பதான், இந்தியாவின் பிரதான பந்துவீச்சாளரான அணித்தலைவர் கங்குலியின் நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமாகியுள்ளார்.

ஒருநாள் ஆட்டங்களில் இவரது அதிகபட்சம் 38 ஓட்டங்கள் என்றாலும் கூட, துடுப்பாட்ட வீரர்களுக்கு உண்டான திறன், லாவகம் தமக்கிருப்பதைத் தெளிவாகப் புலப்படுத்தி இருக்கிறார் பதான். மேலும், போதிய வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் அதிரடி ஆட்டமும் ஆட முடியும் என்பதையும் நிரூபித்திருக்கிறார். இதனால், இவரை சகலதுறை ஆட்டக்காரர் என்ற புதிய கோணத்தில் பார்க்கத் தொடங்கி இருக்கிறது கிரிக்கெட் உலகம்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் தனது முதலாவது அரைச்சதத்தை எட்டினார் பதான். அதற்கு முன்பாக இவரது அதிகபட்சம் 49 ஓட்டங்கள் இருந்தது. இது




தவிர டெஸ்ட்களில் 18 விக்கெட்டுக்களையும் அவர் வீழ்த்தியுள்ளார்.

களத்தடுப்பிலும் பதான் புலியாகத்தான் இருக்கிறார். பொதுவாகவே இந்தியப் பந்துவீச்சாளர்கள் சிறந்த களத்தடுப்பாளர்களாக இருந்ததில்லை. கும்ளே, ஸ்ரீநாத் ஆகியோர் இதற்கு உதாரணம். இதற்கு விதிவிலக்காக இருப்பவர்கள் பதானும், அக்ரமும்தான்.

பதானைப் பற்றிய விமர்சனங்களும் இல்லாமலில்லை. ஒரு நாள் ஆட்டங்களில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தினாலும், அதிக ஓட்டங்களையும் விட்டுக் கொடுக்கிறார் என்பது அதில் ஒன்று. புள்ளி விவரங்களும் அதை உண்மை என்றே கூறுகின்றன. ஒவருக்குச் சராசரியாக 5 ஓட்டங்களைக் கொடுத்துள்ளார் பதான்.

அனுபவம் பெறப் பெற இந்தக் குறையை பதான் சரி செய்து கொண்டுவிடுவார் என நம்பலாம். அப்படிச் செய்துவிட்டால் இந்திய அணியின் ராஜா இவரே!

# மீண்டும் டெனிஸ் களத்தில் ஸ்டெபிகிராப் - சபாடினி




எத்தனையோ டெனிஸ் வீராங்கனைகளின் ஆட்டத்தினை நீங்கள் பார்த்து ரசித்திருந்தாலும், ஜேர்மனியின் ஸ்டெபிகிராப், ஆர்ஜென்ரீனாவின் காபரில்லா சபாடினி இருவரும் கிராண்ட் ஸ்லாம் இறுதி ஆட்டங்களில் மோதுவது போன்ற ஆட்டத்தை உங்களால் பார்த்திருக்கவே இயலாது. அதுவும் விம்பிள்டன் ஆட்டங்களின் ஒவ்வொரு முறையும் ஸ்டெபியிடம் சபாடினி தோற்கும் போதெல்லாம் ரசிகர்களுக்கு வேதனையாக இருக்கும். 'அடடா! இந்த முறையும் தோற்றுவிட்டாரே' என்று ' உச்' கொட்டுவார்கள். ஸ்டெபிக்கும் சபாடினியுடன் மோதுவதில் மிகவும் விருப்பம்.


இந்த இருவருமே டெனிஸ் போட்டிகளில் ஓய்வு பெற்று 5 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. அண்மையில் பெர்லின் நகரில் ஸ்டெபிகிராப் பெயரில் கட்டப்பட்டிருக்கும் புதிய மைதானத்தைத் திறந்து வைப்பதற்காக ஸ்டொபியுடன் சபாடினியை மோத விட்டார்கள். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் எப்போதும் போல ஸ்டெபியே வெற்றி பெற்றார். ஆனாலும், கைதட்டல் விழுந்ததென்னவோ சபாடினிக்குத் தான்.

## விளையாட்டுச் செய்திகள்


பிரான்

# களை கட்டப் போகும் டெனிஸ்









டெனிஸ் போட்டியின் போது நீங்கள் ஒன்றைக் கவனித்திருக்கலாம். வீரர்கள், வீராங்கனைகள் அடிக்கும் பந்தை பின்னால் நிற்கும் சிறுவர் அல்லது சிறுமிகள் ஓடி வந்து எடுப்பர். தற்போது அவர்களுக்குப் பதிலாக இனி 'மொடல்' பெண்கள் வலம் வரப்போகிறார்கள். மாட்ரிட்டில் கடந்த வாரம் நடந்த 'மாஸ்டர்ஸ் டென்னிஸ்' தொடரில் பந்தை எடுத்துச் செல்லும் ஸ்பெயின் 'மொடல்' பெண்களைப் படத்தில் காண்க.

# இந்திய - ஆஸி. டெஸ்ட் சுவாரஸ்யம்

அட... இவர் முகத்திலா முழித்தோம். இன்றைக்குப் பொழுது 'அவ்வளவுதான்' என்று பலர் புலம்புவதைப் பார்த்திருக்கிறோம். இது போன்ற மூடப் பழக்க வழக்கங்கள் கிரிக்கெட்டிலும் உண்டு. சதம் அடித்தால் சூரியனைப் பார்ப்பார்கள். இன்னும் சிலர் ராசியான துடுப்பாட்ட மட்டையை மாற்ற மாட்டார்கள். ஸ்டீவ் வோ கூட ஒரே தொப்பியைப்பலஆண்டுகளாகஅணிந்து வந்தார். இது போன்ற எத்தனையோ உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், இங்கே கொஞ்சம் வித்தியாசமான அனுபவத்தைப் பார்க்கப்போகிறோம். அதாவது 1964–65இல் இந்தியா வந்த பாப் சிம்சன்தலைமையிலான அவுஸ்திரேலிய அணி அபாரமாகச் செயற்பட்டது.இவர்கள் முதல் டெஸ்டை வென்ற குஷியில் மும்பை வந்திறங்கினர். இப்போட்டியில் இந்தியா வெல்வது என்பது இயலாத காரியம் என்றே பேசப்பட்டது.

அப்போது மும்பைக் கிரிக்கெட் உறுப்பினர் ஒருவருக்குவினோத யோசனை ஒன்று தோன்றியது. அவுஸ்திரேலிய அணிதோற்க வேண்டுமானால் தீத்தோரி பாவ் முகத்தில் முழித்தாலே போதும் என்றார். பார்சி இனத்தைச்சேர்ந்த இந்த மனிதர் மும்பைக் கிரிக்கெட் வட்டாரத்தில் மிகவும் பிரபலம். ஆட்டத்துக்காக அல்ல வெறும் முகத்துக்காக. இவரைப் பார்த்துவிட்டுச்சென்றால், அன்றைய தினம் அந்த துடுப்பாட்ட வீரரின் நிலைமையைப் பற்றிச்சொல்லத் தேவையில்லை. ஒன்று விரைவாக ஆட்டமிழந்து விடுவார். அல்லது ஏதாவது சோதனையில் மாட்டிக் கொள்வார்.

இதை மனதில் வைத்து ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக அவுஸ்திரேலிய வீரர்கள் பயிற்சி செய்யும் பகுதியில் தீத்தோரியை உலா வரச் சொன்னார்கள். இவரது அதிர்ஷ்டம் உடனடியாகப் பலனைத் தந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற பிறகு, அவுஸ்திரேலியாவின் முன்னணி துடுப்பாட்டவீரரான நார்மன் ஓ நீல் உடல் நலம் பாதிக்கப்பட்டார். இதனால், 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிலைமைக்கு அவுஸ்திரேலியா தள்ளப்பட்டது. பின்னர் இந்தியா ஜோராக வெற்றி பெற்றுச் சாதித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை விற்ற கணவன்

நிறைபோதையில் இருந்த மைக்கேலுக்கு நேரம் போனதே தெரியவில்லை. குடித்தது இத்தோடு போதும் எனத் தோன்றிய வேளை தான் நேரத்தைப் பார்த்தான் மைக்கேல். நேரம் இரவு 12 மணியைத் தாண்டி இருந்தது.

'இவ்வளவு நேரம் இருந்துவிட்டேனா' எனத் தனக்குத் தானே பேசிக்கொண்டு ஹோட்டலைவிட்டு வெளியே வந்தான். டாக்சி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான். டாக்சியை அனுப்பி விட்டு வீட்டு வளவுக்குள்ளே நுழைந்தான். வீடு இருட்டில் மூழ்கிக் கிடந்தது. வீட்டை விட்டு வீட்டு வெளியே செல்லும்போது மின் குமிழ்களை எரிய வைத்துவிட்டுத்தான் சென்றான். அப்படியானால், மின்குமிழ்கள் எப்படி அணைந்தன?

நிறைபோதையில் இருந்தவன் தட்டுத்தடுமாறி படபடத்த இதயத்துடன் மெதுவாக முன் கதவை நோக்கி நகர்ந்தான். கதவு ஏற்கனவே பூட்டப்பட்ட படியே இருந்தது. தன்னிடம் இருந்த சாவியைக் கொண்டு கதவை மெதுவாகத் திறந்தான்.

உள்ளே கும்மிருட்டாகவிருந்தது. உள்ளே செல்வதற்கு மிகவும் அஞ்சினான். இப்போது போதையை விடப் பயம் தான் அவன் உடம்பு முழுவதும் ஆக்கிரமித்திருந்தது.

வீட்டின் உட்சுவரைத் தடவியவாறு மெதுவாக உள்ளே நுழைந்தான். அப்போது அவனது கைவிரல்களில் சுவிட்ச் ஒன்று தட்டுப்பட்டது. தனது அதிஷ்டம் என நினைத்துக் கொண்டு அதனை அழுத்தினான். அவனது துரதிஷ்டம் அப்போது மின்குமிழ் எரியவில்லை. ஏமாற்றம் கலந்த பயத்துடன் ஏனைய சுவிட்சுகளையும் தடவிப்பிடித்து அழுத்தினான். எதுவும் எரியவில்லை. மொத்தமாக எல்லா மின் குமிழ்களும் எரிய மறுத்தன.

அப்படியானால், உள்ளே யாரோ திருட்டுத்தனமாக நுழைந்துதான் இதனைச் செய்திருக்க வேண்டும் என ஊகித்த மைக்கேல், தனக்கு ஏதோ ஆபத்துநிகழப்போகிறது என்பதையும் உணர்ந்து கொண்டான்.

உடனே இந்த இடத்தைவிட்டுதப்பிச்செல்ல வேண்டும். இல்லையேல் தனது உயிருக்கு ஆபத்து என நினைத்த மைக்கேல் உடனே வீட்டைவிட்டு வெளியேறத்திட்டமிட்டான்.

அந்தக் கும்மிருட்டிலும் கூட அவன் எதனையும் கவனியாது மிக வேகமாக வெளிப்பக்கத்தை நோக்கிப் பாய்ந்தான். ஆனால், அவன்சற்றும் எதிர்பார்த்திராதவகையில் திடீரென அவன் முன் தோன்றிய ஓர் உருவம் அவனை மடக்கிப் பிடித்தது.



அவன் பாதையில் இருந்ததன் காரணத்தால் அந்த உருவத்தின் பிடியில் இருந்து தன்னை விடுவிக்கக்கூடிய சக்தி அவனிடம் இருக்கவில்லை.

மறுகணம் அந்த உருவத்தின் கையில் இருந்த பளபளப்பான கூர்மையான கத்தி ஒன்று அவனது மார்புப் பகுதியிலும், வயிற்றுப் பகுதியிலும் சதக் சதக் என இறங்கியது.

''ஆ'' என ஒலி எழுப்பியவாறு மைக்கேல் நிலத்தில் சரிந்தான். அந்த உருவம் மறு நிமிடமே அந்த இடத்தை விட்டு மறைந்துவிட்டது.

அயலவர்களின் தகவலை அடுத்து வாஷிங்டன் பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்து வந்தனர். கடந்த மூன்று நாட்களுக்கு முன் உறவினர் வீடொன்றுக்குச் சென்றிருந்த மைக்கேலின் மனைவியும் விடயம் அறிந்து பதறியடித்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள்.

உளவுத்துறையினரின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. மைக்கேலின் மனைவி உட்பட அயலவர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். மைக்கேலின் வாழ்க்கை வரலாறு பற்றியும் உளவுத்துறையினர் ஆராய்ந்தனர்.

மைக்கேல் சொந்தத் தொழில் செய்து வந்த ஒரு நடுத்தரப் பணக்காரன். குடியைத்தவிர வேறெந்தக் கெட்ட பழக்கமும் அவனிடம் இல்லை. புளோரன்ஸ் என்ற பெண்ணை 1960ஆம் ஆண்டு திருமணம் முடித்துக்கொண்டான். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை.

தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ மைக்கேலுக்கு எதிரிகள் என்று எவரும் இருக்கவில்லை. எல்லோருடனும் நன்றாகப் பழகுவான். அப்படியாயின் மைக்கேலைக் கொன்றவர்கள் யார்?

ஒருவேளை வீட்டுக்குள் திருட வந்தவன் அதனைச் செய்திருப்பானா? அதற்கும் வாய்ப்பில்லை. கொலை நடந்த அன்று மைக்கேலின் வீட்டிலிருந்து எந்தப் பொருளும் திருட்டுப்போகவில்லை. அனைத்தும் வைத்த வைத்த இடத்தில் அப்படியே இருந்தன. மைக்கேலின் மனைவி புளோரன்ஸ் மட்டும் மைக்கேலுடன் அந்த வீட்டில் வாழ்ந்து வந்தாள். இக்கொலையை அடுத்து மைக்கேலின் வீடு பல தடவைகள் சோதனையிடப்பட்டது.

திடீரென ஒரு நாள் உளவுத்துறையினர் மைக்கேலின் வீட்டைச் சோதனையிட்டுக் கொண்டிருந்த சமயம் வீட்டுக்கு வெளியேயும் தேடுதல் நடத்தினர். எதிர்பாராதவிதமாக வெளியில் இருந்த பூச்சாடி ஒன்றுக்குள் இருந்து இரத்தம் படிந்து காய்ந்து போன நிலையில் கத்தி ஒன்றை உளவுத்துறையினர் கண்டனர்.

கத்தியில் இருந்த கைரேகையை மையமாக வைத்துக் கொலையாளியைக் கண்டு




பிடிப்பது மிகச் சிரமமான விடயமே. இருப்பினும் கிடைத்த துப்பைப் பயன்படுத்தவே உளவுத்துறையினர் விரும்பினர்.

கிடைத்தகைரேகைகளைவைத்துச்சோதனை செய்து பார்க்கையில் மைக்கேலின் மனைவியின் கைரேகையும் அந்தக்கத்தியில் இருந்த கைரேகையும் ஒன்றாய் காணப்பட்டன.

இதனை அடத்து மனைவி புளோரன்ஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாள்.

தனது கணவனை நிதானே கொலை செய்ததாக புளோரன்ஸா ஒத்துக்கொண்டாள். அதற்கான காரணத்தையும் கூறினாள்.

''எனது கணவர் பல வருடங்களுக்கு முன் சொந்தமாக வியாபாரம் செய்து வந்தார். மது பாவனைக்கு மட்டும் அடிமையாயிருந்த அவர் காலப்போக்கில் ஏனைய போதைப் பொருட்களுக்கும் அடிமையானார். இதனால், அவரது வியாபாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. பணத்தட்டுப்பாடும் ஏற்பட்டது.

பணத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய அவர் ஏனைய தொழிலதிபர்களிடம் என்னைப் பலவந்தப்படுத்தி விற்றார். எனது விருப்பமின்றியே நான் பணத்துக்காக விபச்சாரத்தில் ஈடுபட்டேன். இவ்வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு வந்ததால் என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய என் கணவரைக் கொலை செய்ய முடிவெடுத்தேன்'' என்றாள்.

சம்பவ தினம் உறவினரின் வீடு செல்வதாகக் கூறிச் சென்றவள், மைக்கேல் வீடு திரும்ப முன்னரே வீட்டுக்குத் திரும்பி வந்து மின் தொடர்புகளையும் துண்டித்துவிட்டு ஒளிந்திருந்து காரியத்தைக் கச்சிதமாக முடித்திருந்தாள்.

வாஷிங்டன் நீதிமன்றம் புளோரன்ஸ்சுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

-எம். ஐ. முபாரக்-

---

# ராசிபலன்

இவ்வார 'ராசிபலன்' 31-10-2004, 6-11-2004

பொ. சந்திரன்

## இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | | | |
| | | | |
| | | | |
| | புதன் | சூரியன் கேது | சுக்கிரன் செவ்வாய் குரு |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | சுவாதி | ராகு |
| சுக்கிரன் | அத்தம் | சந்திரன் |
| புதன் | அனுசம் | சனி |
| சூரியன் | சுவாதி | ராகு |
| குரு | அத்தம் | சந்திரன் |
| சனி | புனர்பூசம் | குரு |

ஐப்பசி 16 முதல் 22 வரை

சந்திரன் மீனம் முதல் இடபம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

(1,8) உரிய செவ்வாய் ஆறாம் வீட்டில் இருப்பது சிறப்பு. அத்துடன் ஆறுக்குரிய புதன் எட்டில் இருப்பது பரிவர்த்தனம். ஒருவர் வீட்டில் மற்றவர் வீடுமாறி இருக்கும் நிலை. உடல் ஆரோக்கியம் உண்டு. பழைய கடன்தீரும். பகை இல்லாமல் போகும். திருடர் பயம்இருக்காது. செவ்வாய் ராகுவின் சாரத்தில் இருப்பது சிறப்பல்ல. மேலும், ராகு ராசியில் இருப்பது காரியத்தடை. இனம் புரியாத பயம். (2,7) உரிய சுக்கிரன் ஆறில் நீசமாக இருப்பது கூடாது. கையில் உள்ள பணம் செலவாகும். திருமணத்தடை இருக்கும். வாகன சுகம் இருக்காது. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது தொழில் யோகம் உண்டு. லாபத்துக்குப் பங்கம் இருக்காது. 7 இல் கேது இருப்பது பங்கு வியாபாரத்துக்குத் தடை. குடும்ப அமைதி இருக்காது. அங்கு சூரியன் நீசமாவதும் பிரச்சினைதான்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6)உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது விஷேசம். ஆனால், அங்கு நீசமாவது அதாவது பலவீனமாக இருப்பது ஆற்றல் குறைந்த நிலை. மேலும், பகைக்கிரகமான சந்திர சாரம் பெற்று இருப்பதும் நன்மை செய்யும் வாய்ப்புக் குறையலாம். எண்ணிய எண்ணத்தை செயல்படுத்த முடியாத நிலை. ஆரோக்கியம் பாதிக்கும் வாய்ப்பு உண்டு. (2,5) உரிய புதன் ஏழில் இருப்பது நன்மை இல்லை. கையில் பணம் இருக்காது. மன அமைதி இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது. இருப்பிடம், வாகனம், சுகத்துக்கும் அதிபதியான சூரியன் நீசமாகி கேதுவுடன் சேர்ந்தபடியால் பங்கம் உண்டு. (7,12) உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பதால் திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். தொழில் கிரகம் சனி இரண்டில் இருப்பதும் பிரச்சினை. குரு சுகம் இருப்பதால் சமாளிக்கலாம்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ஆறில் இருப்பது நல்லது. புதன் ஆறாம் வீட்டில் பலன் தரக்கூடியவர். மேலும், சனி சாரம் பெற்று இருப்பதும் பரவாயில்லை. எண்ணிய எண்ணம் செயல் வடிவம் பெறும். வாகன சுகம் உண்டு. இருப்பிடங்களால் பிரச்சினை இல்லை. (5,12) உரிய சுக்கிரன் நாலில் நீசமாவது சுகம் குறைந்த நிலை. அட்ட ஐஸ்வரியத்துக்கும் உரியவர் பலவீனமாவது பிரச்சினைதான். (7,10) உரிய குரு நாலில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றம் இருக்காது. மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது சங்கடமான நிலைதான்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் மிதுனம் முதல் சிங்கம் வரை, அதாவது, தனது வீட்டைக் கடந்து செல்வதால் எண்ணிய எண்ணம் நிறைவேறும். சென்ற இடம் எல்லாம் சிறப்பு இருக்கும். மனக் கவலை இருக்காது. இரண்டுக்குரிய சூரியன் நீசமாவது கையில் உள்ள பணம் செலவாகும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது போகலாம். (4,11) உரிய சுக்கிரன் மூன்றில் நீசமாவது கூடாது. வாகன சுகம் இருக்காது. இருப்பிடத்தில் ஏதும் பிரச்சினை வரக்கூடும். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்கள் விசுவாசமாக இருக்கமாட்டார்கள். (7,8)உரிய சனி 12 இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்புத் தடைப்படலாம். குடும்ப உறவுபாதிக்கலாம். தொழிலுக்குரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் தொழில் முன்னேற்றம் உண்டு.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் மூன்றில் நீசமாக இருப்பது நன்மை இல்லை. சூரியன் மூன்றில் பலன் செய்யக் கூடியவர். பலம் அற்று இருப்பது செயல் திறன் குன்றிய நிலை. மேலும், ராகுவின் சாரத்தில் இருப்பதும் பிரச்சினை தான். உடல் பலம் குறையும் நிலை. சிந்தனை ஓட்டம் தடைப்படலாம். சிறு தூர பிரயாண வாய்ப்புத் தடைப்படலாம். (2,11) உரியபுதன் நாலில் இருப்பதும் பலன் குறைவு. கையில் உள்ள பணம் செலவாகும். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்கள் விசுவாசமான இருக்க மாட்டார்கள். (3,10)உரிய சுக்கிரன் இரண்டில் நீசமாவதால் இளைய சகோதரத்துக்கு கூடாது. தொழிலில் முன்னேற்றம் இருக்காது. (6,7) உரிய சனி 11 இல் இருப்பதால் பகைவிலகும். திருடர் பயம் இருக்காது. திருமணவாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு.

**கன்னி:**

(1,10) உரிய புதன் மூன்றாம் இடத்தில் இருப்பது நன்மை செய்யவாய்ப்பு இல்லை. சனியின் சாரத்தில் இருப்பது ஓரளவு ஆறுதல் உண்டு. கடும் முயற்சி செய்துதான் ஒரு காரியத்தை முடிக்கலாம். இலகுவில் அமையாது. தொழில் ஸ்தானத்தில்பிரச்சினை இருக்கலாம். (2,9) உரிய சுக்கிரன் ராசியில் நீசமாவதால் கையில் உள்ள பணம் செலவாகும். தகப்பனுக்கும் கூடாத காலம். அதிஷ்டம் இருக்காது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது பிரச்சினையானது வீடு தேடி வரும். இருப்பிடங்களால் தொல்லை. வாகனங்களால் நஷ்டம். உயர் கல்விக்குத் தடை. அயலவரோடு சண்டை. திருமணம் தாமதமாகும். குடும்பத்தில் அமைதி இருக்காது. மன அமைதி குறைந்த வாரம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8)உரிய சுக்கிரன் பன்னிரண்டில் மறைவதில்லை. ஆனால், நீசமாக செயல்திறம் குறைந்து பலவீனமாக இருப்பது நன்மை செய்யாது. மேலும், பகைக்கிரகமான சந்திர சாரம் பெற்று இருப்பதும் நல்ல பலனைச் செய்யாது. இருப்பிடம் விட்டுத் தூர தேசம் போக வேண்டிய நிலை. செலவு கட்டுக்கடங்காது இருக்கும். புகழ் அல்லது மானத்துக்குப் பங்கம் ஏற்படலாம். எண்ணிய எண்ணம் தடைப்படலாம். (2,7)உரிய செவ்வாய் பன்னிரண்டில் இருப்பது கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புத் தாமதமாகும் அல்லது தடைப்படலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இல் இருப்பது வாகன சுகம் குறையலாம். இருப்பிடங்களில் அமைதி இருக்காது. தொழில் ஸ்தானம் சுத்தமாக இருப்பதால் தொழிலில் முன்னேற்றம் இருக்கும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் பதினொன்றில் இருப்பது விசேஷம். ஆனால், ராகுவின் சாரத்தில் இருப்பது நன்மை இல்லை. இருப்பினும் உடல் ஆரோக்கியம் உண்டு. தூரதேச பிரயாண வாய்ப்பு இருக்கும். பகை அற்றுப் [illegible] செயல் வடிவம் பெறும். (2,5) உரிய குரு 11 இல் இருப்பது சிறப்புடையது. கையில் பணம் இருக்கும். பூர்வீகச் சொத்து சேரும். (3,4) உரிய சனி எட்டில் இருப்பது கூடாது. இளைய சகோதரம் விலகி இருக்கலாம். வாகன சுகம் இருக்காது. விபத்து ஏற்பட இடமுண்டு. இருப்பிடத்தில் அமைதி இருக்காது. சூழ இருப்பவரோடு சண்டை, சச்சரவு இருக்கும். (7,12) உரிய சுக்கிரன் நீசமாவதால் திருமணம் தாமதமாகலாம். சூரியன் நீசமாவதால் தொழிலில் முன்னேற்றம் இருக்காது.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு பத்தாம் இடத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. மத்திமபலனைச் செய்யலாம். ஆனால், சந்திரசாரம் பெற்று இருப்பது நல்ல பலனைச் செய்யலாம். எண்ணிய எண்ணம் செயல் வடிவமாகும்போது தடை வரலாம். வாகன சுகம் இருக்காது. இருப்பிடத்திலும் பிரச்சனைகள் வரலாம். சுற்றம் சூழ இருப்பவர்களுடனும் அந்நியோன்னியம் இருக்காது. (2,3)உரிய சனி7இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்லபலன் இல்லை. (7,10) உரிய புதன் 12 இல் மறைவதால் திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. தொழில் ஸ்தானத்திலும் பிரச்சினைகள் வர வாய்ப்புண்டு. இடமாற்றம் வரலாம். பக்க உதவிகள் கிடைக்கலாம். ராசியையைச் சனி பார்ப்பது சங்கடமான நிலை.

**மகரம்: உத்தராடம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். மேலும், குருவின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. எண்ணிய எண்ணம் கைகூடும். கையில் பணம் இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றலாம். (4,11) உரிய செவ்வாய் ஒன்பதில் இருப்பதில் பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. இருப்பிடத்திலும் அமைதி இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. பிரயாண வாய்ப்புப் பாதிக்கலாம். 7க்குரிய சந்திரன் 7இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். (5,10) உரிய சுக்கிரன் 9 இல் நீசமாவதால் குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. மன அமைதி இருக்காது. தொழில்துறை முன்னேற்றம் இருக்காது. குரு சுகம் இருப்பது சகல தோசத்தையும் நிவர்த்தி செய்யும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12)உரிய சனி ஐந்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. குருவின் நட்சத்திரத்தில் இருப்பது தீய பலனின் தாக்கம் குறையலாம். சயன சுகம் பாதிக்கலாம். மன அமைதி பாதிக்கலாம். தீய செயலில் ஈடுபடத் தூண்டும். செலவு கட்டுக்கடங்காது. (2,11) உரிய குரு எட்டில் இருப்பதில் பயன் இல்லை. கையில்பணம் இருக்காது. நண்பர்களால் செலவு இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் எட்டில் இருப்பதால் தொழில் ஸ்தானம் பாதிக்கலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. தங்க ஆபரணங்கள் தொலைய இடமுண்டு. (4,9) உரிய சுக்கிரன் எட்டில் இருப்பது நல்லது. ஆனால், நீசமாக இருப்பதால் உரிய பலனைச் செய்யாது.


**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7 இல் இருப்பது நல்லது. மேலும், சந்திரசாரம் பெற்று இருப்பது மேலும் சிறப்பான பலனைச் செய்யும். எண்ணிய எண்ணம் ஈடேறும். பக்க உதவிகள் கிடைக்கும். தொழில் ஸ்தானம் நல்ல முறையில் இயங்கும். பதவி உயர்வு உண்டு. ஆனால், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது பலனில் மாறுதல் வர வாய்ப்புண்டு. (2,9) உரிய செவ்வாய் 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் கூடாது. பிரயாணத்தடையுண்டு. அதிஷ்டமும் இல்லாது போகலாம். (4,7) உரிய புதன் 9 இல் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. திருமண வாய்ப்புக்கள் தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. வாகன சுகம் இருக்காது. இருப்பிடங்களில் அமைதி இருக்காது. இருப்பினும் குரு சுகம் இருப்பதால் ஆறுதல் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி ரீவி பிறந்த தினம்





இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஈடு இணையற்ற வகையில் அறிவூட்டும் நிகழ்ச்சிகளையும், பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும் வழங்கிவரும் சக்தி ரீ.வி, அதன் ஆறாவது பிறந்த தினத்தை கடந்த 20 ஆம் திகதி கொண்டாடியது.

மின்னல் போன்ற சூடான அரசியலை அலசும் நிகழ்ச்சிகளையும் களம் போன்ற கல்வி சார் நிகழ்ச்சிகளையும், குட்டிச் சுட்டி போன்ற சிறுவர் நிகழ்ச்சிகளையும் வழங்கி சக்தி அதன் மணி மகுடத்திற்கு மேலும் அணி சேர்த்து நிற்கிறது.

அன்றாடம் நாடு பூராவும் ந டக்கும் தகவல்களைத் திரட்டி காலை 6.30 மணிக்கும் நண்பகல் ஒரு மணிக்கும் இரவு எட்டு மணிக்கும் செய்திகளை வழங்குவதுடன் மணித்தியாலச் செய்திகளையும் வழங்கி வருகிறது.

பொழுதுபோக்கு அம்சங்களாகத் தொடர் நாடகங்கள், இசைநிகழ்ச்சிகள், திரைப்படங்கள் போன்றவற்றையும் ஒளிபரப்பி வருகிறது.

சிறிய அளவில் ஆரம்பிக்கப் பட்ட சக்தி ரீவியின் ஒளிபரப்பு தற்போது நாடளாவிய ரீதியில் நடை பெற்று வருகிறது. விசேடமாக யாழ் மக்களுக்கு தமிழ் நிகழ்ச்சி அடங்கிய விசேட ஒளிபரப்பு நடைபெற்று வருவதும் குறிப் பிடத்தக்கது.



1997ஆம் ஆண்டு எம்.ரீ.வி தொலைக்காட்சி சேவையில் எம்.ரீ.வி சன்விஷன் எனும் ஒரு நிகழ்ச்சித் தொகுப்பாக தமிழ் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் 1998 ஆம் ஆண்டு சக்தி ரீ.வி தமிழ் மக்களுக்குதனிச் சேவையாக நிகழ்ச்சிகளை வழங்க ஆரம்பித்தது

ஆரம்ப காலத்தில் குறைந்த நேர அளவில் ஆரம்பிக்கப்பட்ட சக்தி ரீ.வி இன்று 13 மணித்தியாலங்கள் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது.

சக்தி ரீ.வியின் ஆறாவது பிறந்ததினத்தை முன்னிட்டு புன்னிப்பிட்டிய கலையகத் தொகுதியில் சிறப்பு நேரடி நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் மஹாராஜா கூட்டு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான மனோ விக்கிரமநாயக்க, செனரத் கப்புகொட்டுவ (எஸ்லோன் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர்), ஸ்ரீலால் அஹங்கம (நிதிப்பிரிவு ), எம்.ரீ.வி, சக்தி ரீ.வி பணிப்பாளர் ஜே. ஸ்ரீரங்கா, பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆதித்தியரே, சுடர் ஒளி, உதயன் பத்திரிகை நிறுவன நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் உட்பட பலர் கலந்துகொண்டனர். இவ்வைபவத்தில் கலந்துகொண்ட உதயன், சுடர்ஒளிப் பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் சரவணபவன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "முதலாவது பிறந்த தினத்தில் இருந்து 6 வருடங்களாக அதாவது இன்று 6ஆவது பிறந்த தினத்திலும் உங்களை வாழ்த்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சக்தியின் வளர்ச்சி மிகப் பெரியது. தற்போது வடமாகாணத்தில் உள்ளவர்களுக்கும் சக்தி ரீ.வி. பார்க்கும் பாக்கியம் கிடைத்துள்ளது. சக்தி குடும்பத்தவர்கள் என்னை அழைத்து கௌரவித்ததற்கு நான் நன்றி கூறிக்கொண்டு, உங்கள் எல்லோரையும் வாழ்த்தி மேலும் மேலும் சக்தி தன்னுடைய தற்போதைய நிலையில் இருந்து தன்னை மிகவும் முன்னேறக்கூடிய இடத்திற்கு செல்லும் என வாழ்த்துகிறேன்." என்றார்.

எம்.ரீ.வி, சக்தி ரீ.வி. பணிப்பாளர் ஜே. ஸ்ரீரங்கா கருத்துத் தெரிவிக்கையில், "இன்று சக்தி ரீ.வி. தனது 6ஆவது பிறந்த தினத்தை கொண்டாடிக்கொண்டு இருக்கிறது. பல வேலைத் திட்டங்களையும், சமூக சேவைகளையும் நாம் செய்யவிருக்கின்றோம். ஒன்று இரண்டு பாடசாலைகளை கட்டவிருக்கின்றோம். இதனை ஒரு மாத காலத்திற்குள் நீங்கள் அறிந்துகொள்ளலாம். இந்த வேளையில் எமக்கு உதவி செய்த அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நன்றி கூறிக்கொள்கின்றேன்" என்றார்.

நாடாளாவிய ரீதியில் சக்தி ரீ.வி.யின் பிறந்த தினத்தை முன்னிட்டு மத வழிபாடுகளும் 'சமூக நல நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண நல்லூர் முருகன் கோவிலில் விசேட பூஜை வழிபாடு நடைபெற்றது. சக்தி ரீ.வியின் பிறந்த தின வைபவத்திற்காக வடபகுதி சமயப் பெரியார்களும்' கல்விமான்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது வாழ்த்து செய்தியில் "சக்தி தொலைக்காட்சி நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற 6ஆவது ஆண்டு விழவிற்கு வாழ்த்து தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மக்களுடைய வாழ்க்கையிலே இப்படியான நிறுவனங்கள் பெருந் தொண்டைச் செய்கின்றன. உறவை வளர்த்து மக்களிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தி பண்பாடு, ஒழுக்கம் முதலியவற்றை வளர்த்துக்கொள்வதற்கு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. அந்த வகையிலே சக்தி நிறுவனத்தினை மேலும் நான் வாழ்த்துகின்றேன். நான் அவர்களை பாராட்டுகின்றேன். சக்தி நிறுவனத்துடைய இந்தப் பணி மேலும் ஓங்க வேண்டும். இந்த நிறுவனத்தினால் மக்களுடைய ஒழுக்கம், பண்பாடு கட்டுப்பாடு என்பன வாழ்கின்றது என்று சொன்னால் அதில் மிகை ஒன்றும் இல்லை. அந்த வகையில் சக்தி நிறுவனத்தினுடைய இந்த ஈடுபாடு, செயல்முறைகள் அனைத்தையும் மேலும் மேலும் வாழ்த்துகின்றேன்." என்றார்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் தனது வாழ்த்துச் செய்தியில் "சக்தி ரீ.வி. கடந்த 6 ஆண்டுகளில் நல்ல சேவையை செய்து 6ஆவது ஆண்டு நினைவைக் கொண்டாடுவதை இட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். சக்தி ரீ.வி.நிறுவனத்தாருக்கு எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும். சக்தி ரீ.வியானது யாழப்பாணத்து மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டது. காலையில் குட்மோனிங் ஸ்ரீலங்கா தொடக்கம் நியூஸ் பெஸ்ட் தமிழ் செய்தி நியூஸ் பெஸ்ட் ஆங்கில செய்தி வரை அனைத்து நிகழ்ச்சிகளுடனும் பின்னிப்பிணைந்து விட்டார்கள். அவர்கள் பணி மேலும் வளர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்." என்றார்.



யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜே.நிக்கலஸ் தனது வாழ்த்துச் செய்தியில் "சக்தி ரீ.வியின் 6ஆவது நிறைவு ஆண்டிலே மகிழ்ச்சியோடு நாம் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். சக்தி ரீ.வி. பல சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கின்றது. இந்த சாதனைகள் எமது நாட்டுக்கும் குறிப்பாக இக்காலத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வழிகாட்டும் என்று நாம் நம்புகின்றோம்" என்றார்.

சக்தி பிறந்ததின நிகழ்வையோட்டி திருக்கேதீஸ்வர ஆலயத்திலும் விசேட பூஜைகள் நடைபெற்றன. இங்கு கருத்து வெளியிட்ட ஆலய நிர்வாகச் செயலாளர் புலவர் அ.திருநாவுக்கரசு, "சக்தி தொலைக்காட்சி பல்வேறு துறைகளிலும் மிகச்சிறப்பாக பணியாற்றுவதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றோம். சக்தியின் நிகழ்ச்சிகள் தொடர்ந்து பல்லாண்டு காலம் நிறைவாக நடைபெறவேண்டும்." என்றார்.

மருதமடு தேவாலயத்திலும் விசேட நன்றித் திருப்பலி ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் அருட்திரு சத்யராஜ் அடிகளார் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார். "இன்றைய நாளிலே சக்தி ரீ.வியினர் தம்முடைய பணியின் 6 வருடங்களைப்பூர்த்திசெய்து 7ஆவது அகவைக்குள்ளே நுழைகின்றார்கள். செய்தஎல்லா நன்மைகளுக்காக ஆண்டவருடைய இந்த திருப்பலியிலே இவர்கள் நன்றி சொல்லுகிறார்கள். அன்னை மருதமடுத் தாயினுடைய பரிந்து பேசுதலை அரவணைப்பை இந்த திருப்பலியிலே மன்றாடி நிற்கிறார்கள்.



இவர்களுக்காகவும், இவர்களுடைய பணிக்காகவும், இவர்களுடைய நிறுவனத்திற்காகவும் இன்றைய திருப்பலியிலே சிறப்பாக மன்றாடிக்கொள்வோம். இவர்களுடைய பணி இலங்கைத் தீவு பூராகவும் நடைபெறவும், மக்கள் நல்ல பயனைப் பெற்றுக் கொள்ளவும் தேவையான அருளை இவர்களுக்காக இந்த திருப்பலியில் தொடர்ந்து மன்றாடுவோமாக" என்றார்.

கொழும்பு 2 இல் அமைந்துள்ள தெவட்டகாஹ பள்ளிவாசலிலும் விசேடது.ஆ பிரார்த்தனை இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான பஷீர் சேகுதாவூத் தெரிவிக்கையில், "சக்தி ரீ.வி நிறுவனத்தினால் வழங்கப்படும் நிகழ்ச்சிகளில் [illegible]டோ, மொழி வேறுபாடோ, இனவேறுபாடோ கிடையாது. ஒரு ஊடகத்திற்கு மனிதர்கள் மாத்திரம் முக்கியம் எனற அடிப்படையில் பொதுவான செயற்பாட்டில் இந்த நாட்டிலே ஒரு முன்மாதிரியான நிறுவனமாக சக்தி ரீ.வி செயல்படுவதை முன்னிட்டு நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.


எந்த விதமான பாகுபாடும் இன்றி செய்திகளைத் தருவது இந்த நாட்டுமக்களுக்கு ஒரு முக்கிய வரப்பிரசாதம் என்று நாங்கள் நம்புகிறோம்" என்றார்.

கொழும்பு மாநகரசபை பிரதிமேயர் அசாத் சாலி தெரிவிக்கையில் "சக்தி ரீ.வி பிரபல்யம் அடைந்ததற்கு அவர்கள் மக்கள் மனதைக் கவர்ந்ததே காரணம். இன்று அக்ஷன் ரீ.வி மூலமாக நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள குறைபாடுகள் காண்பிக்கப்படுகின்றன" என்றார்.

தெவட்டகஹா பள்ளிவாசல் ஆலிம் தெரிவிக்கையில் "சக்தி ஊடக நிறுவனத்தினர் இந்த நாட்டிலே பெரிய சேவைகள் செய்து 6 ஆண்டுகள் பூர்த்தியாகும் இந்தத் தறுவாயிலே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெவட்டகஹா பள்ளிவாசலிலே நிகழ்வுகளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். அவர்கள் செய்கின்ற நல்ல சேவை மக்கள் உள்ளத்தை தொடக்கூடிய சேவையாக அமைந்திருப்பதை நாம் எல்லோரும் அறிந்து வைத்துள்ளோம்" என்றார்.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலும் சக்தி ரீ.விக்கு நல்லாசி வேண்டி விசேட பூஜை நடைபெற்றது. மாமாங்கேஸ்வரர் ஆலயக்குருக்கள் "இன்றைய தினத்திலே சக்தி நிறுவனத்தினர் பிறந்தநாள் கொண்டாடும் நேரத்திலே அவர்களுடைய சேவை பெரும் பலன் அளித்து வருகிறது" என்றார் .

கொழும்பு கங்காராம விகாரையிலும் விசேட பூஜை வழிபாடுகளும் நடத்தப்பட்டன. இங்கு கருத்து வெளியிட்ட விகாராதிபதி சிரச, சக்தி 'எம்.ரீ.வி.என்பன 6 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளன. சிரச, சக்தி, எம்.ரீ.வி ஊடகங்கள் மிகவும் சுதந்திரமான முறையில் செயற்பட்டு இலங்கையின் அனைத்து மக்களினதும் கௌரவத்தையும் மதிப்பையும் பெற்றுள்ளன" என்றார்.



ஆனைப்பந்தி பிள்ளையார் கோவிலிலும்' திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்திலும் விசேட பூஜைகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செட்டிப்பாளையம் மகாவித்தியாலத்தில் மரம் நடுகை வைபவம் ஒன்றும் நடத்தப்பட்டது.

பல்வேறு நிகழ்ச்சிகளால் மக்களின் உணர்வுகளை வெளிக்கொண்டுவரும் சக்தி தொலைக்காட்சி ஊடகம் தொடர்ந்தும் தனது பணிகளை சிறப்பாகச் செய்யத் தனது வெற்றிப்பயணத்தில் வீறுநடை போடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறார்களின் கைவண்ணம்


சி.சிவப்பிரியா, தரம் – 4
யா/ஆவரங்கால் நடராஜா, இராமலிங்க வித்தியாலயம்.


ச.சாருணி
கிளி திருவையாறு, ம.வி.


ச.நவகீர்த்தன், தரம் – 4
யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி.


பா.தனுஜா, தரம் – 8,
யா/செம்பியன்பற்று
அ.த.க.பாடசாலை.


அபிராமி
கொழும்பு – 13.

## படம் சொல்லும் பழமொழி – 11

01


02


03


04


அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடையை நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். ஒக். 10 ஆம் திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடைகள் வருமாறு.

1. சூரியனைக் கண்ட தாமரை போல
2. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்
3. வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்
4. எரிகின்ற நெருப்பில் எண்ணை ஊற்றுவதுபோல்

சரியான விடையை அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:

1இ.கணேசன். 91/13B மிட்லண்ட் மாவத்தை, கல்கிசை 2.உதயகுமார் விபுசனா, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுரை. 3.ம.மணிமாறன், நாரந்தனை வடக்கு, ஊகாவற்றுரை 4. வேலாயுதம் கலா, நாரந்தனை வடக்கு, தம்பாட்டி. 5.சி.சயந்தன், தரம் 6, வட்டக்கச்சி, மகா வித்தியாலயம்.

அனுப்பவேண்டிய முகவரி: *'படங்கள் சொல்லும் பழமொழி',*
*சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## ஒற்றுமை

கோயில் கோபுரத்தில் சில நீல நிறப்புறாக்களும், சில வெள்ளை நிறப் புறாக்களும் அடைக்கலமாகி இருந்து வந்தன. கோபுரத்தில் கும்பாபிஷேக வேலைகள் தொடங்க ஆரம்பித்ததால் இது நாள் வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இருவகைப் புறாக் கூட்டமும் இப்போது ஒன்று கூடி வேறொரு இடம் தேடிப்புறப்பட்டன.

செல்லும் வழியில் ஓரிடத்தில் வெயிலில் உலாத்துவதற்காகப் பரப்பப்பட்ட தானியங்களைக் கண்டதும் அனைத்தும் ஒன்று கூடித் தானியங்களை தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன.



தானியத்தை உலர்த்தும் பொருட்டு பரப்பிவிட்டுச் சென்ற வேடன் தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப்போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதைப் பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான்.

நாளைக்கு இந்தப் புறாக்களை எப்படியும் வலை விரித்துப் பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் தயார் செய்து வலை விரித்தான்.

அடுத்த நாள் அருகே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. அந்நேரம் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்றுத் தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் எல்லாம் ஒன்றாக இறக்கையை விரித்து வலையோடு பறக்க ஆரம்பித்தன.

உடனே வேடன், ''அய்யய்யோ... புறாக்கள் போனாலும் பரவாயில்லை. நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே....'' என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான்.

பறந்து செல்லும் போதே, அதில் இருந்த வெள்ளைப் புறாக்கள் கர்வத்தோடு, ''எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிகவேகமாக அடித்துப் பறக்கவில்லை என்றால்.... அவ்வளவுதான்'' என்று கூறின. உடனே நீல நிறப்புறாக்களும் தன் பங்குக்கு, ''நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது'' என்று கூறிக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே பறந்ததினால், பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து, ஒரு மரக் கிளையில் வலை சிக்கிக் கொண்டது.

இதனைப் பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கேற்ப இப்புறாக்கள் தப்பி விடுமோ என்று பயந்தேன். நல்லவேளையாக ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு' என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி'' என்று புறாக்களைப் பார்த்துக் கூறிக் கொண்டே அவைகளைத் தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்

## விடுகதைகளும் விடைகளும்

1.மாடமாளிகையில் வசிப்பதால் ராணி அல்ல, கூடகோபுரத்தில் இருப்பதால் – கடவுள் அல்ல, அவள் யார்?
2.எறினால் வழுக்கும், குருத்தும் சுருண்டிருக்கும், காய் உண்டால் துவர்க்கும், பழம் என்றால் இனிக்கும் அது என்ன?
3.வாய் இல்லை செய்தி சொல்வான். ஊர்விட்டு ஊர் செல்வான் அவன் யார்?
4.வட்டமுகம் உண்டு வாய் திறந்து பேசாது, காட்டக் கை உண்டு காலூன்றி நடக்காது?
5.பொட்டுப்போல இலை இருக்கும், பொரிப்போல பூ பூக்கும், சாப்பிடக்காய் கொடுக்கும், தின்னாத பழம் பழுக்கும் அது என்ன?

*நே.சுவேந்திரா, தரம் – 9*
*மு/ஓ. மகா. வித்தியாலயம்.*

விடைகள்
1.தேங்காய்
2.வாழை
3.கடிதம்
4.மணிக்கூடு
5.முருங்கைக்காய்.

## விஞ்ஞானத் துளிகள் சில

மனித குருதியின் உயர்குருதி அமுக்கம் யாது?
120 mm Hg - 1
செம்மண்ணில் உள்ள இரசாயனப் பொருள் யாது?
கலமின்
ஒலியின் வேகம் யாது?
335 ms - 1
ஒளியின் வேகம் யாது?
$3 \times 10^8$ ms - 1
பீற்றூட் கிழங்கின் நிறத்திற்குக் காரணமான நிறப்பொருள் யாது?
அந்தோசயனின்
அப்பிள் பழத்தில் உள்ள இரசாயனப் பொருள் யாது?
மேலனின்
சோடா அமிலத் தீயணைகருவியில் உள்ள மூலகம் எது?
சோடியம் இருகாபனேற்று
வானில் அனுப்பப்படும் பலூன்களில் உள்ள வாயுக்கள் எவை?
கீலியம் ஐதரசன்

*இ.சந்தீபன், தரம் 9*
*மூ/விசுவமடு மகா வித்தியாலயம்.*

## அறிந்து கொள்ளுங்கள்

1.நவீன விண்வெளி யுகத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
சியோல் கோவ்ஸ்கி
2.இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
ராகேஸ் சர்மா
3.''சீ ஒப் நெக்டோ'' என்பது என்ன?
நிலவில் உள்ள ஓர் இடம்
4.பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம் எது?
பிராட்சிமா
5.சந்திரனில் முதல் முதல் இறங்கிய கலம் எது?
லூனா – 01

*எஸ்.வி.சுதர்ஷன், தரம் 5*
*கிளி, தருமபுரம்.ம.வி.*

## ஆராய்ச்சி நிலையங்கள்

* இறப்பர் ஆராய்ச்சி நிலையம்?
அகலவத்தை
* தேயிலை ஆராய்ச்சி நிலையம்?
தவலவாக்கலை
*தெங்கு ஆராய்ச்சி நிலையம்?
லுணுவில
*பருத்தி ஆராய்ச்சி நிலையம்?
அம்பாந்தோட்டை
*சோயா அவரை ஆராய்ச்சி நிலையம்?
கன்னறுவா
* பண்ணை எந்திர ஆராய்ச்சி நிலையம்?
மகாஇலுப்பள்ளம்
*ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம்?
நாவின்ன

*ந.கலைவாணி, ஒதுமடு.*
*நாவின்ன*

## பொது அறிவு

1. ஆஸ்திரேலிய நாட்டின் தேசியப் பறவை?
ஈமு
2. வானளாவிய மாளிகை நகரம் ?
நியூயோர்க்
3. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு?
பின்லாந்து
4. பிரான்ஸ் நாட்டின் தேசிய சின்னம்?
லில்லி மலர்
5. ரயில்களே இல்லாத நாடு?
ஆப்கானிஸ்தான்
6. உலகில் மிக உயரமான நாடு?
திபெத்

*சௌ.சுகிதா, தரம் 10*
*கிளி/பூநகரி ம.வி.*

## வினா விடை

1. மிகப்பெரிய பாலூட்டி எது?
திமிங்கலம்
2. விஷமில்லாத பாம்பு எது?
மலைப்பாம்பு
3. இலங்கையின் தேசிய மலர் யாது?
அல்லி
5. இலங்கையின் மிகப் பெரிய மலை எது?
பேதுருதாலகாலமலை

*த.டினோஜா, ஆண்டு 3*
*கிளி/தர்மபுரம், அ/த/க/பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகமான சுமைகள்

துள்ளித்திரியும் பருவம் என்று இப்போதுள்ள பாடசாலை நாட்களைக் குறிப்பிட முடியாது. ஏனெனில் அவர்கள் துள்ளித்திரியும் வாய்ப்பு இப்போதெல்லாம் மிகக் குறைவே! இப்போதுள்ள பாடசாலைச் சிறுவர், சிறுமியர்களை சுமை தூக்கும் பருவத்தினர் என்று தான் சொல்ல வேண்டும்.

நிபுணர்களின் கருத்துப்படி, ஒரு சிறுவனின் சுமை அவனது எடையில் 15 சதவீதத்துக்கே இருக்க வேண்டும். ஆனால், தற்போது 30 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையுள்ள எடையை சிறுவர்–சிறுமியர் சுமக்கிறார்கள். அதாவது 30 கிலோ எடையுள்ளவர் 4 கிலோ தூக்கலாம். ஆனால், இப்போது அவர்கள் 9முதல் 18 கிலோ எடை வரை தூக்குகிறார்கள்.

அளவுக்கு அதிகமான எடையைக் குழந்தைகள் தூக்கும் போது, அவர்களது முதுகெலும் பின் இயல்பான வளைவுத் தன்மைக்கு பாதிப்பு ஏற்படும்.அதன் மூலம் கழுத்துத் தசைகள்,எலும்புகள்,தோல்பகுதி போன்றவைகளுக்கு நெருக்கடி ஏற்படுகிறது. இதனால் முதுகுவலி மட்டுமன்றி, கழுத்துத் தசைகளுக்கு ஏற்படும் அழுத்தம் மூலம் தலை வலி, கழுத்து வலி, கைவலி போன்றவை ஏற்படும். அதிக பாரம் முதுகில் ஏறும் போது முன்னோக்கித் தள்ளப்படும் நிலை தோன்றும். அதனால் கீழே விழும் சூழலும் அதிகரிக்கும்.

முதுகுவலி அதிக நாட்கள் தொடர்ச்சியாகஇருத்தல், காய்ச்சல் ஏற்படுதல், எடை குறைதல், நடப்பதற்குச் சிரமமாக இருத்தல், கால்களின் உட்பகுதியில் வலி, சிறுநீர் கழிக்கவோ, மலம் கழிக்கவோ சிரமம் ஏற்படுதல் போன்றவை இருந்தால் அதனை அலட்சியப்படுத்தாமல் வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை பெறுங்கள்.

புத்தகப் பை வாங்கச் செல்லும்போது பெற்றோர்கள், பைகளைப் பயன்படுத்தும் குழந்தைகளையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும். தேவைப்படும் புத்தகங்கள், பொருட்கள் மட்டும் பைக்குள் வைக்கும்படி பெற்றோர்கள் குழந்தைகளை வற்புறுத்த வேண்டும். வாரத்துக்கு ஒரு முறை குழந்தைகளின் பைகளைப் பார்த்து தேவை இல்லாதவைகளை வெளியேற்றச் செய்வது நல்லது. குழந்தைகள் முதுகுவலிக்கிறது என்றால், அதை அலட்சியம் செய்துவிடாமல் தீர்வு காண பெற்றோர் முன்வரவேண்டும்.

****

# பிள்ளைகளை வழிநடத்துவதில் பெற்றோரின் பங்கு என்ன?

( கடந்த வாரத் தொடர்ச்சி)

பொதுவாக வைத்தியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் போன்ற எல்லோரையும் விட பருவ வயதுப்பிள்ளைகளை வழிநடத்துவதில் பெற்றோரின் பங்கு தான் மிக முக்கியமானது என்று கூறப்படுகிறது.எனவே, கீழே கூறப்படும் சில அறிவுரைகளைப் பெற்றோர் பின்பற்றுவதன் மூலம் தமது பிள்ளைகளைச் சிறந்த முறையில் உருவாக்க முடியும்.

நாமும் இந்த வயதைத்தாண்டித்தான் வந்தோம் என்பது எப்போதுமே பெற்றோரின் நினைவில் இருக்க வேண்டும்.

ஆரம்பம் முதல் அதாவது சிறு குழந்தையாய் இருக்கும்போதிருந்தே தினமும் குறிப்பிட்ட நேரம் குழந்தைகளுடன் செலவழிக்க வேண்டும் என்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது தான் இயல்பாக உங்களால் அவர்களைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்.



பிள்ளைகளை மற்றவர்கள் முன்னிலையில் எக்காரணம் கொண்டும் மட்டம் தட்டியோ அல்லது அவமானப்படுத்தியோ பேசாதீர்கள்.அழகு பற்றிய வலிமையான எண்ணங்களைப் பிள்ளைகளிடம் உருவாக்காதீர்கள்.

குழந்தைகளிடம் நேர்மையாக இருங்கள். பேசுவது ஒன்றும் செயல் வேறாகவும் இருக்கும் பெற்றோர் மீது குழந்தைகளுக்கு மரியாதை ஏற்படுவதில்லை.

பாடசாலை ஆசிரியரிடம் எப்போதும் தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்.மகளைப் பற்றி அவரிடம் அடிக்கடி விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.அவள் படிப்பு, விளையாட்டு மட்டுமன்றி அவளது நடவடிக்கைகள் பற்றியும் அறிய வேண்டியது அவசியம்.உங்கள் பிள்ளைகள் பற்றி ஆசிரியர்கள் ஏதேனும் புகாராகச் சொன்னால், உடனே மறுத்துப் பேசாமல் காது கொடுத்துக் கேளுங்கள்.

குழந்தையிடம்சகிப்புத்தன்மையை வளருங்கள்.

மகளைச் சந்தேகப்படாதீர்கள். அதேநேரம்,ஒரேயடியாக நம்பிக்கையும் வைத்துவிடாதீர்கள்.எல்லாமே அளவாக இருக்கட்டும்.

நண்பர்கள்,நண்பிகளை வீட்டுக்கு அழைத்து வரச் செய்யுங்கள். தனியறைக்குள் போகாமல் ஹோலில் இருந்து பேசச் சொல்லுங்கள்.

பிள்ளைகளின் நண்பர்களோடு நட்பை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் பற்றி நல்லது, கெட்டது தெரிய வரும்.

தொலைபேசியிலோ,இன்டர்நெட்டிலோ மகள் மணிக்கணக்கில் உட்கார்ந்திருந்தால் அருகில் சென்று அவளுக்குச் சந்தேகம் வராதவாறு கவனியுங்கள்.மகள் எதிரில் இருந்து உங்கள் கணவனை மட்டம் தட்டிப் பேசாதீர்கள்.சண்டை போடாதீர்கள்.கணவன், மனைவிக்குள் புரிந்துகொள்ளாமை இருக்கும்போது, அது குழந்தையை வெகு சுலபமாகப் பாதிக்கிறது.

எப்போதும் அவளை உற்சாகப்படுத்துங்கள்.போட்டி நிறைந்த உலகில் இருக்கிறோம் என்பதைப்புரிய வையுங்கள்.

திடீரென்று வீட்டுக்குத் தாமதமாக வருவது,புதுப்புதுப் பொய்கள் சொல்வது, எப்போதும் சந்தோசமாகவே இருக்கும் பிள்ளை திடீரென்று ஒதுங்கிப்போவது, காரணமே இல்லாமல் திடீரென்று மதிப்பெண்கள் குறைவது போன்றவை இருந்தால், அது மகள் மீது அதிக கவனம் எடுக்க வேண்டிய நேரம் என்பதை உணருங்கள்.அவள் ஏதோ பிரச்சினையில் இருக்கிறாள் என்பதை உணருங்கள்.

எதிர்ப்பாலாரோடு எந்த எல்லை வரை பழகலாம்,எவை தவிர்க்கப்படவேண்டியவை என்பது பற்றி அவளிடம் தெளிவாகப் பேசுங்கள்.

எதற்கெடுத்தாலும் குழந்தைகளைக் கண்டிக்காதீர்கள். குழந்தைகள் பயந்து பயந்து வளர்ந்தால் மிகச் சுலபமாக வெளி இடத்தில் கிடைக்கின்ற அன்பில் மனதைப் பறிகொடுத்து விடுவார்கள்.

எமக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை. குழந்தையாவது சந்தோஷமாக இருக்கட்டும் என்று அவள் எது கேட்டாலும் உடனே வாங்கிக் கொடுத்து விடாதீர்கள். ஏமாற்றமோ, தோல்வியோ என்னவென்றே தெரியாமல் வளரும்குழந்தைகள்,பின்பு சிறுதோல்வியைக் கூடத் தாங்க முடியாமல் மனம் உடைந்து தற்கொலை போன்ற விபரீத முடிவுகளுக்குப் போய்விடுவார்கள்.பெற்ற குழந்தைகளுக்கிடையே பாகுபாடு காட்டாதீர்கள்.

தனிமையில் அவளை விடாதீர்கள். நெருங்கிச் சென்று நீங்களாகவே எதையாவது பேசுங்கள். உங்களது அருகாமையே அவளுக்கு ஆறுதலையும், அரவணைப்பையும் கொடுக்கும் அருமருந்தாக மாறும்.



## இவ்வார பொன்மொழி

*அச்சத்தை வெல்வதற்கு சிறந்த வழிகளில் ஒன்று நீ எதைக் கண்டு அஞ்சுகிறாயோ அதைத் துணிவோடு எதிர்கொள்வது தான்.*




# கண்ணுக்கு மை அழகு...?

எமது முகத்திலேயே வசீகரமான பகுதி என்றால் அது கண்கள் தான். அந்தக் கண்களின் அழகை மேலும் மெருகூட்டவே பெண்கள் கண்மை இடுவது வழக்கமாக இருந்து வருகிறது. அதாவது, சிறிய கண்ணைப் பெரிதாகக் காட்டவும்,பெரிதாக இருக்கும் கண்களை இன்னும் அழகாகக் காட்டவும் கண் மை உதவுகிறது என்ற உண்மையை அறிந்து தான் எம் பெண்கள் பலநூறு ஆண்டுகளாக அதைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் போலும். இந்தக் கண்மை தான் வளர்ச்சியடைந்து காஜல்(குச்சி வடிவில் வரும் நவீன கண் மை),ஐ லைனர், போன்ற வகைகளில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

ஐ லைனரில் இரண்டு வகையுண்டு. ஐ லைனர்கள் திரவ வடிவிலும், பென்சில் வடிவிலும் கிடைக்கின்றன. அதில் திரவ வடிவில் கிடைக்கும் லைனர்களை, போத்தலுடன் வரும் மெல்லிய தூரிகையால் இடலாம். சமீபத்தில், தூரிகைக்குப் பதிலாக பேனா முனை போன்ற கூரிய முனை கொண்ட PEN TIP லைனர்கள் வந்துள்ளன. தூரிகையுடன் வரக்கூடிய லைனரில் தூரிகை மெலிதாக– ஒரே சீராக இல்லாவிட்டால், லைனர் இடும்போது, அது கண்களின் மேல் பட்டு மொத்த மேக்–அப்பைக் கெடுத்துவிடும்.

லைனர்களில் பல நிறங்கள் வருகின்றன.கறுப்பு, சாம்பல் நிறம், நீல நிறம் என்று பல வண்ணங்களில் லைனர் வருகிறது.

கறுப்பு, அடர் நிறமண் நிறம் போன்ற நிறங்கள் இரவு நேரங்களுக்கு நன்றாக இருக்கும்.பகல் நேரத்துக்குச் சாம்பல் நிறம்,மெல்லிய மண் நிறம் போன்றவை எடுப்பாக இருக்கும்.பூனைக்கண் இருப்பவர்கள் கறுப்பு நிறத்தைத் தவிர்த்துவிட்டு மண் கலரைப் பயன்படுத்தலாம்.

லைனரை முறைப்படி போடத் தெரிந்து பழக்கப்பட்டவர்கள், அதைக் கண்ணின் உள் முனையிலிருந்து வெளி முனை வரை சீராக இட்டுக்கொள்ளலாம். பழக்கப்படாதவர்கள் கண்ணின் நடுப்பகுதி தொடங்கி வெளிமுனை வரைந்து பின்பு உள் முனையிலிருந்து நடுப்பகுதிக்கு என்று வரையலாம். இதையும் கண் இமை ஒட்டியது போல் சீராக வரைய வேண்டும். வலது கையால் லைனரை இடும்போது, இடது கையின் உதவியால் இமையின் சுருக்கமான தோலை சற்றே சுருக்கம் நீங்க இழுத்துவிட்டால் லைனர் இடச் சுலபமாக இருக்கும். லைனரும் சீராகப் படியும்.

பெரிய கண் உடையவர்கள் மெல்லிய கோடாக லைனர் இட்டுக் கொள்ள வேண்டும்.சற்றே கீழ்ப்புறமாகத் தொங்கியது போன்ற கண் அமைப்புக் கொண்டவர்கள், வெளி முனையில் லைனரைச் சற்றே மேல் நோக்கி இழுத்துவிட்டு வரையலாம்.

சிறிய கண் அமைப்புக் கொண்டவர்கள் மேல்புறம், மெல்லிய கோடாக லைனரை இட்டுக்கொள்ளுங்கள்.

பெரிய கண் அமைப்பு மற்றும் சற்றே வெளியே தெரிந்தால் போல்இருக்கும் கண் அமைப்புக்கொண்டவர்கள் கீழ்ப்புறத்துக்கு லைனர் இட வேண்டாம். தேவையெனின் கண்ணின் உட்புறத்துக்கு மட்டும் இவர்கள் கண் மை இட்டுக்கொள்ளலாம்.

திரவ வடிவில் இருக்கும் லைனரை இட்டபின் கண்களைச் சில நிமிடங்களுக்கு மூடி வைத்திருந்தால் தான் அது நன்றாக உலரும். அது உலர்வதற்கு முன்னரே நாம் கண்களைத் திறந்துவிட்டால் அது இமை மேல் அப்பிவிடும்.

கண் மை இடும்போது தவறி இமை மேல் பட்டுவிட்டால் காது குடையும் குச்சி ஒன்றை எடுத்து பஞ்சை இலேசாக தண்ணீரில் நனைத்துப் பிழிந்து, மை படிந்த பகுதியில் மட்டும் சற்றே அழுத்தம் கொடுத்துத் துடைத்து எடுங்கள். பின்பு உலர்ந்த காது குடையும் குச்சியால் அந்த இடத்தை மீண்டும் துடைத்துவிட, கறுப்புக் கறை மறைந்துபோய்விடும்.

****

## சமையல் குறிப்பு

### டொமாட்டோ சூப்

| | |
|---|---|
| பழுத்த தக்காளி | – 250கிராம். |
| கரட் | – 50கிராம். |
| முட்டைக்கோஸ் | – 50கிராம். |
| பிரியாணி இலை | –1 |
| பெரிய வெங்காயம் | – 1 |
| பூண்டு | – 1 |
| கராம்பு | –1 |
| உப்பு, மிளகுதூள் | –தேவையான அளவு. |
| கோதுமை மா | – 30கிராம். |
| எண்ணெய் | –2 தேக்கரண்டி. |
| துருவிய சீஸ் | – 2 தேக்கரண்டி. |
| கொத்தமல்லித்தழை | –தேவையான அளவு. |



*செய்முறை*

வெங்காயம், பூண்டு,கரட், முட்டைக்கோஸ், தக்காளி போன்றவற்றை நறுக்கி வையுங்கள். சமையல் பாத்திரத்தில் எண்ணெய் விட்டு– கொதித்ததும், பிரியாணி இலை கராம்பு போட்டு வதக்கி, அத்துடன் காய்கறி, தக்காளியையும் போடவும். மூன்று நிமிடம் வதங்கியதும் உப்புப் போட்டு கோதுமை மாவைத் தூவிக்கிளறுங்கள். பின்பு தண்ணீர் விட்டுக் கிளறி, தணலைக் குறைத்து 15 நிமிடம் வேக வைத்து இறக்குங்கள்.ஆறியதும் மிக்ஸியில் போட்டு அரைத்து எடுத்து வடிகட்டினால் சுவையான சூப் ரெடி. பரிமாறும்போது அதன் மேலாக வெண்ணெய்,துருவிய சீஸ்,மிளகுத் தூள், கொத்தமல்லித்தளை தூவிப் பரிமாறலாம். கண்ணுக்கும் அழகு– சுவையும் சுவைதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# தொழிலாளர்களின் பணத்தை சுரண்ட தேசிய சொத்துகளை ... ஓர் அமைச்சுத் தேவையா?

தொழிலாளர்களின் பணத்தைச் சுரண்டவும்,அரச உடைமைகளை அமுக்கிக் கொள்ளவும் தனியான ஓர் அமைச்சுத் தேவையா? அது தான் இன்று மலையகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் எதிரொலிக்கும் கேள்வியாகிவிட்டது.

தோட்ட உட்கட்டமைப்பு, வீடமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சராக முத்து சிவலிங்கம் நியமிக்கப்பட்டு விட்டார் என்ற செய்தி கிடைத்தவுடன் பெருமிதம் கொண்டவர்கள் தோட்டத்தொழிலாளர்கள்.

'எங்களுடைய பிரதிநிதி ஒருவர் அமைச்சராகிவிட்டார். எங்களுக்கு வீடு கட்ட காணிகளைப் பெற்றுத் தருவார், வீடமைப்புக்கடன்களைப் பெற்றுத் தருவார்' என நம்பினர்.எதிர்பார்ப்புக்களுடன் காத்திருந்தனர்.

ஆனால்,அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் அதிரடி நடவடிக்கைகள், பல ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களின் தலையில் இடியாக இறங்கி உள்ளன.

2001ஆம் ஆண்டில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசை ஜனாதிபதி திடீரெனக் கலைத்துவிட்டபோது, தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமான், ஆட்சி கலைக்கப்பட்ட சூட்டோடு ஐ.தே.க.வின் பக்கம் பல்டி அடித்துவிட்டார்.

இந்தச்சந்தர்ப்பத்தில், ஆறுமுகன் தொண்டமானின் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அப்பணம் எவ்வழியிலாவது தோட்டத் தொழிலாளர்களுக்கே செலவிடப்பட வேண்டும்,வீடமைப்புக்கு ஒதுக்கப்பட்ட பணம் அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்பதால் அப்போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.சதாசிவத்தை மேற்படி அமைச்சுக்கான தனது ஆலோசகராக நியமித்தார் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார்.

இதனைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட சதாசிவம் பல ஆயிரம் கூரைத்தகடுகளையும், வீடு கட்டுவதற்கான உபகரணங்களையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கினார்.

அத்தோடு நின்றுவிடவில்லை. 4250 தோட்டத் தொழிலாளர்களுக்கு தலா முப்பதாயிரம் ரூபா வீதம் 12கோடி ஐம்பது லட்சம் ரூபாவை வழங்கினார்.

இப்பணத்தை வங்கிகளில் போட்டு அதற்கான வங்கிக்கணக்கு பாஸ் புத்தகங்களையும் தொழிலாளர்களிடமே ஒப்படைத்தார். அங்கே ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது. அதாவது, இந்தப்பணம் வீடமைப்புக்காக மட்டுமே செலவிடப்பட வேண்டும். அதுவும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளரின் சிபார்சு இல்லாவிட்டால் அதனைப் பெறவும் முடியாது என்பதே அந்த நிபந்தனை.

சதாசிவம் தனது அரசியல் இலாபம் கருதியும், தேர்தல் பிரசாரத்துக்காகவும் இதைச் செய்தார் என்று வேண்டாதவர்கள் விசமத்தனமான பிரசாரம் செய்தனர்.

இப்பணத்தை சதாசிவம் வீட்டுக்கு கொண்டு போகவில்லை. அல்லது தனது குடும்பத்தினரின் பெயரில் வைப்பிலிடவில்லை. தொழிலாளர்களின் பெயரிலேயே போட்டுள்ளார்.ஆனால், இப்பணம் ஐந்து வருடங்களாக தீண்டுவாரற்றுக்கிடந்தது.

ஆட்சி மாற்றமும், அமைச்சு மாற்றமும் ஏற்பட்ட போது அமைச்சர் சி.பி. ரத்னாயக்காவின் பணிப்பின் பேரில் தொழிலாளர்களுக்கு காணிகளை வழங்கவும், வங்கியில் தேங்கிக் கிடக்கும் அப் பணத்தை அந்தத் தொழிலாளர்களுக்கே பெற்றுக்கொடுக்கவும் அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரதாப் இராமானுஜம் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஆனால், ஐ.தே.க.பக்கமிருந்து இ.தொ.கா. மீண்டும் ஜனாதிபதியின் பக்கம் பல்டி அடித்ததால் தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு அமைச்சும் தட்டிப் பறிக்கப்பட்டது.

இதனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியும் இல்லை,கிடைக்கவிருந்த பணமும் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் முத்துசிவலிங்கம் அமைச்சரானார். தொழிலாளர்களின் மத்தியில் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

அமைச்சர் சிவ லிங்கம் நிச்சயமாக எமக்குக் காணிகளைப் பெற்றுத்தருவார், எமது பணம் எமக்கே கிடைக்கும் என்று தோட்டத் தொழிலாளர்கள் இறுமாப்படைந்தனர்.

ஆனால், நடந்தது என்ன? தொழிலாளர்களின் கணக்கில் உள்ள 12கோடியே 50 லட்சம் ரூபாவையும் தமது அமைச்சுக்கு மாற்றம் செய்ய வேண்டும் என அமைச்சரவைக்கு விண்ணப்பம் செய்கிறார். தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய அமைச்சர் தொழிலாளர்களின் அடி வயிற்றிலேயே கை வைத்துவிட்டார். இது தான் பெரிய வேதனை.

இரண்டாவதாக அவர் செய்த பெரிய காரியம் என்ன தெரியுமா?

தோட்ட வீடமைப்பு,தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என்பவற்றுக்கு வழங்கப்பட்ட நிதியில் கட்டப்பட்ட கலாசார மண்டபங்கள்,கேட்போர் கூடங்கள், பார்வையாளர் அரங்குகள் எல்லாவற்றையும் இ.தொ.கா.முன்னாள் தலைவர்சௌமிய மூர்த்தி தொண்டமானின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொண்டமான் ஞாபகார்த்த நிறுவனத்தின் சொத்துகளாகவும்,உடைமைகளாகவும் மாற்றி அமைக்க வேண்டும் என அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்தார்.

'உங்களுடைய பெயரில், உங்கள் தலைவரின் பெயரில் எத்தனை பவுண்டேசன்களையும் தாராளமாக அமைத்துக்கொள்ளுங்கள்.ஆனால்,அரசாங்க நிதியில் அமைக்கப்பட்ட தேசியச் சொத்துகளை தனி ஒரு நபரின் சொத்தாக மாற்ற இடம் கொடுக்க மாட்டோம்'என மூத்த அமைச்சர்கள் மூவர் போர்க்கொடி தூக்கி மூக்கை அறுத்துவிட்டனர்.

இதற்காகவா இவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினோம். தொழிலாளர்களுக்கு வேலை செய்கிறோம் என்று கூறிக்கொண்டு தொழிலாளர்களின் பணத்தைத் தட்டிப் பறிக்கவும், அரச சொத்துக்களை அமுக்கிக் கொள்ளவுமா இவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினோம். இந்த வேலைகளுக்கு ஓர் அமைச்சுத் தேவையா? இதற்குக் காலம் தான் விடை சொல்ல வேண்டும்.

சராகோகுலன்

---



# டேஸ்ட் கடை தணிகாசலம்

''யார் குத்தினால் என்ன, அரிசியானால் சரிதான். அது போல பானை ஓட்டையாக இருந்தாலும் சுவையான சோற்றை வடித்தால் அதுவே மேல்''.

இப்படிச் சொல்லிக்கொண்டே அப்பாவு தலைவர் தணிகாசலம் அண்ணனின் வீட்டுக்குள் நுழைந்தார்.

''என்ன தலைவரே! காலையிலேயே பெரிய பெரிய பழமொழிகளை எல்லாம் சொல்லிக் கொண்டே வாறீங்க.'' என வரவேற்றார் தணி அண்ணன்.

''வணக்கம் அண்ணே! நல்ல வேளை வீட்டிலேயே இருக்கீங்க. இல்லேன்னா மன்றத்துக்கு இல்ல தேடி வந்திருக்கனும்''

''உண்மை தான் தலைவரே! இப்ப கொஞ்ச நாளாகவே ஒரே அலைச்சல் தான். இந்தப் பாவிப்பசங்க நம்ப புள்ளைகளை எல்லாம் ஏமாத்திப்புட்டானுங்க. அம்மா நியமனம் கொடுக்க இருந்த நேரம் பார்த்து உள்ளுக்குப்புகுந்து தலை எழுத்தையே மாத்திப்புட்டாங்க. இவுங்க நல்லா இருப்பாங்களா?'' எனக் குமுறினார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே! அழுத பிள்ளை தான் பால் குடிக்கும். பரம்பரை, பெருந்தலைவர் என்பதை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு புதிய சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும்.''

''அது தான் தலைவரே! இப்ப மலையகத்தில் உள்ள படித்த இளைஞர்களை எல்லாம் ஒன்று திரட்டி ஒரு துடிப்புள்ள அமைப்பை உருவாக்கி உள்ளோம். அதற்காகத்தான் ஓடி அலைய வேண்டியதாகிப் போச்சு.''

''அதைப்பற்றிப் பேசத்தாங்க அண்ணே நானும் வந்தேன். நம்ப தோட்டப் பசங்களும் ரெடியாக இருக்காங்க. நீங்க ஒரு வார்த்தை சொன்னால் போதும். ரோட்டுக்கு இறங்கி விடுவார்கள்.''

''இந்த உணர்வு தான் தலைவரே வர வேணும். இப்ப பாருங்க. ஜே.வி.பி.யை உருவாக்கிய ரோகண விஜய வீரவும், அவரது சகாக்களும் இன்று எப்படி பலம் மிக்க சக்தியா வந்திட்டாங்க''

''இது என்னங்க அண்ணே! நம்ப தம்பி பிரபாகரனை எடுத்துக்குங்க. எந்தத்தலைவரை எந்தக் கட்சியை நம்பி இயக்கத்தை உருவாக்கினார். இன்று அகில உலகமே தலைவணங்கும் ஒரு சரித்திரம் படைத்து விட வில்லையா?''

''இப்படி எத்தனையோ வழி காட்டிகள்




இருக்கும் போது நாம் ஏன் தயங்க வேண்டும்.எமது மலையகத்துக்கு புதிய இரத்தம் பாய்ச்ச வேண்டும். அது தான் என்னுடைய இலட்சியம்.''

''அண்ணே அதைப் பத்திப் பேசவும், ஒரு முக்கியமான விடயத்தைச் சொல்லவும் தான் வந்தேன். அண்ணனோட அழைப்புக்கு மலையகத்தின் மூலை,முடுக்குகளில் இருந்து எல்லாம் ஆதரவு பெருகிவருகின்றது.''

''அதில ஒரு திருத்தம் தலைவரே! இது என்னோட அழைப்பு அல்ல. ஏமாற்றப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மலையக இளைஞர், யுவதிகளின் இதயத்துடிப்பு என்பது தான் சரி.''

''நூத்துக்கு நூறு உண்மைங்க அண்ணே. இப்ப பாருங்க. பதுளையில் இருந்து ஏதோ ஒரு சமூக மாமன்றம் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்யப் போகிறதாம்.''

''ஆமாங்க தலைவரே! எனக்குக் கூட அழைப்பு விடுத்துள்ளார்கள். கட்டாயம் போகனும்.''

''அவுங்களோட கோரிக்கைகள் முக்கியமானவை தான். போன வருசம் ஸ்ரீ பாத கல்லூரியில் நடந்த மோசடிகள்தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணை செய்த கமிசன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டது. ஆனால், இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.''

''இன்னும் ஒரு சங்கதியைப் பார்த்தீங்களா? பந்தடிக்கும் போது எதிர்பாராவிதமாகக் காக்காய் வலிப்பு வந்து ஒரு சிங்கள ஆசிரிய மாணவன் விழ, தமிழ் மாணவர்கள் அடித்துவிட்டார்கள் என்று உண்ணாவிரதம் இருந்தாங்க''

''அதை விட ஒரு முக்கிய சங்கதியும் இருக்கு தலைவரே. இப்ப 25 வீதமா உள்ள சிங்கள மாணவர்களின் தொகை 50 வீதமா அதிகரிக்க வேண்டும் என்றும் போராடுகின்றார்களாம்.''

''இதுக்கு வழி வெட்டிக்கொடுத்தது யாரு இந்தத் தொண்டமான் ஐயா தானே!

நூத்துக்கு நூறு மலையக மாணவர்களுக்கு என்றே அமைக்கப்பட்ட ஸ்ரீபாத கல்லூரியில் 25 வீதம் சிங்கள மாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கூறிவிட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டார். இப்ப ஐம்பது வீதம் கேட்கிறாங்க. ஆனால், தலைவர் வழி வந்த ...ளும் வாயை மூடிக்கொண்டு இருக்...''

''சரியாச் சொன்னீங்க தலைவரே! இப்ப எங்களுக்கு சமூகம், கல்வி வளர்ச்சி, தொழில் வாய்ப்பு எதுவுமே அவசியம் இல்லை. நம்பளைக் காட்டிக்கொடுத்து ஒரு அமைச்சர் பதவி வாங்கிக்கிட்டாங்க. இப்ப அது பத்தாது. இன்னும் ஒன்னு வேணுமென அம்மாக்கிட்ட காவடி எடுத்துக்கிட்டு அலையிறாங்க!''

''இந்த வேடதாரிகளின் முகமூடிகளை எல்லாம் கிழித்து எறிய வேண்டும்''

''அண்ணே இன்னும் ஒரு விடயத்தைப் பார்த்தீங்களா? சம்பள உயர்வு, கூட்டு ஒப்பந்தம் என்று பம்மாத்துக்காட்டி அம்போன்னு விட்டுப்புட்டாங்க''

''ஆமாம் தம்பி. இதை எல்லாம் முன் வைத்துத்தான் நவம்பர் ஐந்தாம் தேதி கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போறாங்களாம்''

''அதுவும் சரிதான். குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதால் பயன் இல்லை. வெளி உலகத்துக்கும் எமது நிலைமை தெரிய வேண்டும். அரோகரா என்பது ஆண்டவனுக்குக் கேட்டால் மட்டும் போதாது. அரசாங்கத்துக்கும் கேட்க வேண்டும். அது தான் இந்தப் போராட்டம்.''

''நாம எல்லோரும் அரசியல் கட்சி, சங்கம் என்று பேதம் பாராமல் ஐந்தாம் திகதி நடக்கிற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்'' என்று அன்புக்கட்டளையிட்டார் தணி அண்ணன்.

''அண்ணன் சொல்லிப்புட்டீங்க இல்ல. இனி ஜமாய்த்து விடுவோம்'' என்று விடை பெற்றார் தணி அண்ணன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வருடத்தின் பில்லியனர்கள்



567 பில்லியனர்கள் இந்த வருடத்தில் தோன்றியிருப்பதாக பிரபல்ய சஞ்சிகையான Forbes அறிவித்துள்ளது. தொடர்ந்தும் 10 ஆவது வருடமாக Microsoft நிறுவன அதிபர் Bill Gates தனது 46.6 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத்துடன் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார்.

இரண்டாவது இடம் இன்னொரு அமெரிக்க வர்த்தகப் பிரமுகரான Warren Buffet என்பவருக்குப் போயுள்ளது. இவரது சொத்து மதிப்பு 42.9 பில்லியன் டொலர்கள். இவர் மைக்ரோசொப்ட் நிறுவன அதிபருக்குப் பலத்த போட்டியாளராக வந்துள்ளதாக அவதானிகள் கருதுகின்றார்கள்.

மூன்றாவது இடத்தை ஜேர்மனிய சுப்பர் மார்க்கட் Aldi இன் அதிபரான Karl Albrecht தனதாக்கிக் கொண்டிருக்கிறார். சென்ற வருடத்தை விட 120 மேலதிகமான பில்லியனர்கள் இந்த வருடம் பட்டியலில் இணைந்துள்ளார்கள். Google இணையத் தேடு தள நிறுவனத்தின் உரிமையாளர்களான Larry Page, Sergey Brin ஆகிய இருவருடன் Harry Potter நாவலாசிரியை J.K.Rowling யும் புதிய பில்லியனர்களாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஒக். 31 ஆம் திகதி வெளியிடப்பட்டது.